KDK
SINCE 1909
JAPAN
CUSTOM AIR EXPERIENCE
(011) 250 0823

Follow us:
# தமிழன்
THAMILAN தமிலன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
மலர்: 05, இதழ்: 154 குரோதி வருடம், தை மாதம் 10ஆம் திகதி வியாழக்கிழமை
(23.01.2025) ஹிஜ்ரி 1446, ரஜப் - 22, 0115 886187 - விலை ரூ.40 பக்கங்கள் 12

KDK
SINCE 1909
JAPAN
CUSTOM AIR EXPERIENCE
(011) 250 0823

# பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கம்!

## அரசு நேற்று அறிவிப்பு

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதற்கான அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்படுவதாகவும் அது தொடர்பான தகவல்களை எதிர்வரும் பாராளுமன்ற அமர்வுகளில் அறிவிக்க முடியுமென்றும் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று (22) நடைபெற்ற கிளீன் ஸ்ரீலங்கா திட்டம் தொடர்பான இரண்டாம் நாள் சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பில் முன்வைத்த விடயங்களுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். » 03 பக்கம்

# ரஷ்யப் படைகளிலுள்ள இலங்கையர் கதி?

## சபையில் சிறிதரன் எம்.பி. கேள்வி



வெளிநாடுகளுக்குச் செல்ல முற்பட்டு முகவர்களால் ஏமாற்றப்பட்டு, ரஷ்ய இராணுவத்தில் பலவந்தமான முறையில் இணைக்கப்பட்டுள்ள தமிழ், சிங்கள இளைஞர்களை மீட்பதற்கு அரசாங்கம் இராஜதந்திர மட்டத்தில் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பில் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட எம்.பி. சிறிதரன் சபையில் கேள்வியெழுப்பினார். » 02 பக்கம்


# கல்முனை பிரதேச செயலக விவகாரம்

## விரைவில் இறுதி முடிவு என்கிறார் அமைச்சர் அபேரத்ன



கல்முனை வடக்கு தமிழ்ப் பிரதேச செயலக விவகாரம் தொடர்பாகக் கலந்துரையாடி இறுதி முடிவை விரைவில் பாராளுமன்றத்தில் முன்வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொது நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஏ.என்.எச். அபேரத்ன தெரிவித்தார். » 02 பக்கம்

# பொலிஸ் சிறையில் யுவதி தற்கொலை



மருதானை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பெண்ணொருவர் நேற்று (22) அதிகாலை தற்கொலை செய்து கொண்டதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

32 வயதுடைய வவுனியாவைச் சேர்ந்த இந்த யுவதி நேற்று முன்தினம் (21) மருதானை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில், நேற்று அதிகாலை 4.00 மணியளவில் பொலிஸ் நிலையத்தின் சிறைக்கூடத்தில் அவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



# மக்கள் நிலை நெருக்கடியில்!

## அரசின் உடனடி கவனம் தேவையென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து

» 02 பக்கம்

# வாய்ப்பேச்சு அரசியல் நடத்தும் அநுர அரசு

## சாடுகிறார் விமல் வீரவங்ச



நா. தினுஷா

"தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததிலிருந்து வெறும் வாய்ப்பேச்சு வீறாப்பி னூடாகவே ஆட்சி செய்து வருகிறது. ஏதாவதொன்றை அடிப்படையாகக் கொண்டு வீறாப்பு பேசி, பழைய விடயங்களை மறந்து விடுகிறார்கள். » 02 பக்கம்



# ஆய்வுக் கப்பல்களுக்கு தடை குறித்து ஆராய்வு

## விசேட குழு நியமனம்

நா. தினுஷா

» 03 பக்கம்

# கோழி இறைச்சியின் பாகங்கள் சீனாவுக்கு

» 02பக்கம்

# உள்ளூராட்சித் தேர்தல் விசேட ஒழுங்குவிதிகள்

## உயர்நீதிமன்றத்தில் நாளை விசாரணை



அரசாங்கத்தினால் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் விசேட ஒழுங்குவிதிகள் சட்டமூலத்தின் ஒருசில உறுப்புரைகள் அரசியலமைப்புக்கு முரணாகவுள்ளமையின் காரணமாக, அவற்றை அனுமதிக்க வேண்டுமெனில் பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு... » 02 பக்கம்

### கமெண்ட் கந்தர்...



கப்பல் ஆராய்ச்சி செய்து முடிக்கிறதுக்குள்ள நிறைய கப்பல் வந்து போயிடும்...

# கப்பல்களை திருப்பியனுப்பல் குறித்து விசாரணை தேவை

## சுங்க அதிகாரிகளின் சங்கம்

நா. தினுஷா

கொழும்பு துறைமுகத்துக்கு வந்த 30 கப்பல்கள் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் பாரபட்சமற்ற தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென்று தெரிவித்து சுங்க அதிகாரிகளின் சங்கம் நேற்று (22) குற்றப்புலனாய்வுத் திணைக் களத்தில் முறைப்பாடு பதிவுசெய்துள்ளது. » 03 பக்கம்

### உஷ்



தனியார் ஊடகங்கள் அரசாங்கத்தை மோசமாக விமர்சிப்பதால் ஊடகங்களுக்கு ஒழுக்க நெறியொன்றை வகுக்க தயாராகி வருகிறதாம் அரச மேலிடம்.

அடிப்படை இல்லாத விடயங்களை முன்வைத்து செய்திகளை வெளியிடும் ஊடகங்கள் கண்காணிக்கப்படவுள்ளதாகவும் தகவல்.

# "பிரதமருக்கு கற்பிக்கும் தேவை எனக்கில்லை"

## அதற்கு நேரமும் இல்லை என்கிறார் மனோ எம்.பி.



"பல ஆண்டுகளாக தமிழ் அரசியல் கைதிகள் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். அவர்களை விடுதலை செய்ய வேண்டும். அதுதான் அரசின் கிளீன் ஸ்ரீ லங்கா திட்டத்தின் வெற்றியை... » 02 பக்கம்






## பிரதமருக்கு கற்பிக்கும்...

உறுதிப்படுத்தும் என தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பியுமான மனோ கணேசன் தெரிவித்தார்.

அத்துடன் 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரித்தால் பெருந்தோட்ட மக்களின் சம்பளத்தையும் அதிகரிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் உரையாற்றுகையில்,

பாராளுமன்றத்தில் பிரதமர் ஹரிணி அமரசூரிய உரையாற்றுகையில் சாமர சம்பத் எம்.பி. குறிப்பிட்ட விடயங்களுக்கு பதிலளித்துக் கொண்டிருந்தார். அப்போது சபைக்கு தலைமை தாங்கியவரின் அனுமதியுடன், நான் பிரதமரை நோக்கி கடந்த கால அரசாங்கத்தை போல் இல்லாமல் கிளின் ஸ்ரீ லங்கா செயற்றிட்டத்தின் எண்ணக்கருவை எடுத்துரைக்குமாறு கூறினேன். இதற்கு பிரதமர் பாராளுமன்றத்தில் எவ்வாறு உரையாற்ற வேண்டும் என்று எனக்கு கற்பிக்க வேண்டாம் என்று ஆவேசமாக கூறினார். பிரதமர் வழங்கிய பதில் முறையற்றது. பிரதமருக்கு கற்பிக்க வேண்டிய அவசியம் எனக்கு கிடையாது. அதற்கான நேரமும் எனக்கில்லை.

எதிர்க்கட்சியினரின் செயற்பாடுகள் கவலைக் குரியன என்று பிரதமர் கூறினார். உண்மையில் அரசாங்கத்தின் செயற்பாடுகள் எமக்கும் கவலையளிக்கின்றன. பிரதமரின் கோபம் மற்றும் ஆத்திரத்தை எம்மால் விளங்கிக் கொள்ள முடியும்.

பெருந்தோட்ட மக்களையே நான் என்றும் பிரதிநிதித்துவப்படுத்துகிறேன். எமது மக்கள் பல பிரச்சினைகளுக்கும் உரிமை மறுப்புகளுக்கும் இன்றும் முகங்கொடுத்துள்ளார்கள். கடந்த பாராளுமன்ற அமர்வின்போது பெருந்தோட்ட மக்களின் நாற்சம்பளம் 2,000 ரூபாவாக அதிகரிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினேன். இதற்கு ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் அவசரப் பட வேண்டாம் என்று கூறினர்.

2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரித்தால் பெருந்தோட்ட மக்களின் சம்பளத்தையும் அதிகரிக்க வேண்டும். ஏனெனில் எமது மக்கள் இன்றும் பல நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளார்கள்.

அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை என்று ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் விடுதலை முன்னணியின் பிரதி கட்சியான தேசிய மக்கள் சக்தி குறிப்பிட்டுள்ளமை கவலைக்குரியது. நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்திலும் எமது அமைச்சரவையில் இருந்தவர்களும் இவ்வாறான கருத்தையே கூறினார்கள். அதற்கு எதிராக நாங்கள் போராடி பல அரசியல் கைதிகளை விடுதலை செய்தோம். பல ஆண்டுகளாக தமிழ் அரசியல் கைதிகள் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். அவர்களை விடுதலை செய்ய வேண்டும். அதுதான் கிளீன் ஸ்ரீ லங்கா திட்டத்தின் வெற்றியை உறுதிப்படுத்தும் என்றார்.

## கோழி இறைச்சியின்...

கோழி இறைச்சியின் பாகங்களை சீனாவுக்கு ஏற்றுமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதற்கமைய, கோழி இறைச்சியிலிருந்து அகற்றப்படும் கோழித் தலை மற்றும் கால்களே இவ்வாறு ஏற்றுமதி செய்யப்படவுள்ளதாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (22) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

கோழி இறைச்சியிலிருந்து அகற்றப்படும் தலை மற்றும் கால்கள் அங்கு பல்வேறு உற்பத்திகளுக்கான மூலப்பொருட்களாக பயன்படுத்தப்படுகின்றன. அதனால் அவற்றை ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன.

கோழி இறைச்சி உற்பத்தியாளர்கள் நீண்ட காலம் இதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்குமாறு கடந்த அரசாங்கங்களிடம் கோரியிருந்தார்கள். இதுதொடர்பில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கோழி இறைச்சி உற்பத்தியாளர்கள் - சீன வர்த்தக நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தையும் நடத்தப்பட்டுள்ளது. அதற்கு அந்த நிறுவனங்களினால் விருப்பமும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த பின்னணியிலேயே தற்போது இதுதொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்பட்டுள்ளது. தற்போதிலிருந்து இந்த ஏற்றுமதி நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும். இருந்தபோதும் ஏற்றுமதியாளர்கள் அங்குள்ள வர்த்தக நிறுவனங்களை சரியாக அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். அதற்கு சிறிது காலம் தேவைப்படும் என்றார்.

## உள்ளூராட்சித் தேர்தல்...

பெரும்பான்மையை நிறைவேற்றி சர்வஜன வாக்கெடுப்பிலும் அவற்றுக்கு அனுமதியளிக்கப்பட வேண்டுமென்று தீர்ப்பளிக்குமாறு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பரினால் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவானது நாளை (24) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென உயர்நீதிமன்றம் நேற்று (22) உத்தரவிட்டுள்ளது.

இந்த மனுவானது உயர்நீதிமன்ற நீதியரசர்களான யசந்த கோதாகொட, ஜனக் த சில்வா மற்றும் அர்ஜூன ஒபேசேகர ஆகியோரை உள்ளடக்கிய மூவரடங்கிய உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாமின் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இதன்போது குறித்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் எதிர்வரும் 24ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று நீதியரசர்கள் குழாம் உத்தரவிட்டுள்ளது.

இந்த மனுவின் பிரதிவாதியாக சட்ட மா அதிபர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளார்.

இதுதொடர்பில் மனுதாரர் மேலும், கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக கோரப்பட்ட வேட்புமனுக்களை இரத்துச் செய்யும் நோக்கில் அரசாங்கத்தினால் இந்த சட்டமூலம் முன்வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

உத்தேச சட்டமூலத்தின் உள்ளடகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒருசில ஏற்பாடுகளினூடாக மக்களின் வாக்குரிமைக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்றும் இதனூடாக அடிப்படை உரிமை மீறல்கள் இடம்பெறுமென்றும் மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதற்கமைய, இந்த சட்டமூலத்திலுள்ள பிரச்சினைக்குரிய உறுப்புரைகளை நிறைவேற்ற வேண்டுமெனில் அவற்றை பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை விருப்பை பெற வேண்டும் என்பதுடன் சர்வஜன வாக்கெடுப்பிலும் இந்த சட்டமூலத்துக்கு அனுமதியளிக்கப்பட வேண்டும் என்று தீர்ப்பளிக்குமாறு மனுதாரர் உயர்நீதிமன்றத்தில் கோரியுள்ளார்.

## ரஷ்யப் படைகளிலுள்ள...

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை 27/2 இன் கீழ் கேள்விகளை முன்வைத்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு கேள்வி எழுப்பிய சிறிதரன் எம்.பி. மேலும் தெரிவிக்கையில்,

தங்களின் குடும்பங்களின் பொருளாதார மேம்பாட்டுக்காக, தமிழ், சிங்கள இளைஞர்கள் சட்ட ரீதியாகவும் சட்ட விரோதமான முறையிலும் வெளிநாடுகளுக்குச் செல்ல முற்படும்போது வெளிநாட்டு முகவர்களினால் ஏமாற்றப்படும் சம்பவங்கள் தொடர்ச்சியாகப் பதிவாகியுள்ளன.

இந்த நாட்டு தமிழ் மற்றும் சிங்கள இளைஞர்கள் இவ்வாறு முகவர்களால் ஏமாற்றப்பட்டு, ரஷ்ய இராணுவத்தில் பலவந்தமான முறையில் இணைக்கப்பட்டுள்ளார்கள். இவ்வாறு இராணுவத்தில் இணைக்கப்பட்டுள்ளவர்களின் பெற்றோர் எம்மிடம் முறையிட்டு தமது பிள்ளைகளை மீட்டுத் தருமாறு வலியுறுத்துகிறார்கள்.

இதற்கமைய அதிர்ஷ்ட ராஜா கேமஸ் விதூஷன் - யாழ்ப்பாணம், பகீரதன் - கரவெட்டி, சுந்தரலிங்கம் பாலச்சந்திரன் - முல்லைத்தீவு, பிரதாப் - யாழ்ப்பாணம், சிவேஸ் - யாழ்ப்பாணம் ஆகிய தமிழ் இளைஞர்கள் முகவர்களால் ஏமாற்றப்பட்டு ரஷ்ய இராணுவத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அதேபோல் 2022.10.20ஆம் திகதி ரஷ்யா - பெலராஸ் எல்லையில் விஜயகுமார் முகுந்தன் என்பவர் காணாமல் போயுள்ளார். இவருக்கு நேர்ந்தது என்னவென்பது இதுவரை தெரியவில்லை. ரஷ்ய இராணுவத்தில் பலவந்தமாக இணைக்கப்பட்டுள்ள இலங்கையரின் எண்ணிக்கை, உயிரிழந்துள்ளவர்களின் விபரம் மற்றும் இவர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு இராஜதந்திர மட்டத்தில் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்னவென்பதை அரசாங்கம் அறிவிக்க வேண்டும்.

ரஷ்ய இராணுவத்தில் பலவந்தமாக இணைக்கப்பட்டுள்ளவர்களின் பெற்றோர் மற்றும் குடும்பத்தினர் பெரும் துயரங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர். தமது உறவுகளை எதிர்பார்த்து காத்திருக்கிறார்கள். ஆகவே நெருக்கடிக்குள்ளாகியுள்ள எமது நாட்டவர்களை மீட்க அரசாங்கம் துரிதமாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றார்.

இதற்கு பதிலளித்த வெளிவிவகாரம் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் மற்றும் சுற்றுலாத்துறை அபிவிருத்தி பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா, இவ்விடயம் தொடர்பில் இராஜதந்திர மட்டத்தில் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. முன்வைக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு தரவு அடிப்படையில் பதிலளிக்க வேண்டும். ஆகவே ஒரு வார கால அவகாசம் தருமாறு கோரினார்

மீண்டும் எழுந்த சிறிதரன் எம்.பி., முன்வைக்கப்பட்டுள்ள இந்த விடயத்தின் முக்கியத்துவத்தை கருத்திற்கொண்டு அரசாங்கம் ஒருவார காலத்துக்குள் சிறந்த பதிலை வழங்க வேண்டும் எனக் கூறினார்.

## கல்முனை பிரதேச...

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது, கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலக விவகாரம் தொடர்பாக இலங்கைத் தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரனால் முன்வைக்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இதனைக் கூறினார்.

அதன்போது அமைச்சர் தெரிவிக்கையில்,

கல்முனை வடக்கு உட்பட 28 உதவி அரசாங்க முகவர் அலுவலகங்கள் பிரதேச செயலகங்களாக தொழிற்படும் வகையில் மாற்றியமைப்பதற்காக 1993.07.28ஆம் திகதி அமைச்சரவையில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அவ்வாறு அனுமதி வழங்கப்பட்டபோதும் இதுவரையில் அந்த அலுவலகம் உப பிரதேச அலுவலகமாகவே செயற்படுகின்றது. கல்முனை - வடக்கு பிரதேச செயலமானது, கல்முனை தெற்கு பிரதேச செயலகத்தின் ஓர் உப அலுவலகமாக இப்போதும் செயற்படுவதுடன், கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்துக்காக பிரதேச செயலாளர் பதவிக்கு அனுமதி வழங்கப்படவில்லை. இதற்காக உதவி பிரதேச செயலாளர் பதவி மட்டுமே அனுமதியளிக்கப்பட்டுள்ளதுடன், இப்போது அவர் கடமையாற்றுகின்றார். இதனால் கல்முனை வடக்கு உப அலுவலகத்தை தரமிறக்க முயற்சிக்கப்படவில்லை.

கல்முனை - வடக்கு பிரதேச செயலகமானது, உப பிரதேச செயலக அலுவலகமாக இப்போது செயற்படும் நிலையில் இது தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மூன்று வழக்குகள் தொடரப்பட்டுள்ளன என்றார்.

இதனை தொடர்ந்து மேலதிக கேள்விகளை எழுப்பி உரையாற்றிய கோடீஸ்வரன் எம்.பி. கூறுகையில்,

நான் கேட்ட கேள்விகளுக்கு சரியான பதில்களை வழங்கவில்லை என்றே நினைக்கின்றேன். 1993ஆம் ஆண்டில் அமைச்சரவை அனுமதியுடன் இது முழுமையான பிரதேச செயலகமாக 30 வருடங்களாக 29 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கியதாகவும் பிரதேச செயலாளரை உள்ளடக்கியதாகவும் கட்டிடங்கள் வளங்களை கொண்டதாகவும் இருந்துள்ளது. இந்நிலையில் பிரதேச செயலகத்தை உப செயலக பிரதேச செயலகமாக தரமிறக்க அமைச்சின் செயலாளர் அல்லது அரசாங்க அதிபருக்கு அதிகாரம் உண்டா? அல்லது கல்முனை தெற்கு பிரதேச செயலகத்துடன் இணைந்து செயற்பட வேண்டும் என்று அமைச்சரவை தீர்மானம் உள்ளதா? அல்லது உப அலுவலகமாக தரமிறக்க அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டதா? இந்த விடயங்கள் எதுவும் இல்லை.

2019ஆம் ஆண்டுக்கு முன்னர் 332 பிரதேச செயலகங்களில் ஒன்றாக இந்த பிரதேச செயலகம் உள்நாட்டு அலுவலகத்தின் இணையத்தளத்தில் இருந்தது. ஆனால் தற்போது இது உப பிரதேச செயலகமாக எப்படி மாறியது. அத்துடன் இலங்கையில் 27 பிரதேச செயலகங்கள் எல்லை நிர்ணயம் இன்றி முழுமையான பிரதேச செயலகங்களாக உள்ளன. ஆனால் இந்த கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு மட்டும் ஏன் இந்த செயற்பாடு?

இது தனிப்பட்ட அரசியல் நோக்கத்துக்காக முன்னெடுக்கப்படுகின்றதா? அந்த பிரதேச மக்களுக்கு அந்த விடயங்கள் கிடைக்கப்பெறாமல் ஏதேனும் வகையில் தடுக்கப்படுகின்றதா? என்றார்.

இது தொடர்பில் பதிலளித்த அமைச்சர் கூறுகையில்,

இந்த விடயம் தொடர்பில் மூன்று வழக்குகள் விசாரிக்கப்படுகின்றன. இருதரப்பு வழக்குகள் காரணமாக இது தொடர்பில் இறுதித் தீர்மானத்தை எடுக்க முடியாதுள்ளது. நீதிமன்ற நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் மிகவும் துரிதமாக இந்த விடயத்தில் தலையிடுவதற்கு அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. நீதிமன்ற நடவடிக்கைகள் காரணமாகவே இறுதி முடிவை எடுக்க முடியாதுள்ளது என்றார்.

இதேவேளை மீண்டும் தனது கேள்விகளை எழுப்பி கருத்துகளை முன்வைத்த கோடீஸ்வரன் எம்.பி,

இடைக்கால தடையுத்தரவு நீதிமன்றத்தினால் இதுவரையில் வழங்கப்படவில்லை. அரசு நினைத்தால் அதனை முழுமையாக கொடுக்க முடியும். இதில் தடைபோடுவதற்கு எவ்வித தடையுத்தரவும் இல்லை. இதனை செய்ய முடியுமென்று சட்ட மா அதிபர் திணைக்களத்தினால் சட்டத்தரணிகளுக்கு கூறப்பட்டுள்ளது. ஆகவே இது தொடர்பில் அரசே முடிவுவெடுக்க வேண்டும். கணக்காளருக்கான நியமனம் வழங்கப்பட்டுள்ள போதும் அங்கே நிரந்தர கணக்காளர் இன்னும் நியமிக்கப்படவில்லை என்றார்.

இதன்போது இதற்கு பதிலளித்த அமைச்சர் கூறுகையில்,

இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடி நாங்கள் பாராளுமன்றத்துக்கு இறுதி முடிவை வழங்குவோம். அந்த பிரதேச மக்களின் பிரச்சினைகள் தொடர்பிலும் நாங்கள் கலந்துரையாடியுள்ளோம். இதனால் இதில் நியாயத்தை நிலைநாட்ட இது தொடர்பில் கலந்துரையாடி சரியான முடிவை பாராளுமன்றத்துக்கு வழங்குவோம் என்றார்.

## வாய்ப்பேச்சு அரசியல்...

சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு தீர்வுகொடுக்காமல் வெறும் வாய்ப்பேச்சு வீறாப்பில் செயற்பட்டுக்கொண்டிருந்தால் இந்த ஆட்சி நீண்ட நாட்களுக்கு தொடருமென்று எதிர்பார்க்க முடியாது” என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவங்ச தெரிவித்தார்.

மேலும், டிஜிட்டல் அடையாள அட்டைக்கான கட்டமைப்பை உருவாக்கும் பொறுப்பை இந்திய நிறுவனத்துக்கு ஒப்படைக்கும் யோசனையை நிராகரித்துவிட்டு அதனை இலங்கையிலுள்ள நம்பிக்கைக்குரிய நிறுவனமொன்றுக்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுக்குமாறும் அவர் வலியுறுத்தினார்.

பத்தரமுல்லையிலுள்ள கட்சித் தலைமை அலுவலகத்தில் நேற்று (22) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

டிஜிட்டல் அடையாள அட்டை தொடர்பில் ஒவ்வொரு நாடுகளிலும் நீண்ட கருத்தாடல்கள் இருந்தாலும், சகல நாடுகளிலும் இந்த முறை நடைமுறையில் இல்லை. ஐக்கிய இராச்சியத்தில் கூட ஒருசில மாநிலங்களில் மாத்திரமே இந்த டிஜிட்டல் அடையாள அட்டை நடைமுறையில் இருக்கிறது. ஐக்கிய இராச்சியத்திலும் இதுதொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெற்றபோதும் அதனை அறிமுகப்படுத்தவில்லை.

தற்போதைய ஜனாதிபதி அண்மையில், உலகில் அதிக பாதுகாப்புக்கொண்ட டிஜிட்டல் மயமாக்கம் இந்தியாவிலேயே இருக்கிறது என்று குறிப்பிட்டார். ஆனால், டார்க் இணையத்தினூடாக இந்தியர்கள் 815 மில்லியன் பேரின் தரவுகள் திருடப்பட்டுள்ளதாக அமெரிக்க நிறுவனமொன்று தகவல் வெளியிட்டிருந்தது. இவ்வாறு திருடப்படும் தரவுகளை அவர்கள் வேறு நிறுவனங்களுக்கு விற்பனை செய்வார்கள். எனவே, தற்போது நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ள டிஜிட்டல் அடையாள அட்டை முறை நீக்கப்படவேண்டும்.

நாட்டுக்கு போலி அடையாள அட்டைகள் பயன்படுத்தப்படுவதற்கான வாய்ப்புகளும் இருக்கின்றன. ரோஹிங்யா போன்ற அகதிகள் நாட்டுக்கு வரும்போது அவர்களும் இதுபோன்று போலி அடையாள அட்டைகளை பயன்படுத்தவும் முடியும்.

அதேபோன்று வேலைவாய்ப்புக்காக அண்டை நாடுகளைச் சேர்ந்த நபர்களும் இலங்கைக்கு வருகிறார்கள். ஒருபுறம் இந்தியாவுடன் இணைந்து மேற்கொண்ட கூட்டறிக்கையின் பிரகாரம் எட்கா உடன்படிக்கையில் கைச்சாத்திடவும் அரசாங்கம் முயற்சித்து வருகிறது. அவ்வாறு இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டால் இந்தியாவிலுள்ளவர்கள் இங்கு வேலைவாய்ப்புக்கு வருவதை தடுத்து நிறுத்த முடியாது. இலட்சத்தையும் தாண்டி கோடிக்கணக்கானவர்கள் இங்கு வரக்கூடும். எனவே, அவ்வாறு வரும் இலங்கையர்களுக்கும் இவ்வாறான போலி அடையாள அட்டை தயாரிக்கப்பட்டால் இலங்கையின் மக்கள் தொகை எந்தளவு திரிபுபடுத்தப்படும் என்பது குறித்து சந்தேகத்தை வெளியிடவும் முடியும்.

ஆட்பதிவுத் திணைக்களத்தின் பிரதானிகள் அறிந்தே இந்த போலி அடையாள அட்டைகள் வெளியிடப்படலாம். அதனால், இந்தியா அல்லது வேறு நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கும் போலி அடையாள அட்டையை பெற்றுக்கொடுக்கும் வகையிலேயே ஆட்பதிவுத் திணைக்களம் செயற்பாடுகளை திட்டமிட்டுள்ளது.

அதனால், இவ்வாறு போலி அடையாள அட்டையை வெளியிடும் செயற்பாடுகளை தடுத்து நிறுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோன்று டார்க் இணையங்களினால் 815 மில்லியன் பேரின் தனியார் தரவுகளை திருட முடியுமென்றால், அந்தத் தரவுகளை விற்பனை செய்ய முடியுமென்றால், இலங்கைக்கான டிஜிட்டல் அடையாள அட்டை கட்டமைப்பை உருவாக்கும் பொறுப்பை இந்திய நிறுவனத்துக்கு வழங்கினால் இங்குள்ள தரவுகளை எவ்வாறு விற்பனைசெய்வார்கள் என்பதை கற்பனை செய்துகூட பார்க்க முடியாது.

எமக்கு கிடைத்துள்ள தகவலுக்கமைய, டிஜிட்டல் அடையாள அட்டை முறையை நடைமுறைப்படுத்த அரசாங்கம் தயாராகி வருவது மாத்திரமல்லாமல் அதனை இந்திய நிறுவனத்துக்கு வழங்கவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. வேறு சில நாடுகளிலும் டிஜிட்டல் அடையாள அட்டை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், அதற்கான கட்டமைப்பு செயற்பாடுகள் அந்த நாடுகளிலுள்ள உள்நாடுகளிலுள்ள நிறுவனங்களினாலேயே முன்னெடுக்கப்பட்டுள்ளன. வேறு நாடுகளுக்கு பொறுப்பளிக்கப்படவில்லை. எனவே, இந்த நவீன உலகில் தரவு என்பது மிக முக்கியமானதாகும். ஒருபுறத்தில் போலி அடையாள அட்டை தயாரிப்பு நிறைவுக்கு கொண்டுவரப்பட வேண்டும். அதேபோன்று டிஜிட்டல் தரவு கட்டமைப்பை உருவாக்குதென்றால் இந்தியா போன்ற வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்காமல் நாட்டிலுள்ள பொறுப்பு வாய்ந்த நிறுவனத்துக்கு வழங்க வேண்டும். தரவு பாதுகாப்புக்கான முழு பொறுப்பையும் அரசாங்கம் ஏற்க வேண்டும்.

டிஜிட்டல் அடையாள அட்டை நாட்டுக்கு அவசியமில்லை என்பது எங்களின் நிலைப்பாடு இல்லை. இந்த செயற்பாட்டை இந்திய நிறுவனத்தினூடாக முன்னெடுக்க முயற்சித்தால் இங்குள்ள தரவுகள் அவர்களின் வசமாவதை தடுத்து நிறுத்தவும் முடியாது. அவர்களுக்கு ஏற்ற அந்த தகவல்களை பயன்படுத்துவதை தடுத்து நிறுத்தவும் முடியாது.

இதேவேளை, இந்த அரசாங்கம் கதைபேசும் ஆட்சியையே முன்னெடுத்து வருகிறது என்றே நான் கருதுகிறேன். ஆட்சிக்கு வந்ததிலிருந்து தாம் எதிர்க்கட்சியில் இருப்பதாக கருதிக்கொண்டே செயற்பட்டு வருகிறார்கள். ஏதாவதொன்றை அடிப்படையாகக் கொண்டு கதைபேசுவார்கள். பின்னர் அதனை மாத்திரம் பிடித்துக்கொண்டு பழைய விடயங்களை மறந்துவிடுகிறார்கள். எட்கா உடன்படிக்கையும் அதுதொடர்பான பேச்சுவார்த்தைகளையும் மறந்துவிட்டார்கள்.

விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் மஹிந்த ராஜபக்ஷ என்பவர் ஆபத்தான நிலையிலும் யுத்தத்தை நிறைவு செய்வதற்காக அரசியல் தலைமைத்துவத்தை வழங்கியவர். அவ்வாறானவொருவருக்கு உயிர் அச்சுறுத்தல் இல்லை என்று கூற முடியாது. எனவே, வெறும் கதை பேசிக்கொண்டிருக்காமல் நாட்டிலுள்ள சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் வாய்ப்பேச்சு வீறாப்பினால் இந்த ஆட்சி நீண்ட நாட்களுக்கு தொடருமென்று எதிர்பார்க்க முடியாது'' என்றார்.

## மக்கள் நிலை நெருக்கடியில்!...

நாட்டின் பல்வேறு துறைகளில் மக்கள் எதிர்நோக்கி வரும் பல பிரச்சினைகள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தினதும் அரசாங்கத்தினதும் கவனத்துக்கு கொண்டு வர நடவடிக்கை எடுத்தார். வளமான நாடு - அழகான வாழ்க்கையை உருவாக்கும் பயணம் தொடர்பில் நேற்று (22) பாராளுமன்றத்தில் நடந்த விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

### வாக்குறுதியளித்த மின் கட்டணத்தை 33 வீதத்தால் குறையுங்கள்

மின்சாரக் கட்டணத்தை 1/3 குறைப்பதாக அரசாங்கம் உறுதியளித்தபோதிலும், மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க வேண்டியுள்ளதாக துறைக்குப் பொறுப்பான அமைச்சர் தெரிவித்தார். 06 மாதங்களுக்கு மின் கட்டணத்தை குறைக்க முடியாது என மின்சார சபையும் கூறியது. பொது மக்களின் கருத்துகளின் அடிப்படையில் பொது பயன்பாட்டு ஆணைக்குழு 20வீதத்தால் மின்சார கட்டணத்தை குறைத்தது. இதற்கு நிதி அமைச்சின் ஒப்புதல் தேவை என்கின்றனர். எனவே தற்போது இதனை 20வீதத்தால் குறைப்பதோடு, தேர்தல் வாக்குறுதியாக வழங்கப்பட்ட மின்சாரக் கட்டணத்தை 33வீதத்தால் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### மக்களின் வாழும் உரிமையை பாதுகாக்க வேண்டும்

கொலைகள் மற்றும் போதைப்பொருள் பாவனை, கடத்தல் அதிகரித்துள்ளன. தரவுகளின் அடிப்படையில் 2024 இல் 121 துப்பாக்கிச் சூடுகளும் 60 கொலைகளும் நடந்துள்ளன. இது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி, இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும். இது அரசின் பொறுப்பாகும்.

### கடவுச்சீட்டு பிரச்சினையை தீர்க்கவும்

கடவுச்சீட்டு பிரச்சினை தீவிரமடைந்துள்ளது. இதற்கு நிகழ்நிலை முறை அறிமுகப்படுத்தப்பட்டாலும், நிகழ்நிலை முறையிலான விண்ணப்பங்களுக்கும் வரிசைகள் ஏற்பட்டுள்ளன. இதற்கு விரைவான தீர்வுகள் அவசியம்.

### தேங்காய் எண்ணெய் இறக்குமதி பிரச்சினைக்குத் தீர்வு தேவை

தேங்காய் எண்ணெய் இறக்குமதி விடயத்தில் 2024 ஜனவரி முதல் சுத்திகரிக்கப்படாத தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டது. சுத்திகரிக்கப்பட்டு விற்பனை செய்யும்போது 18வீத பெறுமதி சேர் வரியும் 2.5வீத சமூக பாதுகாப்பு வரியும் விதிக்கப்பட்டாலும் இவ்வாறு சுத்திகரிக்கப்படாத தேங்காய் எண்ணெயை இறக்குமதி செய்து பின்னர் சுத்திகரித்து சந்தைப்படுத்துவதில் அரசுக்கு சேர வேண்டிய வரிகள் கிடைக்கவில்லை. இது 05 பில்லியன் ரூபாவாக காணப்படுகின்றன. இது தொடர்பில் தீர்வு காணப்பட வேண்டும்.

### துறைமுகத்தில் நிலவிவரும் கொள்கலன் நெரிசல் பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை

துறைமுகத்தில் கொள்கலன் அகற்றும் பணி துரிதமாக இடம்பெறாமையினால், கொள்கலன் தாங்கி வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளன. இதன் காரணமாக ஏராளமான கப்பல்கள் கொழும்பு துறைமுகத்தை விட்டு வெளியேறியுள்ளன. இன்னும் 4,000 கொள்கலன்கள் இங்கு காணப்படுகின்றன. இதற்கு அரசாங்கம் அவசர தீர்வுகளை காண வேண்டும்.

### சிரேஷ்ட பிரஜைகளின் சேமிப்புக்கு வழங்கப்படும் 15வீத வட்டியை மீள வழங்கல்

சிரேஷ்ட பிரஜைகள் தமது சேமிப்புக்கு பல்வேறு அரசாங்கங்களின் கீழ் 15வீத வட்டியை பெற்று வந்தனர். ஆனால் 2022 முதல் அது குறைக்கப்பட்டு தற்போது 7-8வீத வட்டி விகிதத்தை பெற்று வருகின்றனர். இந்த 15வீத வட்டி விகிதம் திரும்ப வழங்கப்பட வேண்டும்.

### சஃபாரி ஜீப் நடத்துநர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை பெற்றுக் கொடுங்கள்

பஸ் மற்றும் முச்சக்கர வண்டிகள் மீது சில நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதால், சுற்றுலாத்துறை மற்றும் தேசிய பூங்காக்களில் சஃபாரி ஜீப் வண்டிகள் பயன்படுத்தப்படுகின்றன. இதன் மூலம் ஏராளமானோர் வருமானம் பெறுகின்றனர். எனவே, இந்த ஜீப் வண்டிகள் விடயத்தில் உரியவாறு நடந்து கொள்ளுங்கள். முச்சக்கர வண்டிகள் மற்றும் பஸ்களின் தேவையற்ற உதிரிப் பாகங்கள் அகற்றப்பட்டபோதிலும் அதே சட்டம் இந்த ஜீப் வண்டிகள் மீதும் பிரயோகிக்கப்படக் கூடாது. இது சுற்றுலாத்துறைக்கு தேவையான ஒரு வண்டியாகும்.

### வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினைக்கு விரைவான தீர்வுகளை வழங்குங்கள்

ஏறக்குறைய 45,000 பட்டதாரிகள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அதனால் அவர்களுக்கு வேலைவாய்ப்புகளை பெற்றுக் கொடுங்கள். ஆளுந்தரப்பின் தேர்தல் வாக்குறுதிகளில் இது ஒரு முக்கிய முன்மொழிவாக இருந்ததால் இந்த பட்டதாரிகளின் வேலையில்லாப் பிரச்சினைக்கு தீர்வுகளை பெற்றுக் கொடுங்கள். 22,000 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளனர். ஆசிரியர் பற்றாக்குறையைப் பூர்த்தி செய்ய இத்தரப்பினர்கள் பெரும் தியாகங்களைச் செய்தனர். இவர்களை ஆசிரியர்களாக நியமிக்க நடவடிக்கை எடுங்கள். இத்தரப்பினர்கள் கடந்த காலங்களில் தமது போராட்டத்தின்போது கூட பிரச்சினைகளை எதிர்கொண்டதால், இந்த விடயம் குறித்து கூடிய கவனம் செலுத்துங்கள்.

### கல்வியற் கல்லூரி மற்றும் தாதி பயிலுநர் பயிற்சியில் உள்ள சிக்கல்களுக்கு தீர்வுகளை வழங்குங்கள்

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர்கள் சேவையில் 706 வெற்றிடங்களை நிரப்ப வர்த்தமானி வெளியிடப்பட்டு பரீட்சைகள் நடைபெற்றன. அவர்கள் இன்னும் ஆட்சேர்ப்பு செய்யப்படாததால், முடிவுகளை விரைவில் வெளியிட்டு, உரிய ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ளவும். மேலும் கல்வியற் கல்லூரி மற்றும் தாதி பயிலுநர் பயிற்சியில் உள்ள சிக்கல்களுக்கு தீர்வுகளை வழங்குங்கள். அடுத்த ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ளுங்கள். கல்வியற் கல்லூரிகள் ஊடாக பட்டம் வழங்கும் திட்டத்தை முன்னெடுங்கள்.

### கிராம உத்தியோகத்தர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை காணுங்கள்

கிராம உத்தியோகத்தர்களின் சேவை பிரமாணக் குறிப்பு, கொடுப்பனவு பிரச்சினை, அஸ்வெசும நிவாரணத் திட்டப் பிரச்சினைகள் மற்றும் மக்கள் தொகை கணக்கெடுப்பு போன்ற பல சிக்கல்களை எதிர்கொண்டு வருகின்றனர். கிராமத்தில் பெரும் பணிகளைச் செய்யும் கிராம உத்தியோகத்தர்களின் இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்துங்கள்.

மக்கள் எதிர்நோக்கும் மேற்கூறிய பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. இந்த பாரதூரமான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும். எனவே முற்போக்கான தீர்வுகளை வழங்குங்கள் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

## தினசரி பலாபலன்கள்

### குரோதி வருடம் தை மாதம் 10ஆம் நாள் வியாழக்கிழமை

**மேஷம்** ஆலோசிக்காது முடிவுகள் எதையும் எடுக்க வேண்டாம். கோபத்தால் பொறுமை இழந்துவிடாதீர்கள்.

**ரிஷபம்** நினைத்த காரியத்தில் வெற்றி. நீங்கள் கேட்ட கடன் இன்று கிடைக்கும். உற்சாகமாக இருப்பீர்கள்.

**மிதுனம்** அதிர்ஷ்டத்தை சோதித்து பணத்தை இழப்பீர்கள். மனதை சமாதானப்படுத்திக் கொள்ளுங்கள்.

**கடகம்** வீடு, வாகனத்தால் வீண் செலவுகள் அல்லது தொல்லைகள் ஏற்படும். தாயின் ஆசியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**சிம்மம்** நீண்ட நாள் முயற்சி வெற்றியைக் கொடுக்கும். நண்பர் உறவினர் தொடர்பால் நன்மைகள் உண்டு.

**கன்னி** வாய் வார்த்தைகளை நிதானமாகப் பிரயோகியுங்கள். கடன் கொடுப்பதும் வாங்குவதும் சிக்கலைத் தரும்.

**துலாம்** அலைச்சலும் செலவுகளும் நிறைந்த நாள். மனதைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளவும்.

**விருச்சிகம்** நினைத்த காரியத்தை சிரமமின்றி முடிப்பீர்கள். உடல் பலம், மன நலம் சிறப்பாக இருக்கும்.

**தனுசு** குடும்ப உறவில் சிக்கல் ஏற்படலாம். தேவையற்ற பயணங்களால் வெறுப்படைவீர்கள். வீண் குழப்பம் வேண்டாம்.

**மகரம்** தொழில் ரீதியில் பாராட்டுகள் கிடைக்கும். விரும்பிய பெண் உறவால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

**கும்பம்** புதிய தொழில் வாய்ப்புகள் வந்தமையும். திட்டமிட்ட காரியங்களில் சாதனை செய்வீர்கள்.

**மீனம்** தடைகள் வந்தாலும் சமாளித்துக் கொள்வீர்கள். உங்கள் சொத்துக்களின் மீது கவனம் செலுத்துங்கள்.

**திதி** : நவமி பி.ப.5.37 வரை பின் தசமி

**நட்சத்திரம்** : விசாகம் பி.இ.5.08 வரை பின் அனுஷம்

**பிறை** : தேய்பிறை

**யோகம்** : சித்த யோகம்

**வார சூலை** : தெற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது

**நல்ல நேரம்** : காலை- 9.28 – 11.28 மணிவரை மாலை- 4.28 – 6.28 மணிவரை.

**ராகு காலம்** : 1.58 – 3.28 மணிவரை

**எமகண்டம்** : 6.28 - 7.58 மணிவரை

**குளிகை** : 9.28 - 10.58 மணிவரை

**சந்திராஷ்டமம்** : மீன-மேஷ ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும். (முன்னிரவு 10.32 வரை மீன ராசியினருக்கு)

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**

**இன்று பின்னிரவு 5.08 மணிவரை**
பரணி, ரோஹிணி, திருவாதிரை, பூசம், ஆயிலியம், பூரம், அஸ்தம், சுவாதி, அனுஷம், கேட்டை, பூராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி

**இன்று பின்னிரவு 5.08 மணிக்குமேல்**
அஸ்வினி, கார்த்திகை, மிருகசீரிடம், புனர்பூசம், ஆயிலியம், மகம், உத்திரம், சித்திரை, விசாகம், கேட்டை, மூலம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, ரேவதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும், தொழில், வியாபார இலாபங்கள், கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும்.**

**விசேட தினம்** : திருநீலகண்டர், தாயுமானவர் குரு பூசை



**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325 078-6759739

# சட்ட திட்டங்களினால் மாத்திரம் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாது

## பாரம்பரியம் முக்கியம் என்கிறார் ஜனாதிபதி

நடைமுறைச் சட்டங்களினால் மாத்திரம் நாடொன்று முன்னோக்கிச் செல்ல முடியாதெனவும் நாட்டின் பாரம்பரியம் மிக முக்கியமான அம்சமாகும் எனவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

இலங்கை பௌத்த மதத்தின் அடிப்படையில் கட்டியெழுப்பட்ட பாரம்பரியத்தின் ஊடாக சிறப்புக்குரிய பணியை ஆற்றியிருப்பதாகவும் அந்த பாரம்பரியத்தை பாதுகாத்து எதிர்கால சந்ததிகளிடம் பாதுகாப்பாக கையளிக்க வேண்டியது அனைவரினதும் பொறுப்பாகும் என்றும் அவர் கூறினார்.



இலங்கை ராமண்ய பீடத்தின் 74ஆவது உப சம்பதா அரச நிகழ்வை நடத்துவது தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று (22) நடைபெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பௌத்த மதத்துக்குள் காணப்படும் முக்கிய நிகழ்வான உபசம்பதா நிகழ்வின் வரலாற்று முக்கியத்துவத்தை நினைவுகூர்ந்தார். உபசம்பதா முறை தடைப்படுவது முழு பௌத்த அமைப்பினதும் சிதைவாக அமையும். இந்த வரலாற்று பாரம்பரியத்தை பாதுகாத்து கௌரவத்துடன் முன்னோக்கி கொண்டுச் செல்ல வேண்டும்.

இலங்கை ராமண்ய பீடத்தினால் நடத்தப்படும் உபசம்பதா தேசிய நிகழ்வு 2025 ஜூன் 30ஆம் திகதி முதல் ஜூலை 05ஆம் திகதிவரையில் விஜிதபுர, பழுகஸ்வெவ, புண்யவர்தனாராம விகாரையை மையப்படுத்தி உதகுக்கேப சீமாமாலக்கயவில் நடத்தப்படவுள்ளது. 250க்கும் அதிகமான இளம் பிக்குகளுக்கான உபசம்பதா நிகழ்வு அரசாங்க அனுசரணையுடன் நடைபெறவுள்ளது.

இலங்கை ராமண்ய மகா பீடத்தில் இரு வருடங்களுக்கு ஒரு முறை நடத்தப்படும் உப சம்பதா நிகழ்வு ஒரு கௌரவ நிகழ்வாக அரசாங்கத்தினால் கருதப்படும் நிலையில், அதற்கு அவசியமான வசதிகளை தயக்கமின்றி செய்து கொடுக்குமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி வலியுறுத்தினார்.

பௌத்த மத பாரம்பரியத்தை பாதுகாப்பதன் ஊடாக சமூக மலர்ச்சியை ஏற்படுத்தலாம். இவ்வாறான மத நிகழ்வுகளை நடத்துவதன் மூலம் சமூகத்தின் மலர்ச்சியை மேலும் வலுப்படுத்தலாம் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ராமண்ய பீடத்தின் மகாநாயக்கர் அதி வண. மகுலேவெ விமல தேரர், ராமண்ய பீடத்தின் நீதித் தலைவர் அதி வண. அத்தங்கனே ரத்னபால தேரர், ராமண்ய பீடத்தின் அனுநாயக்கர் அதி வண. வலேபொட குணசிறி தேரர், ராமண்ய பீடத்தின் அனுநாயக்கர் அதி வண. அங்கும்புரே பிரேமவன்ச தேரர் உள்ளிட்ட மகா சங்கத்தினரும் வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரொஷான் கமகே, வடமத்திய மாகாண ஆளுநர் முன்னாள் மேல்நீதிமன்ற நீதிபதி வசந்த குமார விமலசிறி, ராமண்ய பீட பாதுகாப்பு சபையின் தலைவர் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, ராமண்ய பீட பாதுகாப்பு சபையின் செயலாளர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் லசந்த அழகியவண்ண ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## பயங்கரவாத தடைச்சட்டம்...

அதன்போது நீதி அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பில் முக்கியமான விடயங்களை குறிப்பிட்டார். இது தொடர்பான அமைச்சரவை பத்திரம் தயாரிக்கப்படுகின்றது. அது தயாரிக்கப்பட்டதும் குழுவில் ஆராய்ந்து பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கும் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்படும். அது தொடர்பான விபரங்களை எதிர்வரும் பாராளுமன்ற அமர்வுகளில் உறுதிப்படுத்துவோம். இதற்கமைய பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படும் என்பதுடன் பயங்காரவாத எதிர்ப்புச் சட்டமூலம் கொண்டுவரப்படும் என்றார்.

முன்னதாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. தனதுரையில் கூறியதாவது,

கிளீன் ஸ்ரீலங்கா திட்டம் தொடர்பான இணையத்தளத்துக்கு சென்று அந்த நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் அறிந்துகொள்ள முயற்சித்தேன். அது சமூகம், பொருளாதாரம் மற்றும் தார்மீக பொறுப்பு என்ற மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. அவற்றை தனித்தனியாக பார்வையிட்டேன். ஒருங்கிணைப்பின் மூலம் நம்பிக்கை ஏற்படுத்தப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கே இன்னும் விரிவான விளக்கங்கள் அவசியமாகும். இந்த அரசாங்கத்துக்கு மக்கள் பெரிய ஆணையை வழங்கியுள்ளனர். ஊழலுக்கு எதிராகவே இந்த ஆணை வழங்கப்பட்டுள்ளது. கடந்த 75 வருடங்களாக நாடு பாரிய ஊழல் மோசடிகளுக்கு முகம்கொடுத்துள்ளது. இதனை சுத்தப்படுத்த வேண்டும் என்றே மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

நீதி அமைச்சர் வெளியிட்டுள்ள கருத்துகள் தொடர்பிலும் கூற வேண்டியுள்ளது. தேசிய மக்கள் சக்தியின் பிரதான கட்சியாக ஜே.வி.பி. உள்ளது. இந்தக் கட்சி நாட்டில் பிரச்சினைகளுக்கு காரணமாக இருந்த கட்சியே என்பதை இவர்கள் இப்போது புரிந்துகொண்டிருப்பார்கள் என்று நினைக்கின்றேன். நெறிமுறை என்ற சொல்லை பயன்படுத்துகின்றீர்கள். ஆனால் நீங்கள் செய்வதை பொறுத்தே அர்த்தம் கொள்ள முடியும்.

தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பாரிய பிரச்சினையில் பயங்கரவாத தடைச் சட்டம் மிக முக்கியமானது. நான் சில கொள்கைகளுக்கு இணங்காவிட்டாலும் ஜே.வி.பியினர் இதனை எதிர்த்தனர். அவர்களும் அதனால் பாதிக்கப்பட்டிருந்தனர். தேர்தலின் போதும், அதற்கு முன்னரும் இது மீளப் பெற்றுக்கொள்ளப்படும் என்று கூறினர். இப்போது காலம் தேவையென்று கூறுகின்றனர். அதற்கு காலம் தேவைதான். ஆனால் 2015ஆம் ஆண்டில் வந்த அரசாங்கம் இந்த சட்டத்தை திருத்துவதற்கும் மீளப்பெற்றுக்கொள்ளவும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு வாக்குறுதியளித்தனர். அப்போது அநுரகுமார திசாநாயக்க அதனை எதிர்க்கவில்லை. இப்போது தேர்தலின் பின்னர் அரசாங்கம் ஒருவார காலத்திலேயே பின்வாங்கிக்கொண்டது.

பயங்கரவாத தடைச்சட்டத்தில் தவறுகள் இடம்பெற்றுள்ளன. இதனை மீளப்பெறுவதாக கூறினாலும் பொலிஸார் இதனை எப்போதும் தவறாகவே பயன்படுத்துகின்றனர். அரசாங்கம் செய்யாவிட்டாலும் பொலிஸார் தவறான வகையிலேயே பயன்படுத்துகின்றனர். இந்த நிலைமையை மாற்ற வேண்டும். இதனையே நான் குறிப்பிடுகின்றேன். இந்த சட்டம் பாடசாலை ஆசிரியர்கள் மீதும் பயன்படுத்தப்படுகின்றது.

பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் கிளிநொச்சி கோணாவில் மகா வித்தியாலயத்துக்குச் சென்று விசாரணை நடத்தியுள்ளனர். அங்கு நிகழ்ச்சியொன்று நடைபெற்றது. அது தொடர்பில் ஆசிரியர்களிடம் விசாரணை நடத்தியுள்ளனர்.

இதேவேளை வடக்கு, கிழக்கில் நினைவேந்தல் நிகழ்வுகள் மிகக் கவனமாக ஆராயப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் கூறியிருந்தார். தெற்கில் உள்ளவர்கள் நினைவேந்தல் என்பது பயங்கரவாதம் என்று கூறுகின்றனர். இவர்கள் கூறுகின்றார்கள் என்பதற்காக வடக்கு, கிழக்கில் அதனை அவ்வாறு பார்க்க முடியாது. இது நெறிமுறையை மீறும் விதமாகும். நீங்கள் அந்த சட்டத்தை உங்களுக்கு ஏற்றவாறு தவறாக பயன்படுத்த முடியாது.

நீங்கள் மாற்றத்தை செய்ய வேண்டுமென்றால் ஒருவருடத்தில் அதனை செய்ய வேண்டும். அதனை பின்னர் செய்ய முடியாது. காலதாமதம் செய்தால் பின்னர் நெருக்கடிகளை ஏற்படுத்தும். தெற்கில் உள்ளவர்கள் முறைப்பாடு செய்வதற்காக வடக்கு, கிழக்கில் நினைவேந்தல்களை வித்தியாசமாக பார்க்க முடியாது. இதனால் பழைய அரசாங்கம் போன்றே கஷ்டப்பட வேண்டிவரும்.

அரசாங்கம் இந்த விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். அத்துடன் அரசியல் கைதிகள் தொடர்பிலும் கவனம் செலுத்தி அவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## கப்பல்களை திருப்பியனுப்பல்...

இந்த முறைப்பாடு தொடர்பில் சுங்க அதிகாரிகளின் சங்கத் தலைவர் அமில சஞ்சீவ கருத்துத் தெரிவிக்கையில்,

சுங்கத்தினால் ஏற்படும் கொள்கலன் வெளியிடும் செயற்பாடுகளின் காலதாமதத்தால் ஏற்படும் கொள்கலன் நெருக்கடியின் காரணமாக கொழும்பு துறைமுகத்துக்கு வரவிருந்த 30 வரையான கப்பல்கள் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மற்றும் துறைமுக அமைச்சர் ஆகியோரிடம் ஒருசிலர் கூறியிருக்கிறார்கள். அதனூடான இறக்குமதி, ஏற்றுமதி செயற்பாடுகள் மற்றும் மீள் ஏற்றுமதி செயற்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்பட்டிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது.

இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட பிரிவுகளில் நாங்கள் விசாரணை செய்திருந்தோம். இதன்போது சம்பந்தப்பட்ட முனையங்கள் உள்ளிட்ட பிரிவுகள், அவ்வாறு கப்பல்கள் எதுவும் திருப்பி அனுப்பி வைக்கப்படவில்லை என்றே கூறியிருந்தார்கள். எனவே, இதுதொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும்.

இந்த தகவல் தவறு என்பது உறுதிப்படுத்தப்படுமாக இருந்தால் எந்த நோக்கத்துக்காக இந்த கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது என்பது தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவு திணைக்களம் தெளிவான விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும். 30 கப்பல்கள் திருப்பி அனுப்பி வைத்தல் என்பது மிகவும் பாரதூரமான விடயமாகும் என்று குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பில் தீர்க்கமாக கலந்துரையாடியதன் பின்னரே முறைப்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கடந்த சனிக்கிழமை சுங்க பணிப்பாளர் நாயகத்தின் கண்காணிப்பில் சுங்க பணிப்பாளர் மற்றும் இன்னுமொரு சுங்க பணிப்பாளரும் இணைந்து பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்கப்பட்ட 323 கொள்கலன்கள் எவ்வித பரிசோதனையுமின்றி விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் அந்தச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்நிலையில், இவ்வாறு பரிசோதனைகள் எதுவுமின்றி 323 கொள்கலன்களை விடுத்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்து சுங்க தொழிற்சங்க ஒன்றியம் நேற்று முன்தினம் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதியுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையை தொடர்ந்து அந்த தொழிற்சங்க நடவடிக்கை கைவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இந்தச் சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணைகளை முன்னெடுப்பதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இந்த சந்திப்பில் தொழிற்சங்கங்களிடம் அறிவித்திருக்கிறார்.

## ஆய்வுக்கப்பல்களுக்கு...

*(நா. தினுஷா)*

சீன ஆய்வுக் கப்பல்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தற்காலிகத் தடை தொடர்பில் ஆராய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. எனவே, குழுவினால் வழங்கப்படும் இறுதி பரிந்துரைகளுக்கமைய விரைவில் புதிய நிலையான இயக்க நடைமுறைகள் (SOP) அறிமுகப்படுத்தப்படும் என்று வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

சீன விஜயம் குறித்து விளக்கமளிக்கும் வகையில் அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (22) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

சீன ஆய்வுக் கப்பல்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தற்காலிக தடை தொடர்பில் ஆராய குழுவொன்றை நியமிக்க அமைச்சரவை தீர்மானமொன்றை எடுத்துள்ளோம். சகல நாடுகளிலும் இருந்து வரும் ஆய்வுக் கப்பல்கள் தொடர்பில் தற்போது நடைமுறையில் இருக்கும் நிலையான இயக்க நடைமுறையை மறுசீரமைப்பு செய்து புதிய நிலையான இயக்க நடைமுறையை தயாரிப்பதற்கு விசேட குழுவொன்றை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் என்ற அடிப்படையில் என் தலைமையில் குழுவொன்றை நியமித்து கப்பல்கள் இலங்கை கடல் எல்லைக்குள் நுழையும்போது மேற்கொள்ளவேண்டிய அளவுகோள்கள் எவை என்பது தொடர்பில் இறுதி இணக்கப்பாட்டை ஏற்படுத்தவும் குழு நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவின் பரிந்துரைகளுக்கமையவே நிலையான இயக்க நடைமுறைகள் புதுப்பிக்கப்படும்.

முதலில் வழங்கப்பட்டிருந்த இடைக்கால தடைக்காலமே நிறைவடைந்துள்ளது. ஆனால் நிலையான இயக்க நடைமுறைகள் அவ்வாறே இருக்கின்றன. இந்த இடைக்காலப்பகுதியில் ஆய்வுக் கப்பலொன்று வருமாக இருந்தால் தற்போதுள்ள நிலையான இயக்க நடைமுறைகளுக்கமையவே நடவடிக்கை எடுக்கப்படும். எதிர்கால செயற்பாடுகளுக்கு புதிய நிலையான இயக்க நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்படும். மிக விரைவில் அவற்றை அறிமுகப்படுத்த எதிர்பார்த்துள்ளோம் என்றார்.



தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2025 ஜனவரி, 23ஆம் திகதி, வியாழக்கிழமை

# வேலியே பயிரை மேயலாமா?

நாட்டில் அண்மைக் காலங்களில் இடம்பெற்ற குற்றச்செயல்கள் மற்றும் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் பாதுகாப்பு தரப்பைச் சேர்ந்த பலர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ள செய்தி எமது கவனத்தை ஈர்த்திருக்கிறது.

கைது செய்யப்பட்டுள்ளவர்களில் இராணுவ மேஜர் ஒருவர், ஏனைய தரங்களில் உள்ள 6 அதிகாரிகள், ஒரு பொலிஸ் அதிகாரி மற்றும் ஒரு சிவில் பாதுகாப்பு அதிகாரி ஆகியோர் உள்ளடங்குவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கிளீன் ஸ்ரீலங்கா திட்டம் தொடர்பான விவாதத்தின் போதே அவர் இதனைக் கூறினார்.

*‘‘கடந்த செப்டெம்பர் 23ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் நாட்டில் இடம்பெற்ற குற்றச்செயல்கள் தொடர்பில் அவதானம் செலுத்தினால் இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர், இருவர் இதில் தொடர்புபட்டுள்ளனர். இந்த தினங்களில் இராணுவ மேஜர் ஒருவர், ஏனைய தரங்களில் உள்ள 6 அதிகாரிகள், ஒரு பொலிஸ் அதிகாரி மற்றும் ஒரு சிவில் பாதுகாப்பு அதிகாரி ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*திட்டமிட்ட குற்றக் கும்பலைச் சேர்ந்த 15 பேரும் அவர்களுக்கு உதவிய 15 பேரும் கைதாகியுள்ளனர்.*

*அத்துடன் இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் ரி 56 துப்பாக்கிகள் -7, பிஸ்டல் ரக துப்பாக்கிகள் 10, ரிவோல்வர்கள் 14,வெடிமருந்துகள் பயன்படுத்தும் துப்பாக்கிகள் 461, போர 12 ரக துப்பாக்கிகள் 58 என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.*

*அத்துடன், இந்த 2 மாதங்களுக்குள் 354 கிலோகிராம் ஹெரோயின், 3,847 கிலோகிராம் கேரள கஞ்சா, 3.8 கிலோகிராம் கொக்கெய்ன், 181.9 கிலோகிராம் ஹஷிஷ் மற்றும் 759 கிலோகிராம் ஐஸ் போதைப்பொருள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் குறிப்பிட்டுள்ளார்’’* அமைச்சர் ஆனந்த விஜேபால.

படைத்தரப்பு குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருவது புதிய விடயமல்ல. சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்கவின் படுகொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்களாக கருதப்படும் இராணுவத்தினர் சிலர் ரிவிர பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் உபாலி தென்னகோன் மற்றும் அவரது மனைவி மீதான தாக்குதல், நேஷன் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் கீத் நொயர் மீதான தாக்குதல் ஆகியவற்றுடன் தொடர்புபட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளன.

அதில் தாக்குதலுக்கு அல்லது குற்றச் செயலை அரங்கேற்றுவதற்கு முன்னர் ஒரு தனிப்படை குறித்த இலக்கு வைக்கப்படும் நபரை வேவு பார்ப்பதும் தாக்குதலை மற்றொரு தனிப்படை நடத்துவதும் அதன் பின்னர் பிறிதொரு குழு சாட்சியங்களை அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் இது வரையிலான விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளன.

அதேசமயம் வெலிகந்த, நாமல்கம பிரதேசத்தில் தொல்பொருள் அகழ்வு முயற்சி அல்லது குற்றச் செயலில் ஈடுபட்டதாக சந்தேகத்தின் பேரில் கடந்த வருட இறுதியில் இராணுவத்தினர் இருவர் உட்பட 11 பேர் கைதானதுடன் மூன்று மோட்டார் வாகனங்கள் மற்றும் ஒரு கெப் வண்டி என்பனவும் கைப்பற்றப்பட்டன.

இராணுவத்திலிருந்து தப்பிச் சென்று சேவைக்குத் தகவல் தெரிவிக்காத சிலர் தலைமறைவாக இருப்பதுடன் நாட்டில் பல்வேறு இடங்களில் குற்றங்கள், திருட்டுக்கள் மற்றும் சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு வணிகர்கள், பாதாள உலகத் தலைவர்கள் மற்றும் இதர பங்குதாரர்கள் ஆதரவு வழங்குவதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. அத்துடன் சில மதகுருமார்கள் அல்லது அரசியல் அதிகாரங்களைப் பயன்படுத்தி அவர்கள் குற்றச் செயல்களில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

இராணுவத்திலிருந்து தப்பிச் சென்று தலைமறைவாக உள்ள இராணுவத்தினருக்கு வேலைவாய்ப்பை வழங்குதல் குற்றவியல் தண்டனையின் 133 ஆவது பிரிவின் படி நீதிமன்றத்தில் தண்டிக்கப்படும் குற்றமாகும். கடந்த ஐந்து வருட காலப்பகுதியில் சுமார் 25,000 பேர் இராணுவ சேவைக்கு சமூகமளிக்கவில்லை எனவும் விடுமுறை பெறாத நிலையிலேயே அவர்கள் சென்றுள்ளதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, கடந்த காலங்களில் மேல் மற்றும் தென் மாகாணங்களில் மக்களைக் கொலை செய்வதற்காக, துப்பாக்கி ஏந்தியவர்களாகவும் மோட்டார் சைக்கிள் ஓட்டிகளாகவும் பயன்படுத்தப்பட்டவர்களில் பெரும்பான்மையானவர்கள் எதுவித அறிவித்தலுமின்றி சேவைக்கு திரும்பாத இராணுவத்தினர் என்றும் தெரியவந்துள்ளது.

இராணுவத்தினர் என்ன குற்றம் செய்தாலும் தண்டிக்கக் கூடாது என தெற்கில் அபிப்பிராயம் நிலவுகிறது.

இலங்கை மக்கள் சமூகத்தின் மத்தியில் படையினர் மற்றும் காவல்துறையினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கக்கூடாது என்ற நிலைப்பாடு புறையோடிப்போயுள்ளது. படையினர் என்ன குற்றச் செயலிலும் ஈடுபட முடியும், அவர்களை தண்டிக்கக் கூடாது என்ற சமூகக் கருதுகோள் சிலரிடம் ஆழமாக பதிந்துள்ளது. இந்த நிலைமையானது மிகவும் பயங்கரமானதும் ஆபத்தானதுமாகும். குறிப்பாக இராணுவப் படையினர் தண்டிக்கப்படுவது குறித்து தெற்கு சமூகம் ஆத்திரமடையும் நிலையே காணப்படுகின்றது .குற்றச் செயல்களை எடுத்துக்கொண்டால் அதில் பெரும் பங்கு படைத்தரப்புக்குள்ளது. அண்மையில் இடம்பெற்ற மன்னார் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கும் கொழும்பில் பணிபுரியும் படைச் சிப்பாய் ஒருவரே சம்பந்தப்பட்டுள்ளமை தெரியவந்தது. இந்த நிலைமை நல்லதல்ல. இந்த குற்றச் செயல்களுக்காக ஒட்டுமொத்த இராணுவத்தையும் சாட முடியாது. என்றாலும் இந்த விடயத்தில் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் விடுமுறையில் வெளியேவந்து குற்றச் செயல்களில் ஈடுபட்டு பின்னர் முகாம்களுக்குள் படைச்சிப்பாய்கள் புகும் நிலைமை ஏற்படுமானால் நாட்டில் சட்டம் நீதி கணக்கிலேயும் எடுக்கப்படாத காட்டாட்சி நிலைமை உருவாகலாம்.ஜனாதிபதியும் முப்படைத்தளபதிகளும் இந்த விடயத்தை மிகவும் கவனத்திலெடுத்து செயற்படவேண்டும்.

# துன்பம் தாங்குதலே தவம்!



வாழ்கின்ற வாழ்க்கையைத் துன்பமின்றி இன்பமாக மாற்றிக்கொள்ளத் துடிக்கும் வாசகப் பெருமக்களே! வணக்கம்!.

எல்லாவற்றையும் துறந்து பற்றற்ற நிலையில் காடுகளில் உலவிக்கொண்டிருக்கின்ற துறவிகளுக்கு மட்டுமல்ல, எல்லா ஆசா பாசங்களோடும் - சொந்த பந்தங்களோடும் சுற்றம் சூழ நாட்டில் - வீட்டில் வாழ்ந்துகொண்டிருக்கிற இல்லறவாசிகளுக்கும் வாழ்க்கை என்பது தவம் போன்றதேயாகும். தவம் என்பது மனிதர் ஒவ்வொருவரையும் நெறிப்படுத்துகிற வாழ்வியல் ஒழுங்குமுறையாகும்.

தவம் என்பது, பசி, தாகம், நோய்கள் போன்ற உடலியல் துன்பங்களையும் ஆசை, கோபம், காமம், களவு, பதற்றம் போன்ற மனவியல் துன்பங்களையும் பக்குவமாக எதிர்கொண்டு அவற்றை வெற்றிகண்டு அவற்றிலிருந்து வெளிவருவதாகும்.

தமிழில் ‘நோற்றல்’ என்னும் அழகான ஒரு தமிழ்ச்சொல் உண்டு. நோன்பு என்கிற சொல்லை அடியாகக் கொண்டது அச்சொல். எவ்வளவு துன்பம் வந்தாலும் மனவுறுதியோடும் உடல் வலிமையோடும் தாங்கிக்கொள்வதே நோற்றல் ஆகும். நோன்பிருத்தல் என்றால் விரதமிருத்தல் என்று பொருள். நோன்பு காலங்களில் உணவுண்ணா நோன்பிருப்பது எல்லோரும் கடைப்பிடிக்கின்ற ஒன்றாகும். பசியினால் வரக்கூடிய வேதனைகளைத் தாங்கிக் கொள்வது விரதமிருத்தல் ஆகும்.

உண்ணா நோன்பிருந்து உடம்பையும் மனத்தையும் வலிபொறுக்கும் பக்குவப்படுத்துவதே தவமாகும். பெரும்பெரும் இலக்குகளோடும் குறிக்கோள்களோடும் இயங்கத் தொடங்கும் மனிதர்களைச் சிறுசிறு துன்பங்களும் தொல்லைகளும் சிறைப்படுத்திவிடக் கூடாது. அதற்காகவே அவர்கள் நோன்பிருந்து உடலையும் உள்ளத்தையும் உறுதியாக்கும் பக்குவம் பழகுகிறார்கள். தவம் என்பது துறவிகளுக்கு மட்டுமல்லாது, இல்லறத்தார்க்கும் உடனடியாக வசப்பட்டு விடாது. பழகப் பழகவே தவமும் கைகூடும். அதற்கு முதலில் மனம் பழக்கப்பட வேண்டும். அப்போதுதான் பெரிதினும் பெரிதான குறிக்கோள்களை அடைய எண்ணும் எண்ணம் உறுதிப்படும். அடுத்து, உடல் பழக்கப்பட வேண்டும். உண்ணுதல், உறங்குதல், உல்லாச வாழ்வில் திளைக்க விரும்புதல் போன்ற மதிப்புக்குறைந்த உடலியல் ஆசைகளில் விருப்பங்களைச் செலுத்தாமல் அடக்கவும் - அடங்கவும் பழக வேண்டும்.

எல்லா மனிதர்களுக்கும் இலட்சியங்கள் உள்ளன. அன்றாட வாழ்வில் அன்றைய உணவை அல்லாடாமல் பெறுவதே சிலருக்குப் பெரும்பாடாய் இருக்கும். இவர்களால் வாழ்வில் உயர்ந்த சிகரங்களை நினைத்துக்கூடப் பார்க்க முடியாது. தேடிச்சோறு நிதம் தின்று, பல சின்னஞ்சிறு கதைகள் பேசி, நரைகூடிக் கிழப்பருவம் எய்தி மாய்ந்துவிடும் வேடிக்கை மனிதர்களைப் போல இவர்கள் வீழ்ந்து விடுவார்கள். பழகப் பழகப் பாலும் புளிக்கும் என்பது போலப் பழகப் பழக வேம்பும் சுவைக்கும் எனும்படியாக வலிபொறுக்கும் வாழ்வியல் பழகுபவர்களே, புடம்போட்ட தங்கமாய் ஜொலிக்கத் தொடங்குவார்கள்.

இந்த உலகில், இருப்பவர்கள் அதிகமா? இல்லாதவர்கள் அதிகமா? என்கிற ஒரு கேள்வியைப் படித்தவர், படியாதவர் என யாரிடம் கேட்டாலும் அவர்கள் மாறுபாடு ஏதுமின்றிச் சொல்லக்கூடிய ஒரே பதில், இல்லாதவர்தாம் அதிகம் என்பதாகத்தான் இருக்கும். இப்போது மட்டுமல்ல, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பும் கூட இந்தக் கேள்விக்கான பதில் இதுவாகவே இருந்திருக்கிறது. இந்தக் கேள்வி பதிலில் என்ன சிறப்பென்றால், கேள்வி கேட்டவரும் பேரறிஞர். பதில் சொன்னவரும் பேரறிஞர். இருவரும் ஒரே அறிஞர்கள். அவர்தாம் திருவள்ளுவர் என்னும் அறிவுப் பேராசான்.

‘இலர் பலராகிய காரணம் நோற்பார் சிலர்
பலர் நோலா தவர்’

இந்த உலகில் இல்லாதவர்களே பலராக இருக்கின்றனர் என்கிற உலகியல் கணக்கெடுப்பைக் குறிப்பிடுகிற திருவள்ளுவர், அதற்கான காரணத்தை அலசி ஆராய்ந்து நமக்கு விடையும் பகர்கிறார். ஆம், எல்லோருக்கும் இலட்சியங்கள் உள்ளன. எல்லோருக்கும் குறிக்கோள்கள் உள்ளன. ஆனால், கொண்ட குறிக்கோளையும் இலட்சியத்தையும் எல்லோருமா அடைந்து விடுகிறார்கள்? இருபது பேர் கலந்துகொண்டு ஓடுகிற ஓட்டப்பந்தயத்தில் இருபது பேருமா முதலிடத்தை எட்டிப் பிடிக்கிறார்கள்? இல்லையே! ஓரிருவர் மட்டும்தானே முதலிடம் வர முடிகிறது. மற்றவர்களிடம் என்ன குறை? நாட்டில் இல்லாதவர்களும் அதிகம் பெருகியிருக்க என்ன குறை? முறையான பயிற்சியில்லை. வலி தாங்கி, துன்பங்கள் பொறுத்து, தடைகளைத் தகர்க்கிற பக்குவமும் உறுதியும் பெரும்பான்மையானவர்களுக்கு இல்லை. தவம் என்பதே மனத்தையும் உடம்பையும் பழக்கிப் பக்குவப்படுத்தலேயாகும்.

பக்குவம் என்பது ஒருநாளில் வந்து விடாது. துன்பமாயினும் இன்பமாயினும் பழகப் பழகத்தான் பக்குவம் ஆகும். வாழ்க்கையில் வெற்றிகரமான குடும்பஸ்தராவதும் அவ்வளவு சுலபமில்லை. அதே போலத் துறவறத்திலும் சாமியாராகப் போவதும் அவ்வளவு சுலபமான காரியமில்லை. தவம் என்பது, கீழான எண்ணங்கள் தவிர்த்து, ஒருமித்த சிந்தனையில், கொண்ட குறிக்கோளை நோக்கி மனத்தைச் செலுத்துவதாகும்.

ஓர் ஊரின் மைதானத்தில் நடைபெற்ற ஒரு பிரபலமான பேச்சாளரின் பக்தி உபன்யாசத்தை மக்களோடு மக்களாகச் சேர்ந்து அமர்ந்து கவனமாக ஒரு குரங்கும் கேட்டது. தவத்தின் வலிமையையும் அருமையையும் தவமிருக்கும் வழிமுறையையும் சொல்ல வேண்டிய மந்திர ஜெபங்களையும் சொற்பொழிவாளர் வெகு அழகாக எடுத்து விளக்கினார். சொற்பொழிவை முழுமையாகக் கேட்ட குரங்கு, தானும் முயன்று ஒரு தவசீலராக ஆகிவிடவேண்டுமென்று முடிவெடுத்தது. அருகிலிருந்த காட்டுக்குள் சென்று அங்கிருந்த பாறை ஒன்றின்மேல் அமர்ந்து, யோகியரைப்போலக் கண்களை மூடித் தவமியற்றத் தொடங்கியது.

சரி, இடையில் பசித்தால் என்ன செய்வது? குரங்கின் மனதுக்குள் ஒரு முக்கியமான கேள்வி ஓடியது. உணவு முக்கியமில்லையா? தவத்தைச் சிறிதுநேரம் கலைத்துவிட்டுக் காட்டுக்குள் சென்று, மரத்துக்கு மரம்தாவி, நிறையக் கனிகளைப் பறித்துக்கொண்டு மீண்டும் பாறைக்கு வந்தது. பாறையின் ஒரு மூலையில் கனிகளை வைத்துவிட்டுக் குரங்கு உபன்யாசகர் மேடையில் சொல்லிக்கொடுத்த ஜெபத்தை முணுமுணுத்தவாறே தனது தவத்தைத் தொடர்ந்தது. மீண்டும் குரங்கின் மனவோட்டத்தில் ஒரு சிந்தனை. இப்படி உட்கார்ந்தபடியே ரொம்ப நேரம் தவமிருந்துவிட்டுத் திடீரென்று பசி வரும்போது எழுந்திருக்க முடியாத நிலை உடம்பில் வந்து விட்டால் என்ன செய்வது? யோசித்த குரங்கு சிறிது ஜெபம் சொல்வதை நிறுத்திவிட்டுப் பாறையின் மூலையில் வைத்திருந்த கனிகளையெல்லாம் எடுத்துக் கொண்டு பாறையின் நடுவில் தாம் தவமிருக்கும் இடத்துக்கருகில் குவித்து வைத்துக்கொண்டு மீண்டும் தவத்தைத் தொடங்கியது.

சிறிது நேரத்தில் மீண்டும் குரங்கின் மனவோட்டத்தில் மற்றுமொரு கேள்வி. பழங்கள் பக்கத்தில்தான் இருக்கின்றன. இருந்தாலும், பசி வரும் நேரத்தில் மயக்கம் ஏற்பட்டுக் கைகால் நீட்ட முடியாத நிலை வந்துவிட்டால் எப்படிச் சாப்பிடுவது? உடம்பை ஊக்கமுள்ளதாக எப்படி மாற்றுவது? அவ்வளவுதான். தன் அருகிலேயே குவித்து வைத்திருந்த பழங்களில் ஒன்றை எடுத்துத் தன் வாய்க்குள் போட்டுச் சுவைக்கத் தொடங்கியது. சுவையாக இருந்ததால் அடுத்தடுத்துப் பழங்கள் குரங்கின் வாய்க்குள் போகத் தொடங்கின.

அடுத்தவேளை உணவைப் பற்றி அப்புறம் பார்த்துக் கொள்வோம். இந்தவேளைப் பசிக்கு இவையனைத்தையும் இப்போதே உண்டு முடித்து விடுவோம் என்று எல்லாப் பழங்களையும் தின்று ஏப்பம் விட்டு, அந்தப் பாறையிலேயே உண்ட களைப்புத்தீர ஒரு குட்டித்தூக்கமும் போடத் தொடங்கிவிட்டது. இனியெங்கே அந்தக் குரங்கு தவமிருக்கப்போகிறது?

சின்னஞ்சிறிய தொல்லைகளாக, அன்றாடம் உண்டாகிற தொந்தரவுகளிலேயே கவனஞ்செலுத்தத் தொடங்கி, நாற்றச் சகதியில் உழலும் ஏதோபோலத் தடுமாறத் தொடங்கிவிட்டால், பாய்ந்து வரும் கங்கையாற்றில் நீச்சலடிப்பது எப்படி? வானுயர ஆர்ப்பரித்துவிழும் நீரருவிகளில் குளித்து மகிழ்வது எப்படி? கடலை நீந்திக் கடப்பதென்று இலட்சியம், உறுதி செய்து விட்டால் கடற்கரையில் நின்றுகொண்டு அலைகளை எண்ணிப்பார்த்து, பயந்துகொண்டிருந்தால் எப்படி? எண்ணித் துணிக கருமம்! என்றுதானே வள்ளுவரும் ஊக்கப்படுத்துகிறார்.

உற்ற நோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்துக்கு உரு

என்ற திருக்குறளில் தவம் என்பது எப்படியிருக்கும் என்று வார்த்தைகளால் வடிவப்படுத்த முனைகிறார் திருவள்ளுவர். வருகின்ற துன்பமாகிய நோய்களையெல்லாம் தாங்கிக்கொள்ளுதலும் தாம் துன்பப்பட்டாலும் தம்மால் பிற உயிர்களுக்குத் துளியளவும் துன்பம் நேராமல் பார்த்துக்கொள்ளுதலும் ஆகிய இரண்டும்தான் நல்ல தவசீலருக்கு அடையாளம்.

வாழ்நாள் முழுவதும் மகிழ்ச்சியாக இருந்துகொண்டே நல்ல இலட்சியங்களை அடைய முடியாதா? - என்று சிலர் கேட்கலாம். உளிவலி ஏற்காமல் பாறைகள் சிற்பங்கள் ஆவதில்லை. மேடுகள் தகர்க்கப்படாமலும் பள்ளங்கள் நிரப்பப்படாமலும் நல்ல பாதைகள் உருவாவதில்லை. பச்சையாக இருக்கின்ற கறிகாய்களும் இறைச்சிகளும் பக்குவமாக நெருப்பின் துணைகொண்டு சமைக்கப்படாமல் அவை சுவையான உணவுகள் ஆவதில்லை. செய்வதற்கு அரிய செயல்களை அரிதின் முயன்று, வலிகளைப் பொறுத்துக்கொண்டு செய்து முடிப்பவர்களே சாதனையாளர்கள் என்று கொண்டாடப்படுகின்றனர். அரிய செயல்களே அருமையான செயல்களாகப் பிற்காலத்தில் போற்றப்படுகின்றன.

வலிகளும் துன்பங்களும் எதிர்கொள்ளுகிற மனிதர்களைப் பொறுத்துக் கடினமானதாகவோ அல்லது இலேசானதாகவோ அமைகின்றன. சிலர் துணிந்து எதிர்த்து நின்று போராடி வெற்றி காண்கிறார்கள். சிலர் வலிகளையும் துன்பங்களையும் அவற்றின் போக்கிலேயே போகவிட்டு, எதுவும் தெரியாததுபோல விலகிக் கொள்கிறார்கள். அல்லது நகர்ந்து கொள்கிறார்கள். இரண்டு விதமான உத்திகளுமே தடைகளை வெல்லும் உத்திகள் தாம். வருகின்ற வலிகளும் துன்பங்களும் தொல்லைகளுமே அவற்றை எதிர்கொண்டு வெல்வதற்கான வழிமுறைகளையும் ஆயுதங்களையும் நமக்கு உணர்த்திவிடுகின்றன. எனவே, எதிர்த்துப் போரிடுவது அல்லது தாங்கிக்கொள்வதைக்கூட கடினமானதாகக் கருதாமல் விளையாட்டுப் பாங்காக எடுத்துக் கொண்டால் இருநூறு சதவீதம் வெற்றி நிச்சயம்.

எல்லா ஞானியரும் ‘‘துன்பம் வரும் வேளையிலே சிரிங்க!’’ - என்றுதான் கூறியிருக்கிறார்கள், கஷ்ட காலங்களில் கடகடவென்று வெளிப்படையாகச் சிரித்துக்கொண்டிருந்தால், பார்க்கிறவர்கள் நம்மை ஒருமாதிரிக்கூடப் பார்க்க நேரிடும். துன்பத்தைப் பார்த்துச் சிரிப்பதென்பது சலிப்போடு அல்லாமல், மகிழ்ச்சியான மனோபாவத்தோடு எதிர்கொள்வதாகும். மகாகவி பாரதி, மரணத்தைக் கூட வெகு லாவகமாகவும் துணிச்சலாகவும் “காலா! வாடா! உன்னைக் காலால் உதைக்கிறேன் வாடா!” - என்று பாடி அழைத்திருக்கிறார்.

வாழ்வில் இடையூறுகளும் தடைகளும் இல்லாத தருணங்களே இல்லை. நாம் பெரிதினும் பெரிதான இலட்சியங்களை வகுத்துக்கொண்டு அவற்றை நோக்கிப் பயணிக்கத் தொடங்கிவிட்டால், எவ்வளவு பெரிய தடைகளும் தீயினில் தூசுபோலக் காணாமல் போகும். வலி தாங்குதலே தவம்.

நன்றி - மாலைமலர்

# இன்றைய நாளில்..

- 1556 – சீனாவின் சென்சி மாகாணத்தைத் தாக்கிய நிலநடுக்கத்தில் 8,30,000 பேர் வரை இறந்தனர். உலக வரலாற்றில் மிக அதிகமானோர் கொல்லப்பட்ட நிலநடுக்கம் இதுவாகும்.
- 1816 – கண்டி இராச்சியத்தின் கடைசி மன்னர் விக்கிரமராஜசிங்கனும் அவரது குடும்பமும் இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்டனர்.
- 1924 – விளாடிமிர் லெனின் ஜனவரி 21இல் இறந்ததாக சோவியத் ஒன்றியம் அதிகாரபூர்வமாக அறிவித்தது.
- 1950 – இஸ்ரேலின் சட்டசபை எருசலேமை இஸ்ரேலின் தலைநகராக அறிவித்தது.
- 1957 – சென்னை மாகாணத்தில் தமிழ் ஆட்சி மொழியாக அறிவிக்கப்பட்டது.
- 1998 – யாழ்ப்பாணம், புங்குடுதீவில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் முகாம் விடுதலைப் புலிகளால் தாக்கியழிக்கப்பட்டதில் அம்முகாமிலிருந்த ஒன்பது பேர் கொல்லப்பட்டனர்.
- 2002 – அமெரிக்க ஊடகவியலாளர் டேனியல் பெர்ல் கராச்சியில் கடத்தப்பட்டார். இவர் பின்னர் கொலை செய்யப்பட்டார்.
- 2003 – பயனியர்-10 விண்கலத்தில் இருந்து கடைசித் தடவையாக மிகவும் மெலிதான சமிக்ஞை கிடைத்தது.

## நக்கல் நமசிவாயம்

எதிர்க்கட்சியில இருக்கிற ஆட்கள் பரிசுத்தவான்கள் போலத்தானே பேசுறாங்க..



# உள்ளூராட்சித் தேர்தலில் தோல்வியின் எல்லையிலுள்ள கட்சிகள் போட்டியிடுவது தேசிய மக்கள் சக்திக்கு சவாலாகாது

## விவசாய அமைச்சர் லால்காந்த தெரிவிப்பு



ஜே.எம்.ஹாபீஸ்

தோல்வியின் எல்லையிலுள்ள கட்சிகள் ஒன்றிணைந்து உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் போட்டியிடுவது தேசிய மக்கள் சக்திக்கு ஒரு சவாலாகாது - என்று விவசாயம், கால்நடை, நீர்ப்பாசனம் மற்றும் காணி அமைச்சர் கே.டி.லால்காந்த தெரிவித்தார்.

கண்டியில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு இவ்வாறு தெரிவித்த அமைச்சர், மேலும் கூறுகையில்,

''தோல்வியின் எல்லையிலுள்ள கட்சிகள் ஒன்றிணைந்து உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் போட்டியிடுவது தேசிய மக்கள் சக்திக்கு ஒரு சவாலாகாது. பூச்சியத்துடன் மேலும் ஒரு பூச்சியம் சேர்ந்தால் அதுவும் பூச்சியம்தான். எனவே, தோல்வியடைந்தவர்கள் பலர் ஒன்றிணைந்தாலும் இல்லாவிட்டாலும் எல்லாம் ஒன்றுதான்.

நீதிமன்ற உத்தரவொன்று இருப்பதன் காரணமாக உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் காலதாமதமின்றி நடத்தப்படும்.

மார்ச் இறுதியில் அல்லது ஏப்ரல் ஆரம்பத்தில் நடக்கவிருக்கும் மேற்படி உள்ளூராட்சி சபைத் தேர்தல் எமக்கு இலகுவான வெற்றியைத் தரும். இதுவரை அரசு மேற்கொண்டு வரும் செயற்றிட்டங்களுக்கு பொதுமக்கள் ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

பொதுமக்களால் நிராகரிக்கப்பட்ட கட்சிகள் ஒன்றிணைவது நல்லது. ஏனென்றால், அவை ஒன்றிணைந்து மீண்டும் தோல்வியடைந்த பிறகு அவற்றுக்கு கூறுவதற்கு எந்தக் காரணமும் இருக்காது. அக்கட்சியினர் தாம் பிரிந்து போட்டியிட்டதால்தான் தோல்வியடைந்தோம் என்ற போலி காரணம் இத்துடன் முடிந்துவிடும்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை மையமாக வைத்து எமக்கு மேற்கொள்ளவேண்டிய எந்தப் பணியும் கிடையாது. ஏனென்றால், நாம் தற்போது மேற்கொள்ளும் பணிகளுக்குப் பொதுமக்கள் ஆதரவளித்து வருகின்றனர். எனவே, புதிதாக எதையும் மேற்கொள்ளவேண்டிய தேவை இல்லை.

அரிசிப் பிரச்சினை பற்றி பிரசாரம் செய்யுமளவுக்கு எதுவித பிரச்சினையும் கிடையாது. கண்டி மாவட்டத்தில் அரிசி தொடர்பாக எதுவித பிரச்சினையோ முறைப் பாடோ இதுவரை கிடைக்கப்பெறவில்லை.

சின்னாபின்னமான நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு விரும்பியோ விரும்பாமலோ நாம் சில தீர்மானங்களை எடுக்க வேண்டிவரும். சில உற்பத்திகளுக்கான வரிகள் அதிகரிக்கக் காரணமும் அதுவேயாகும். நாட்டு மக்களின் எதிர்காலம் குறித்து அவ்வாறான தீர்மானங்களை எடுக்கவேண்டியுள்ளது'' - என்றார்.

# ஹட்டன் கல்வி வலயத்தில் முறையற்ற ஆசிரிய இடமாற்றங்கள்

## தொழிற்சங்கக் கூட்டமைப்புகள் கண்டனம்

ஹட்டன் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் கடந்த காலங்களில் இடம்பெற்ற மோசடியான சம்பவங்களே தற்போதும் இடம்பெற்று வருவதாக ஹட்டன் கல்வி வலயத்தின் ஒன்றிணைந்த தொழிற்சங்கக் கூட்டமைப்பு விசனம் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் குறித்த அமைப்பு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

இடமாற்ற சபைகளின் தலையீடின்றி தன்னிச்சையாக இடம்பெற்றுவரும் ஆசிரியர் இடமாற்றங்கள் குறித்து எமது உறுப்பினர்கள் முறைப்பாடுகளை முன்வைத்தனர்.

இதையடுத்து தொழிற்சங்க அமைப்புகள் கடந்த 20ஆம் திகதி ஹட்டன் வலயக் கல்விப் பணிப்பாளரைச் சந்தித்தன.

இதன்போது இடமாற்ற சபை இல்லாமல் ஆசிரிய இடமாற்றங்களை செய்யவேண்டாம் என்றும் இடம்பெற்ற ஆசிரிய இடமாற்றங்களை நிறுத்திவைக்குமாறும் பணிப்பாளரிடம் உறுப்பினர்கள் கோரிக்கை முன்வைத்தனர்.

இடமாற்றங்கள் தொடர்பில் இடம்பெறும் மோசடிகளைத் தடுப்பதற்கு மேற்படி தொழிற்சங்கக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் ஒன்பது அம்சக் கோரிக்கையொன்றையும் வலயக்கல்விப் பணிப்பாளரிடம் கையளித்தனர்.

இடமாற்றங்கள் எவ்வாறு இடம்பெற வேண்டும் என்பதை அறிந்திருந்தும் இடமாற்ற சபையின்றி இந்தச் செயற்பாடுகள் இடம்பெற வலயக்கல்விப் பணிப்பாளர் எவ்வாறு அனுமதியளித்தார் என்பது குறித்தும் அங்கு கேள்விகள் எழுப்பப்பட்டன.

# வெளிநாட்டில் வேலை வாய்ப்பைப் பெற்று தருவதாகக் கூறி பண மோசடி

## சந்தேகநபர் கைது

எம்.ஏ.அமீனுல்லா



இத்தாலி மற்றும் ருமேனியாவில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி இளைஞர்களை ஏமாற்றி பல கோடி ரூபா பணத்தை மோசடி செய்த நபரை நேற்று முன்தினம் (21) கண்டி, தலாத்துஓயா பொலிஸ் அதிகாரிகள் குழு கைது செய்துள்ளது.

சந்தேக நபர் தனது வங்கிக் கணக்குக்குப் பல இலட்சம் ரூபா பணத்தை மாற்றியுள்ளாரென கண்டி, மைலப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவரால் தலாத்துஓயா பொலிஸுக்கு முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து, பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ள நிலையில், இது தொடர்பான தகவல்கள் பொலிஸாருக்குக் கிடைத்துள்ளன.

மேலும், சந்தேகநபர் சட்டவிரோத செயற்பாடு களில் பல்வேறு பெயர்களில் சில காலமாக ஈடுபட்டுவருவதாகத் தெரியவந்துள்ளது.

முறைப்பாடு செய்த நபருக்குச் சொந்தமான அரச வங்கியொன்றில் பேணப்பட்ட கணக்கிற்கு சந்தேகநபர் சுமார் 06 மாதத்தில் கிட்டத்தட்ட 90 இலட்சம் ரூபாவை மாற்றியுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

முறைப்பாடு செய்தவர் சந்தேகநபரின் நண்பர் எனவும் அவர் கணக்கில் பல இலட்சம் ரூபா பணம் வரவு வைக்கப்பட்டமை தொடர்பிலேயே முறைப்பாடு செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபர் வசித்த மயிலபிட்டி ஹத்பேய பிரதேசத்திலுள்ள வீட்டைச் சோதனையிட்ட போது 3இலட்சத்து 46ஆயிரத்து 480 ரூபா பணம் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, வெளிநாட்டு வேலை பெற்றுக் கொடுப்பதற்காக போலியாகத் தயாரிக்கப்பட்ட ஆவணங்கள், இரப்பர் ஸ்டாம்ப்கள், வெளிநாட்டு கடவுச்சீட்டுகள், இரண்டு கைத்தொலைபேசிகள், சாரதி அனுமதிப் பத்திரம் போன்றவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

மேலும், மோட்டார் வாகனப் பதிவுத்துறை என்ற போலி ஆவணமும் சிக்கியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் அம்பாந்தோட்டை, பிலியந்தலை போன்ற பல பிரதேசங்களைச் சேர்ந்தவர்களை உள்ளடக்கி சில காலமாக இந்த மோசடியை மேற்கொண்டு வந்துள்ளதுடன் சிலாபம், தியத்தலாவ முதலான பகுதிகளில் தங்கியிருந்து பல்வேறு பெயர்களில் நடமாடியுள்ளதாகவும் பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

சந்தேக நபர் தனது கணக்குகளுக்குப் பணத்தை மாற்றவில்லை என்பதுடன், முறைப்பாட்டாளர் மற்றும் பல நபர்களின் கணக்குகளுக்கு அவர் பணத்தை மாற்றியுள்ளதாக சந்தேகிக்கக்கூடிய தகவல்கள் இருப்பதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பதிவுசெய்யப்படாத வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்தை நடத்தி வரும் சந்தேகநபர் தொடர்பில் நாடளாவிய ரீதியில் பல பொலிஸ் நிலையங்களுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள் ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அனுருத்த பண்டாரநாயக்க மற்றும் பொலிஸ் அதிகாரி ஜானகி ஆகியோரின் பணிப்புரையின் பேரில் தலாத்துஓயா பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த அப்புஹாமி, உள்ளிட்ட குழு இந்த சுற்றிவளைப்பை மேற்கொண்டுள்ளனர்.

# மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேர்த் திருவிழா பெப். 18இல் ஆரம்பம்

மாத்தளை மஸாஹிம்

மாத்தளை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான மாசிமக மகோற்சவம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 18ஆம் திகதி ஆரம்பமாகி மார்ச் மாதம் 18ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளதாக மேற்படி ஆலயத்தின் அறங்காவலர் சபையினர் தெரிவிக்கின்றனர்.

பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறும் திருக்கொடி ஊர்வலத்தையடுத்து முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றம் இடம்பெற்று பூஜைகள் ஆரம்பமாகவுள்ளன.

தொடர்ந்து தினமும் அம்பாளுக்கு 108 அஷ்டோத்திர சங்காபிஷேகமும் விஷேட பூஜைகளும் அன்னதானமும் இடம்பெறும்.

மார்ச் மாதம் 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு சுதுகங்கை ஸ்ரீ ஏழுமுக காளியம்மன் ஆலயத்திலிருந்து காவடி ஊர்வலம் இடம்பெறுவதுடன், முற்பகல் 10 மணிக்கு தீ மிதிப்பும் 11 மணிக்கு வசந்த மண்டப பூஜையும் தொடர்ந்து ஒரு மணிக்கு மகேஸ்வர பூஜையும் இடம்பெறும்.

12ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு பிள்ளையார், முருகன், சிவனம்மபாள், அம்பாள், சண்டேஸ்வரி ஆகிய பஞ்சரதங்கள் பவனியும் 13ஆம் திகதி மாலை 7 மணிக்கு கற்பூரத் திருவிழாவும் நடைபெறும். அதைத்தொடர்ந்து 14ஆம் திகதி காலை 8 மணிக்கு பாற்குடபவனி ஆரம்பமாவதுடன், முற்பகல் 10 மணிக்கு தீர்த்த உற்சவமும் மாலை 7 மணிக்கு திருக்கொடி இறக்கமும் இடம்பெறவுள்ளன.

15ஆம் திகதி சண்டேஸ்வரி உற்சவமும் மாலை 6 மணிக்கு பூங்காவன உற்சவமும் இடம்பெற்று 18ஆம் திகதி இரவு ஸ்ரீ வைரவர் பூஜை நடைபெற்று மகோற்சவம் நிறைவுபெறும் எனவும் அறங்காவலர் சபையினர் தெரிவிக்கின்றனர்.

# மஸ்கெலியா தொடர் குடியிருப்பில் தீப்பரவல்

மஸ்கெலியா நிருபர்

மஸ்கெலியா பொலிஸ் பிரிவிலுள்ள ஆர்.பீ.கே. பிளான்டேஷனுக்கு உரித்தான ப்ரவுன்சீக் தோட்ட ப்ரவுன்சீக் பிரிவில் இலக்கம் ஒன்று தொடர் குடியிருப்பில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (21) 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இத்தீப்பரவலின்போது நான்கு குடியிருப்புப் பகுதிகளிலுமுள்ள கூரைகள் எரிந்துள்ளதாக மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவித்தார்.

ஏனைய 12 குடியிருப்புப் பகுதிகளுக்கு தீ பரவாமல் தடுக்க தோட்ட மக்களும் மஸ்கெலியா பொலிஸாரும் தடுத்துநிறுத்தியுள்ளனர்.

16 குடியிருப்புகளைக்கொண்ட தொடர் குடியிருப்பில் முதல் நான்கு குடியிருப்புப் பகுதிகளிலுள்ள கூரைகள் சேதமடைந்துள்ளன.

அந்த 16 குடியிருப்புப் பகுதிகளிலுமிருந்த மக்கள் தங்களது உறவினர் வீடுகளில் தங்கியுள்ளனரென மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவித்தார்.

# பெருந்தோட்டக் கம்பனிகளது உயரதிகாரிகளின் பங்குபற்றலுடன் விசேட கலந்துரையாடல்



பொகவந்தலாவை நிருபர்

பெருந்தோட்டக் கைத்தொழில் நிறுவனங்களின் பங்கேற்பு தொடர்பான விசேட கலந்துரையாட லொன்று நேற்று முன்தினம் (21) பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சில் இடம்பெற்றது.

குறித்த ஆரம்பகட்ட கலந்துரையாடல் பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளின் உயரதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது.

மேலும், இக்கலந்துரையாடலின்போது நிறுவனங்களின் தற்போதைய நிலை, தேசிய வேலைத்திட்டத்தின்போது அவர்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள், நிறுவனங்கள் தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டது.

இந்த கலந்துரையாடலின்போது, பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் கே.ஏ.சமந்த வித்யாரத்ன, பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப், தொழில் அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ, அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்திரகீர்த்தி உட்பட அமைச்சின் அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

# மத்திய மாகாண ஆளுநர் - பிரான்ஸ் தூதுவருக்கிடையே கலந்துரையாடல்

எம்.ஏ.அமீனுல்லா



மத்திய மாகாண ஆளுநர் பேராசிரியர் எஸ்.பி.எஸ்.அபயகோன் மற்றும் இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் திருமதி மேரி நோயல் டூரிஸ் (Mrs Marie Noelle Duris) ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று கண்டி ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இங்கு மத்திய மாகாண ஆளுநருக்கும் பிரான்ஸ் தூதுவருக்குமிடையில் உயர்கல்வி, கலாசாரம், சுற்றுலா, தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் இரு நாடுகளுக்குமிடையிலான வரலாற்று நட்புறவு மற்றும் உறவுகள் தொடர்பில் சிநேகபூர்வ கலந்துரையாடல் இடம்பெற்றது.

மேலும், பிரான்ஸ் அரசாங்கத்தின் அனுசரணையுடன் இந்நாட்டின் பொதுப் போக்குவரத்து சேவைகளை மேம்படுத்துவது உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இந்த நட்புறவுச் சந்திப்பை அடையாளப் படுத்தும் வகையில் மத்திய மாகாண ஆளுநர் பிரான்ஸ் தூதுவருக்கு நினைவுச் சின்னமும் வழங்கினார்.

இந்நிகழ்வில் மத்திய மாகாண ஆளுநரின் செயலாளர் திருமதி மஞ்சுளா மதஹபொலவும் கலந்துகொண்டுள்ளார்.

# ஒடிஸி ரயிலின் ஒன்லைன் டிக்கெட்டுகளில் மோசடி; ஆட்டோ சாரதி ஒருவர் 21 பயணச்சீட்டுகளுடன் கைது

எம்.ஏ.அமீனுல்லா

கொழும்பு கோட்டையில் இருந்து எல்ல நோக்கி பயணித்த ஒடிஸி ரயிலின் இ-டிக்கெட்டுகளில் மோசடி செய்துள்ளமை தொடர்பில் சந்தேகிக்கப்படும் முச்சக்கரவண்டி சாரதி ஒருவர், ரயிலின் 68 இருக்கைகளுக்கான 21 டிக்கெட்டுகளுடன் கண்டி பொலிஸ் நிலைய குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று (22) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அந்த டிக்கெட்டுகளுக்கு ரயில்வே திணைக்களம் நிர்ணயித்த விலையின்படி பெறுமதி 114000 ரூபா என பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டி புகையிரத நிலையத்திற்கு அருகில் முச்சக்கரவண்டியை செலுத்தி வரும் சந்தேக நபர் கண்டி-சுது ஹும்பொல பிரதேசத்தை சேர்ந்தவர் என தெரியவருகிறது.

கண்டி புகையிரத நிலையத்தில் சில காலம் பணிபுரிந்து, திருகோணமலைக்கு இடமாற்றம் பெற்ற நபர் ஒருவர் பயணிகள் போக்குவரத்து பஸ்ஸிலிருந்து முச்சக்கரவண்டி சாரதிக்கு இந்த டிக்கெட்டுகளை அனுப்பி வைத்துள்ளதாகவும் அவரை கைதுசெய்ய பொலிஸார் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

முச்சக்கரவண்டி சாரதியே டிக்கெட்டுகளை வாங்குபவர்களுக்கு வழங்குவதாகவும், அதற்காக அவருக்கு நாளாந்தம் 2500 ரூபா சம்பளம் வழங்கப்பட்டதாகவும் பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

டிக்கட் வாங்குபவர்கள் செலுத்திய தொகை இதுவரை வெளியாகவில்லை என்பதுடன், அவருக்கு தொலைபேசியில் தகவல் கொடுத்த நபரே டிக்கட் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகளை செய்திருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

மலையக புகையிரத்தின் எல்ல வரை செல்லும் புகையிரத இ-டிக்கெட்டுகள் இணையத்தில் வெளியாகி, சில வினாடிகளில் அனைத்தும் விற்றுத் தீர்ந்து விடுவதாகவும் அதன் பின்னர் வெளி ஆட்களுக்கு டிக்கெட்டுகளை அதிக விலைக்கு விற்கும் கும்பல் உள்ளது என கண்டி மாவட்ட இணைப்புக்குழுவில் கலந்துகொண்ட பிரதியமைச்சர் குற்றஞ்சாட்டியதுடன், கண்டி புகையிரத நிலையத்திற்கு அருகில் உள்ள வாகன நிறுத்துமிடத்தின் முச்சக்கரவண்டி சாரதிகள் சிலர் பயணச்சீட்டு மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் இது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என கண்டி மாவட்ட இணைப்புக் குழுவில் கலந்துகொண்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மூலிகை விற்பனை நிலையத்தில் போதை மாத்திரைகள் விற்பனை

தலவாக்கலை நிருபர்

ஹட்டன் நகரில் சிறுவர்கள் மற்றும் இளைஞர்களை இலக்கு வைத்து சட்டவிரோதமான முறையில் போதை மாத்திரைகள் விற்பனை செய்யப்பட்டுவந்த மூலிகை விற்பனை நிலையமொன்றை நேற்று முன்தினம் (21) மாலை சுற்றிவளைத்து, அங்கு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த 2111 போதை மாத்திரைகளை கைப்பற்றியதாக தலவாக்கலை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டதாகவும், சட்டவிரோதமான முறையில் போதைப்பொருள் விற்பனைசெய்த குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டதாகவும் தலவாக்கலை பொலிஸ் விசேட அதிரடிப்படை கட்டளைத் தளபதி பொலிஸ் பரிசோதகர் எம்.பி.இளங்கசிங்க தெரிவித்தார்.

சில வருடங்களாக சந்தேகநபர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான பாடசாலைச் சிறுவர்கள் மற்றும் இளைஞர்களை இலக்குவைத்து போதைப்பொருள் விற்பனைசெய்து வந்ததாக எம்.பி.இளங்கசிங்க மேலும் தெரிவித்தார்.

விசேட அதிரடிப்படையின் கண்டி பிராந்திய கட்டளைத்தளபதி, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஷேதா பெர்னாண்டோ மற்றும் நுவரெலியா பிரதேசத்துக்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் லக்ஷ்மன் பண்டார ஆகியோரின் பணிப்புரையின்பேரில், தலவாக்கலை பொலிஸ் விசேட அதிரடிப்படை கட்டளைத் தளபதி பொலிஸ் பரிசோதகர் எம்.பி.இளங்கசிங்க, பொலிஸ் பரிசோதகர் சாந்த, பொலிஸ் சார்ஜன்ட்களான அசங்க, குலதுங்க, ஜயசிங்க , பொலிஸ் கான்ஸ்டபிள் கமகே ஆகியோர் இந்தச் சுற்றிவளைப்பை மேற்கொண்டுள்ளனர்.





மாத்தளை மாவட்ட முஸ்லிம் கலாசார அபிவிருத்தி அதிகாரி எம்.ஜிப்ரியின் வேண்டுதலின்பேரில் எலமல்பொத்த ஜும்ஆ மஸ்ஜித் உட்பட மூன்று தக்கியாக்கள், நிக்ககொல்ல ரஹீமியா மஸ்ஜித், உக்குவளை பரகஹவெல ஆயிஷா மஸ்ஜித் ஆகியவற்றுக்கு தெரிவான நிர்வாகிகளுக்கான நியமனக் கடிதங்களும் கல்லோயா தக்கியாவுக்கான பதிவுச்சான்றும் மாத்தளை மேலதிக செயலாளர் திருமதி ரிஸ்லாவால் வழங்கும் நிகழ்வு அவரது காரியாலயத்தில் இடம்பெற்றது. இதன்போது மாத்தளை மாவட்ட மஸ்ஜிதுகள் சம்மேளனத் தலைவர் தேசபந்து அல்ஹாஜ் முஹ்தார், அபிவிருத்தி உத்தியோகத்தர் உட்பட நிர்வாகிகளும் கலந்துகொண்டனர். (உக்குவளை நிருபர்)

# கம்பளையில் விபத்து; குடும்பஸ்தர் பலி!



கம்பளை, கண்டி வீதியில் குருதெனிய பகுதியில் நேற்றுக் (22) காலை இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

காரொன்று, மோட்டார் சைக்கிள்மீது மோதுண்டதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 58 வயதான இரு பிள்ளைகளின் குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பான விசாரணைகளை தவுலகல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# உணவில் கரப்பான்பூச்சி;

## ஹோட்டல் உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை





தலவாக்கலை நிருபர்

ஹட்டன் நகரிலுள்ள பிரபல ஹோட்டலொன்றில் இருவர் நேற்று முன்தினம் (21) பகல் உணவு உட்கொண்டபோது உணவில் கரப்பான்பூச்சி இருந்துள்ளது.

இதனால் குறித்த இருவரும் ஹோட்டல் உரிமையாளருடன் முரண்பாட்ட நிலையில், பொலிஸாருக்கு அழைப்பை ஏற்படுத்தியுள்ளனர்.

ஹட்டன் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்ததோடு ஹட்டன் நகரசபை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.சௌந்தர்ராகவனுக்கு முறைப்பாட ளிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற நகரசபை பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் பரிசோதனையின் பின்னர் ஹோட்டல் உரிமையாளருக்கு எதிராக ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

www.thamilan.lk
வியாழக்கிழமை, ஜனவரி 23, 2025
தமிழன்

# நீதிபதி இளஞ்செழியனுக்கு அநீதி

## அநுர அரசு திட்டமிட்டு புறக்கணிப்பு என சிவில் சமூகம் குற்றச்சாட்டு!

(பு.கஜிந்தன்)

மேன்முறையீட்டு நீதிபதிக்கான தனது பதவி உயர்வு குறித்து அரசியலமைப்பு குழுவுக்கு விண்ணப்பித்தும் அது தொடர்பில் கண்டுகொள்ளாத அரசு நீதிபதி இளஞ்செழியனுக்கு திட்டமிட்டு அநீதி இழைத்துள்ளதாக தீவக சிவில் சமூகம் குற்றம் சாட்டியுள்ளது.

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் நேற்று (22) இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே குறித்த அமைப்பின் சார்பில் கலந்துகொண்ட கருணாகரன் நாவலன், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் கனகரத்தினம் விந்தன் ஆகியோர் இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் கூறுகையில்,

இலங்கையின் சிறந்த நீதிபதிகளுள் ஒருவரும் தற்துணிவாக அச்சுறுத்தல்களுக்கு அடிபணியாது தீர்ப்புகளை வழங்கி, நீதியை எதிர்பார்த்த மக்களை ஆற்றுப்படுத்திய நீதிபதி இளஞ்செழியனுக்கு பாரபட்சமான வகையில் இந்த அரசு பதவி உயர்வு வழங்காது பழிவாங்கியுள்ளது. இதனை ஏற்க முடியாது.

நீதிபதி இளஞ்செழியன் தனது 27 ஆண்டுகால நீதித்துறையின் பதவிக் காலத்தில் பல்வேறு தீர்ப்புகளை அச்சமின்றியும் பாரபட்சமின்றியும் வழங்கியதால் இலங்கை மக்கள் மத்தியில் நன்மதிப்பை பெற்றிருந்தார். ஆனால் அவருக்கான பதவிகள் அந்தந்தக் காலகட்டத்தில் வழங்கப்படாது, அரசுகளால் திட்டமிட்ட வகையில் தட்டிக்கழிக்கப்பட்டு வந்தது.

இதன் உச்சமாக தற்போது அநுர அரசும் தகுதிகள் அனைத்தும் இருந்தும் திட்டமிட்டு அவரது பதவி உயர்வை தடுத்து ஓய்வு நிலைக்கு தள்ள முயற்சித்துள்ளது. இதை எமது மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. அந்தவகையில் அரசு குறித்த பழிவாங்கலை கைவிட்டு அவரது பதவி உயர்வை வழங்க வேண்டும் என வலியுறுத்துகின்றோம்.

இதேநேரம் அவ்வாறான சூழலை அரசு உருவாக்காது விட்டால் சிவில் சமூகங்கள் ஒன்றிணைந்து வீதிக்கு இறங்கி போராடும் நிலை வரும் எனவும் தெரிவித்தனர்.

இந்நிலையில் குறித்த சந்திப்பில் கலந்துகொண்ட வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் கனகரத்தினம் விந்தன் கூறுகையில்,

கடந்த காலங்களில் நாட்டுக்கும் தமிழ் மக்களுக்கும் மக்கள் விடுதலை முன்னணி (JVP) செய்த செயற்பாடுகள் அனைத்தையும் எமது மக்கள் நன்கு அறிவார்கள். அதேநேரம் அவர்கள் தமிழ் மக்களை ஒரு பொருட்டாக கண்டுகொள்ள விரும்புவதில்லை. அவ்வாறான தரப்பினர் இன்று ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றி கிளீன் ஸ்ரீலங்கா என்று கூறி தமிழ் மக்களை மட்டுமல்லாது ஒட்டுமொத்த நாட்டு மக்களையும் ஏமாற்றுகின்றது.




மறைமுக பழிவாங்கல் போக்குடனும் செயற்படுவதாக மக்கள் கூறுவதை காண முடிகின்றது. ஆனால் ஆட்சியை கைப்பற்ற அநுர தரப்பு மக்களுக்கு கூறிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். இதையே மக்கள் எதிர்பார்க்கின்றனர். அத்துடன் தென்பகுதியைப் போன்று தமிழ் மக்களையும் உரிய தகுதிகளுக்கேற்ப நியமிக்க வேண்டும்.

இதேவேளை யாழ். கலாசார மத்திய நிலையத்தின் பெயர்மாற்றம் குறித்து கூறுகையில்,

யாழ். கலாசார மத்திய நிலையமானது ஈ.பி.டி.பி. யாழ். மாநகரை ஆட்சி செய்த காலப்பகுதியில் தமிழ் மக்களின் கலாசாரத்தை பாதுகாக்கும் ஒரு குறியீடாக இந்திய அரசின் நிதி உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டது.

இது அன்று யாழ். மாநகர சபையை ஆட்சி செய்த ஈ.பி.டி.பியினர் பிரேரணையாக கொண்டுவந்தபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் எதிர்க்கட்சியாக இருந்தும் கூட அந்த முயற்சி எமது மக்களின் கலாசாரத்தை கொண்டதாக இருந்தமையால் அதனை முழுமையாக ஆதரித்து வரவேற்றிருந்தோம்.

ஆனால் இன்று அதன் பெயர் மாற்றப்பட்டுள்ளது வருத்தமளிக்கின்றது.

இது தமிழ் மக்களின் கலாசாரத்தை சுமந்து நிற்கும் ஒரு வரலாற்றுக் கூடமாகும். இந்த பெயர் மாற்றம் இந்திய அரசின் செயற்பாடாகவோ அல்லது அரசின் செயற்பாடாகவோ இருந்தாலும் அதை மாற்றியமைக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

இதைவிட அந்த நிகழ்வில் தமிழுக்கு கடை நிலை வழங்கப்பட்டமை மற்றும் அந்த சம்பவம் திரை நீக்கம் செய்யும்போது தான் அவ்விடயம் தனக்கு தெரியும் என அமைச்சர் ஒருவர் தெரிவித்தமை வேதனையான விடயம் என்றும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முஸ்லிம் காங்கிரஸ் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் கொழும்பில் தனித்துப் போட்டி

(கே.எ.ஹமீட்)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மரச் சின்னத்தில் தனித்துப் போட்டியிடுவதற்கு ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

"தாருஸலாம்" தலைமையகத்தில் நேற்று முன்தினம் (21) மாலை, நடைபெற்ற கட்சியின் கொழும்பு மாவட்ட மத்திய குழுக் கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தலைமையில், பாராளுமன்ற உறுப்பினர்களான கட்சியின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் , எம்.எஸ்.உதுமாலெப்பை, எம்.எஸ்.நளீம் மற்றும் கட்சியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளர், முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் அர்ஷாத் நிஸாம்தீன் ஆகியோர் இந்த கூட்டத் தில் கலந்துகொண்டனர்.

இந்த கூட்டத்தில் தற்போதைய அரசி யல் சூழ்நிலையை மையப்படுத்தி நீண்ட நேரமாக கலந்துரையாடப்பட்டதன் பின்னர் கொழும்பு, தெஹிவளை, கல்கிஸ்ஸ, கோட்டை, மொரட்டுவை, கொலன்னாவ மாநகர சபை களிலும் கொடிகாவத்தை, முல்லேரியா போன்ற பிரதேச சபைகளிலும் முஸ்லிம் காங் கிரஸ் தனித்துப் போட்டியிடுவதென்ற முடிவை கட்சித் தலைவர் அறிவித்ததோடு, அடுத்த கட்ட நடவடிக்கைகளை கட்சி உடனடியாக ஆரம்பிக்கவுள்ளதாகவும் அறிவித்தார்.ள





# சாயி மந்திரில் அதிருத்ர பாராயணம்

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் 100ஆவது அவதார தினத்தை கொண்டாடுமுகமாக, உலகெங்கும் உள்ள சத்ய சாயி அடியவர்கள் பல்வேறு நிகழ்வுகளை நடத்தி வருகின்றனர். இதன்படி, ஸ்ரீ சத்ய சாயி சர்வதேச நிறுவனத்தின் இலங்கைப் பிரிவானது, உலக அமைதி, பாதுகாப்பு மற்றும் சுபீட்சம் என்பனவற்றை முன்னிட்டு, அதிருத்ர பாராயணத்தை நடத்தி வருகிறது.

இதன் முதற்கட்டம், வட பிராந்திய சத்ய சாயி நிலையங்களின் ஏற்பாட்டில் கடந்த மாதம் நடைபெற்றது. இதன் இரண்டாவது கட்டம், இன்று (23) முதல் எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை, மேற்கு மற்றும் தெற்கு பிராந்தியத்தின் அனுசரணையில், கொழும்பு, பார்ண்ஸ் ப்ளேஸில் அமைந்துள்ள சாயி மந்திரில் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இன்றும் நாளையும் அதிகாலை 5.30 மணி முதல் காலை 8.30 மணிவரையும் மற்றும் மாலை 3.30 மணிமுதல் மாலை 6.30 வரையும் ஸ்ரீ ருத்ர பாராயணம் நடைபெறும்.



நாளை மறுதினம் 24ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகும் ஸ்ரீ ருத்ர பாராயணம், அன்று மாலை 7.30 மணி வரையும் நடைபெறும்.

இறுதி நாளான 26ஆம் திகதி ஞாயிறன்று, அதிகாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகும் ஸ்ரீ ருத்ர பாராயணம், நண்பகல் 12 மணிக்கு, விசேட பஜனை மற்றும் மங்கள ஆரத்தியுடன் நிறைவுபெறும்.

இந்த நான்கு நாட்களும் மேற்குறிப்பிட்ட நேரத்தில், பக்தர்கள் தங்கள் கரங்களால் சிவ லிங்கத்துக்கு நீர் அபிஷேகமும் வில்வார்ப்பணம் மற்றும் புஷ்பார்ப்பணம் செய்யலாம் என்றும் அறியத்தரப்பட்டுள்ளது.

# கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் 'தமிழிசை விழாவும் தலைக்கோல் வழங்கலும்'

கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்தும் "தமிழிசை விழாவும் தலைக்கோல் வழங் கலும்' நாளை 24 மற்றும் 25, 26ஆம் திகதிகளில் சங்கத்தின் தலைவர் சட்டத் தரணி சுகந்தி இராஜகுலேந்திரா தலைமை யில் கொழும்புத் தமிழ்ச் சங்கம் சங்கரப் பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக சங்கத்தின் பொதுச்செயலாளர் தெரிவித்தார்.

இதற்கிணங்க, நாளை 24ஆம் திகதி வெள்ளிக் கிழமை மாலை 5.00 மணிக்கு கலாபூஷ ணம் ஏ.கே.கருணாகரன் அரங்கில் இடம்பெற வுள்ள இந்நிகழ்வை சண்முகப்பிரியா கார்த்திகேசு, மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பார். சமேஷா ரஜீவ், பார்க்கவி கஜமுகன் ஆகியோர் தமிழ்த்தாய் வாழ்த்து பாடுவர். பொதுச் செயலாளர் முனைவர் ஜெ.தற்பரன் வரவேற்புரை நிகழ்த்துவார்.

"தமிழிசையின் தொன்மம்" என்ற தலைப்பில் தமிழ் நாட்டு இசை ஆய்வாளர் முனைவர் நா. மம்மது சிறப்புரையாற்றுவார். மலர் வெளியீட்டுரையை தமிழ்ச் சங்க இலக்கியக் குழு செயலாளர் தெ.மதுசூதனன் நிகழ்த்துவார்.

இதன்போது வெளியிடப்படும் சிறப்பு மலரின் முதல் பிரதியை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முன்னாள் ஆலோச கர் இலக்கியப் புரவலர் ஹாஷிம் உமர், சிறப்பு பிரதியை திருமதி அம்பிகை டிவக லாலா போமன் ஆகியோர் பெற்றுக் கொள்வர். இதன்போது இசைநிகழ்வு களும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக் கது.கொழும்புத் தமிழ்ச் சங்க உறுப்புரிமைக் குழுச் செயலாளர் கே. பொன்னுத்துரை நன்றி யுரையாற்றுவார்.

# இரத்தோட்டை இந்து வித்தியாலய பழைய மாணவர் பொதுக் கூட்டம்

இரத்தோட்டை இந்து மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் இன்று (23) பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக பழைய மாணவர் சங்கம் அறிவித்துள்ளது.

இன்று காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ள இக்கூட்டத்தின்போது புதிய நிர்வாக சபை தெரிவுசெய்யப்படவுள்ளதாக சங்கத்தின் செயலாளர் சண். பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

# பொலிஸ் அதிகாரி போல் நடித்து பெண்ணொருவரை கடத்தி கொள்ளை

## சந்தேகநபர் ஒருவர் கைது

பெண்ணொருவரை வேனில் கடத்திச் சென்ற சந்தேகநபர்கள் அவரிடமிருந்து பணம் உள்ளிட்ட பொருட்களை கொள்ளையடித்துச் சென்ற சம்பவம் கொழும்பு, வெள்ளவத்தை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சந்தேகநபர்களில் ஒருவர் பொலிஸ் அதிகாரி போல் உடையணிந்து, ஆள்மாறாட்டம் செய்த சம்பவம் சி.சி.ரி.வி. காணொளி ஒன்றில் பதிவாகி யுள்ளது.

இந்தச் சம்பவம் ஜனவரி 18ஆம் திகதி வெள்ளவத்தையில் உள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றின் பெண்கள் விடுதிக்கு வெளியே இடம்பெற்றுள்ளது.

பொலிஸ் அதிகாரி போன்று போலியாக ஆள் மாறாட்டம் செய்தவர் வேலைக்குச் செல்லாதமைக்காக பணியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்ட முன்னாள் பொலிஸ் அதிகாரி என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குறித்த சந்தேகநபர் வெள்ளவத்தை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

கடத்தப்பட்ட பெண்ணிடமிருந்து சுமார் 31,500 ரூபா பணம் மற்றும் பெறுமதியான பொருட்களைக் கொள்ளையடித்ததுடன், குறித்த பெண்ணை வெலிக்கடை பகுதியில் வேனிலிருந்து இறக்கிவிட்டுச் சென்றுள்ளனர்.

கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட வேன் வாடகைக்கு எடுக்கப்பட்டதாக பொலிஸார் உறுதிப்படுத்தினர். குற்றத்தில் ஈடுபட்ட மற்ற சந்தேக நபர்களைக் கண்டறிய விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

# பேஸ்புக் கணக்கினூடாக பண மோசடி




நபரொருவரின் பேஸ்புக் கணக்கை அணுகி பணத்தை மோசடி செய்துவிட்டு நாட்டைவிட்டு தப்பிச்சென்ற சந்தேகநபர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கொழும்பு குற்றப்பிரிவு (CCD) அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் தனது உறவினர் போல் நடித்து பாதிக்கப்பட்டவரின் பேஸ்புக் கணக்கை அணுகியதுடன், அதன் பிறகு பாதிக்கப்பட்டவரின் வங்கிக் கணக்கிலிருந்து மூன்று சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூ. 07 இலட்சம் ரூபா மோசடி செய்ததாகவும் முறைப்பாடு செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்டவரின் வங்கிக் கணக்கை ஆய்வுசெய்ததில் சந்தேக நபர் கட்டாரில் வசிப்பது கண்டறியப்பட்டது.

சந்தேகநபர் குறித்து குடிவரவு, குடியகல்வுத் துறையிடமிருந்து அறிவிப்பு வந்த பிறகு, சந்தேக நபர் நேற்று முன்தினம் இலங்கை திரும்பியதும் கைதுசெய்யப்பட்டார்.

சம்பவம் குறித்த மேலதி விசாரணைகளை கொழும்பு குற்றப்பிரிவு மேற்கொண்டு வருகிறது.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று வீதம் (22.01.2025)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 181.8633 | 191.3160 |
| கனேடியன் டொலர் | 203.3723 | 212.0951 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 39.4856 | 42.0603 |
| யூரோ | 303.6468 | 316.2241 |
| ஜப்பான் யென் | 1.8747 | 1.9499 |
| சிங்கப்பூர் டொலர் | 214.7332 | 224.5995 |
| ஸ்ரேலிங் பவுன் | 360.1813 | 374.2271 |
| சுவிஸ் பிரான்ங் | 320.6186 | 335.9977 |
| ஐ.அ. டொலர் | 293.4537 | 302.0200 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 789.2271 |
| குவைட் | குவைட் தினார் | 965.2667 |
| ஓமான் | ஓமான் றியால் | 772.9658 |
| கட்டார் | கட்டார் றியால் | 81.5950 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 79.2982 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 80.9952 |

# முறைப்பாடளிக்க QR குறியீடு; கண்டி மாநகர சபை அதிரடி

(எம்.ஏ.அமீனுல்லா)

கண்டி மாநகர சபையில் உள்ள குறைபாடுகள், முறைகேடுகள் அல்லது ஒழுங்கற்ற நிலைமைகள் குறித்து உடனடியாகத் தெரிவிக்கக்கூடிய QR குறியீட்டை அறிமுகப்படுத்துவதற்கு கண்டி மாநகர சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இலங்கையில் பொது நிர்வாக அமைச்சுப் பிரிவின் டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் ஊடாக இவ்வாறான முறைப்பாடுகளை சமர்ப்பிப்பதற்கான குறியீட்டை அறிமுகப்படுத்தியது இதுவே முதல் தடவையாகும்.

இந்தக் குறியீட்டை கையடக்கத் தொலைபேசியிலிருந்து ஸ்கேன் செய்து, புகைப்படங்கள் மற்றும் பிற தகவல்களை உள்ளடக்கி, கண்டி மாநகர சபை அல்லது மாநகர ஆணை யாளரிடம் உரிய முறைப்பாட்டைச் சமர்ப்பிக்க முடியும்.

கண்டி நகரில் சுகாதாரம் அல்லது பிற குறைபாடுகள் பற்றி புதிய குறியீட்டை அறிமுகப்படுத்தியதன் மூலம் அதனை உறுதிப்படுத்தும் புகைப்படங்கள் அல்லது பிற ஆதாரங்களை சமர்ப்பிக்கலாம் என கண்டி மாநகர ஆணையாளர் இந்திகா அபேசிங்க தெரிவித்தார்.

# பலா மரக் கிளைகளை வெட்டச்சென்ற சிறுவனொருவர் மின்சாரம் தாக்கி பலி

(அநுராதபுரம் நிருபர்)

மின்சாரம் தாக்கியதில் 14 வயது சிறுவனொருவர் பரிதாபகரமான முறையில் உயிரிழந்துள்ளதாக அநுராதபுரம் ஹுரிகஸ்வெவ பொலிஸார் தெரிவித்தனர்.

ஹுரிகஸ்வெவ பொலிஸ் பிரிவின் சுதர்ஷனாகம பகுதியில் நேற்று முன்தினம் (21) இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

ஹுரிகஸ்வெவ சுதர்ஷனாகம பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட சிறுவன் ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

உயிரிழந்த சிறுவன் தனது வீட்டுக்கு அயலிலுள்ள வீட்டுக் காணியொன்றிலுள்ள பலா மரத்தின் கிளைகளை வெட்டிக்கொண்டிருந்த போது அருகிலுள்ள மின்கம்பியில் பலாமரக் கிளையொன்று விழுந்ததில் சிறுவனுக்கு மின்சாரம் தாக்கி மரத்திலிருந்து கீழே விழுந்து உயிரிழந்ததாக ஆரம்பக்கட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

உயிரிழந்த சிறுவனுடைய சடலம் தம்புத்தேகம வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் மரக் கிளைகளை வெட்டும்படி கூறிய உயிரிழந்த சிறுவனின் அயல் வீட்டு 62 வயதுடைய பெண் ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் ஹுரிகஸ்வெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# குறிஞ்சாக்கேணி பாலத்தின் நிர்மாணப்பணிகள் விரைவில் ஆரம்பம்

## 10.5 மில்லியன் அமெரிக்க டொலர் ஒதுக்கீடு



திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பிரதேச சபைப் பிரிவிலுள்ள சுமார் ஒரு இலட்சம் மக்களின் பயணங்கள் மற்றும் வியாபார நடவடிக்கைகளுக்கு வசதியாக அமையும் குறிஞ்சாக்கேணி பாலத்தின் நிர்மாணப்பணிகளை மீள ஆரம்பிப்பதற்காக 10.5 மில்லியன் டொலர் நிதி ஒதுக்கப்படவுள்ளது.

பேராதனை மற்றும் பதுளை - செங்கலடி வீதியின் புனரமைப்பு வேலைகளுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தில் மீதியாகவிருக்கும் பணத்தை இதற்காக ஒதுக்குவதற்கான திருத்தப்பட்ட ஒப்பந்தம் நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன மற்றும் சவூதி அபிவிருத்தி நிதியத்தின் பணிப்பாளர் (சட்ட) அப்துல் மொசன் ஏ.அல்முல்லா ஆகியோருக்கிடையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இத்திருத்தப்பட்ட ஒப்பந்தம் மூலம் பதுளை - செங்கலடி வீதி அபிவிருத்தித் திட்டத்தில் எதிர்பார்க்கப்படும் எஞ்சிய பணம் வீதி வலையமைப்பு அபிவிருத்திப் பணிகளுக்கு மாற்றப்பட்டு, குறிஞ்சாக்கேணிப் பாலத்தின் நிர்மாணப்பணிகளை மீள ஆரம்பிப்பதற்காக எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன், இந்தப் பாலம் நிர்மாணிக்கப்படுவதால் போக்குவரத்துப் பிரச்சினைகள் பல தீர்க்கப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.





*அக்கரைப்பற்று கல்வி வலயத்துக்குட்பட்ட பொத்துவில் பிரதேசத்தில் ஒரு சில பாடசாலைகளில் வெள்ள நீர் நிரம்பிக் காணப்படுவதால் மாணவர்களும் ஆசிரியர்களும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். கடந்த சில தினங்களாகப் பெய்துவரும் அடைமழை மற்றும் குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டமையால் மேற்படி பாடசாலைகள் நீரில் மூழ்கியுள்ளன. இப்பாடசாலைகளை பொத்துவில் பிரதேச கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே. ஹம்ஸா நேரடியாகக் களத்துக்குச் சென்று பார்வையிட்டதுடன், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பாதிப்பு தொடர்பிலான விடயங்களையும் எத்திவைத்தார். (கோணாவத்தை செய்தியாளர்)*

## மயிலத்தமடு மேய்ச்சல்தரை பிரச்சினை ஆர்ப்பாட்டம்:

# ஊடகர் ஒருவருக்கு திறந்த பிடியாணை; மேலும் 27 பேருக்கு நிபந்தனைப் பிணை





வீரமுனை செய்தியாளர்

மட்டக்களப்பு - மயிலத்தமடு மாதவனை பண்ணையாளர்களின் பிரச்சினை தொடர்பாக நீதி கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக ஏறாவூர் பொலிஸாரினால் தொடரப்பட்ட வழக்கில் ஊடகவியலாளர் ஒருவருக்கு திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதுடன், சந்தேக நபர்களுக்கு ஒரு இலட்சம் ரூபா சரீரப்பிணை வழங்கப்பட்டு வழக்கு மீண்டும் ஏப்ரல் 21ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2023 ஒக்டோபர் 8ஆம் திகதி மட்டக்களப்பு - செங்கலடி பகுதிக்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வருகையின்போது கொம்மாந்துறை பகுதியில் - மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல்தரை பிரச்சினைக்கு தீர்வுகோரி வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், பண்ணையாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், காணாமல் ஆக்கப்பட்டோர் சங்க உறுப்பினர்கள் மற்றும் இரு ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட 30 பேர் சந்தேக நபர்கள் எனக் குறிப்பிட்டு ஏறாவூர் பொலிஸாரினால் ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

நேற்றைய தினம் ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிபதி மதுஜலா கேதீஸ்வரன் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் பாராளுமன்ற அமர்வு காரணமாக நீதிமன்றில் ஆஜராகமுடியவில்லையென நீதிவானின் கவனத்துக்கு சட்டத்தரணியால் கொண்டுவரப்பட்டது.

இதேபோன்று ஏற்கனவே நீதிமன்றுக்கு சமுகமளிக்காத நிலையில், பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட ஊடகவியலாளர் புண்ணியமூர்த்தி சசிகரன், வெளிநாடு சென்றுள்ளதாக நீதிமன்றின் கவனத்துக்கு பொலிஸாரினால் கொண்டு வரப்பட்டது. இந்நிலையில், ஊடகவியலாளர் சசிகரனுக்கு திறந்த பிடியாணை பிறக்கப்பட்டதுடன் குடிவரவு-குடியகல்வுத் திணைக்களத்துக்கும் அறிவிக்குமாறு உத்தரவிட்ட நீதிவான், நீதிமன்றில் தோற்றிய 27 பேருக்கும் ஒரு இலட்சம் ரூபா சரீரப்பிணையில் ஒருவார காலத்துக்குள் சமர்ப்பிக்கும் நிபந்தனையுடன் செல்ல அனுமதித்தார்.

அத்துடன், குறித்த வழக்கின் விசாரணைக்காக எதிர்வரும் ஏப்ரல் 21வரையில் வழக்கை ஒத்திவைப்பதாக அறிவித்தார். வழக்கு விசாரணையின்போது வழக்கில் தொடர்புடைய 30 பேரில் இருவர் மன்றுக்கு சமுகமளிக்காமையால் அடுத்த வழக்கில் தொடர்புடைய அனைவரையும் ஆஜராகும்படி நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

# கிழக்கு மாகாண ஆளுநர் – ஜப்பானிய தூதுவர் சந்திப்பு; இரு வாரங்களுக்குள் 08 ட்ரக்டர்கள் வழங்கவும் உறுதி

கிண்ணியா செய்தியாளர்



இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் அக்கியோ இசோமட்டா (Akio ISOMATA) மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் (21) திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாணத்தில் JICA மற்றும் UNDP திட்டங்களின் தளங்களை கடந்த திங்கட்கிழமை(20) மற்றும் செவ்வாய்க்கிழமை(21) ஜப்பானிய தூதுவர் பார்வையிட்டதுடன், அங்கு பல சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களையும் பார்வையிட்டார். இலங்கை அரசாங்கத்தால் செயற்படுத்தப்படும் கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்துக்கு தூதுவர் தனது பாராட்டுகளைத் தெரிவித்ததோடு, ஜப்பானிய அரசாங்கம் அதற்கு முழு ஆதரவை வழங்குமென்றும் கூறினார்.

அதன்படி, அடுத்த இரண்டு வாரங்களுக்குள் இலங்கைக்கு 28 குப்பை சேகரிக்கும் ட்ரக்டர்களை நன்கொடையாக வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவற்றில் 08 ட்ரக்டர்கள் கிழக்கு மாகாணத்துக்கு வழங்கப்படுமெனவும் தூதுவர் தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கம் தூய்மையான இலங்கைத் திட்டத்தின் கீழ் இலங்கையை ஒரு புதிய பாதையில் கொண்டுசெல்வதற்கான மனப்பான்மை, சமூக மற்றும் சுற்றுச்சூழல் பணிகளில் ஈடுபட்டுள்ளதாகவும் கிழக்கு மாகாணம் சமூகங்களிடையே ஒற்றுமை மற்றும் அமைதியை மேம்படுத்துவதற்கு உறுதிபூண்டுள்ளதாகவும் மாகாணத்தின் அபிவிருத்தி, கல்வி, சுகாதாரம் மற்றும் சுற்றுலாத்துறையில் கவனம் செலுத்தி அவற்றை முன்னேற்றப் பாதையில் இட்டுச்செல்ல விரும்புவதாகவும் ஆளுநர் இதன்போது கூறினார்.










*மட்டக்களப்பு கல்லடி விநாயகர் வித்தியாலயத்தின் 79ஆவது ஆண்டு விழா நேற்று முன்தினம் (21) பாடசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. பாடசாலை அதிபர் திருமதி எஸ்.விநோதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக மட்டக்களப்பு மாநகர முன்னாள் முதல்வர் தியாகராஜா சரவணபவனும் சிறப்பு விருந்தினர்களாக பாடசாலை மேம்பாட்டு திட்ட இணைப்பாளர் கே. எழில்வேந்தன், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் பி.குணபாலராஜா மற்றும் சித்தி விநாயகர் ஆலய நிர்வாக செயலாளர் எஸ். பிரேமானந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். இதன்போது அதிதிகளால் தென்னை மரக்கன்றுகள் நடப்பட்டன. இந்நிகழ்வில் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (கல்லடி செய்தியாளர்)*

# ஆலையடிவேம்பு கோட்டத்தில் மழை காரணமாக பிற்போடப்பட்ட மூன்றாம் தவணைப் பரீட்சை

### திகதி பின்னர் அறிவிக்கப்படுமென பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவிப்பு

ஆலையடிவேம்பு செய்தியாளர்

அம்பாறை மாவட்டத்தில் பெய்துவரும் அடைமழை, வெள்ளப்பெருக்கு காரணமாக ஆலையடிவேம்பு கல்விக் கோட்டத்தில் நேற்று (22) நடைபெறவிருந்த மூன்றாம் தவணைப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது.

வெள்ள அனர்த்த நிலையைக் கருத்திற்கொண்டு பாடசாலைக்குச் சென்ற மாணவர்களை பெற்றோர் சுயவிருப்பின் பேரில் அழைத்துச் சென்ற நிலையில், நிறுத்தப்பட்ட பரீட்சைக்கான திகதி தொடர்பில் பின்னர் அறிவிக்கப்படுமென பிரதிக் கல்விப் பணிப்பாளர் கி.கமலமோகனதாசன் தெரிவித்தார்.

இதேநேரம், வெள்ள அனர்த்த நிலை ஏற்பட்டுள்ள நிலையில், அம்பாறை மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன், ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவிலும் பல குடியிருப்புகள், வீதிகள், பாடசாலைகள், அரச - தனியார் அலுவலகங்களிலும் வெள்ளம் புகுந்து மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் துரித நடவடிக்கைகளை எடுக்குமாறு பிரதேச செயலாளர் ஆர்.திரவியராஜ் பிரதேச செயலக கிராம உத்தியோகத்தர் உள்ளிட்ட அதிகாரிகளைப் பணித்துள்ளதுடன் வெள்ள அனர்த்த நிலை தொடர்பில் நேரில் சென்றும் பார்வையிட்டார்.

வெள்ள அனர்த்த நிலை காரணமாக ஆயிரக்கணக்கான வயல் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன் அதிகளவான வயல் நிலங்கள் கைவிடப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. இதேநேரம், சேனநாயக்க சமுத்திரத்தின் 2.5 அடி மேலதிக நீர் 05 வான்கதவுகளினூடாக வெளியேற்றப்பட்டுள்ள நிலையில் தாழ்நிலப் பகுதிகளில் வாழும் மக்கள் மிகவும் அவதானத்துடன் இருக்குமாறும் வெள்ள அனர்த்த நிலைக்கு முகம்கொடுக்கும் வகையில் முன்னாயத்த நடவடிக்கைகளை பிரதேச செயலாளர்கள் எடுக்குமாறும் மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்கிரம அறிவித்துள்ளார்.

# இந்தியாவிலிருந்து நாடு திரும்பியோருக்கு தையல் இயந்திரம் வழங்கல்





மட்டக்களப்பு

இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய குடும்பத்தினரின் வாழ்வாதார உதவிக்காக நவீன தையல் இயந்திரத்தை மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் செவ்வாய்க்கிழமை (21) வழங்கி வைத்தார்.

2006ஆம் ஆண்டு இந்தியா சென்று அங்கிருந்து மீண்டும் 2023ஆம் ஆண்டு நாடு திரும்பி மட்டக்களப்பு, செங்கலடி - ஏறாவூர்பற்று பிரதேச செயலகப் பிரிவில் உறவினர் வீடொன்றில் வாழ்ந்து வரும் குடும்பத்தினருக்கு இலங்கை அகதிகள் புனர்வாழ்வு மற்றும் ஒருங்கிணைந்த திட்டத்தின் கீழ் ஒப்பர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் உதவியுடன் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு நவீன தையல் இயந்திரம் வழங்கப்பட்டது.

இலங்கை அகதிகள் புனர்வாழ்வு மற்றும் ஒருங்கிணைந்த திட்டத்தின் ஆலோசகரும் ஓய்வுநிலை மாவட்ட அரசாங்க அதிபருமான கே.கருணாகரனின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஏறாவூர்பற்று, செங்கலடி பிரதேச செயலாளர் கே.தனபாலசுந்தரம், உதவிப் பிரதேச செயலாளர் நிருபா பிருந்தன், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் ஏ.எஸ்.எம்.சியாத், இலங்கை அகதிகள் புனர்வாழ்வு மற்றும் ஒருங்கிணைந்த திட்ட உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

# அஸ்வெசும இரண்டாம் கட்ட தகவல் சேகரிப்பு ஆரம்பம்



நாவிதன்வெளி செய்தியாளர்

அஸ்வெசும இரண்டாம் கட்ட விண்ணப்பதாரிகளின் வீடுகளுக்கு வருகை தந்து தகவல் சேகரிப்பு செய்யும் நிகழ்ச்சித் திட்டம் நாடு பூராகவும் செவ்வாய்க்கிழமை(21) ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

அந்தவகையில், அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் மட்டக்களத்தரவை - 2 கிராம சேவகர் பிரிவில் அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரமவால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.


இதன்போது சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா, உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம்.அஸ்லம், அம்பாறை மாவட்ட செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் எச்.பி.அனீஸ், அஸ்வெசும திட்டத்தின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் டி.எம்.குணசேகர, அபிவிருத்தி உத்தியோகத்தர் எவ்.ஜெஸீலா, கிராம சேவகர் எம்.பரீட் ஆகியோர் கலந்துகொண்டனர்.




*கிளீன் ஸ்ரீலங்கா செயற்றிட்டத்தின் கீழ் சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆ பெரிய பள்ளிவாசலில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது ஜும்ஆப் பள்ளிவாசலின் செயலாளர், பொருளாளர் மற்றும் பள்ளிவாசலில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு மேற்படி சிரமதானத்தைப் பூர்த்திசெய்தனர். (பொலிவேரியன் செய்தியாளர்)*

# சுவாமி விவேகானந்தரின் 163ஆவது ஜெயந்தி தின விழா







மட்டக்களப்பு

சுவாமி விவேகானந்தரின் 163ஆவது ஜெயந்தி தின விழா மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்றது.

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் திருக்கோயிலில் இடம்பெற்ற சுவாமி விவேகானந்தரின் 163ஆவது ஜெயந்தி தின விழாவானது மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷனின் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மஹராஜ் தலைமையில் வெகு சிறப்பாக இடம்பெற்றது.

சுவாமி விவேகானந்தரின் திருச்சொருப பவனியானது கல்லடி உப்போடை ஸ்ரீ பேச்சியம்மன் ஆலய முன்றிலிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு பழைய கல்முனை வீதி வழியாகச் சென்று கல்முனை - மட்டக்களப்பு பிரதான வீதியூடாக மீண்டும் இராமகிருஷ்ண மிஷனை வந்தடைந்தது.

விசேட பூசை வழிபாடுகள், பஜனை, சிறப்பு ஆரத்தி என்பன நிகழ்த்தப்பட்டு சுவாமி விவேகானந்தரின் ஜெயந்தி தின விழா மிகவும் சிறப்பாக இடம்பெற்றது. இதில் இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு கிளையின் உதவி மேலாளர் உமா தீஷானந்தா ஜீ மஹராஜ் உள்ளிட்ட அதிகளவிலான பக்தர்கள் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதியில் பச்சநூர் பகுதியில் வைத்து மட்டக்களப்பிலிருந்து திருகோணமலை நோக்கிப் பயணித்த கெப் ரக வாகனம் நேற்றுக் காலை வேகக்கட்டுப்பாட்டை இழந்து வாய்க்காலில் விழுந்ததில் அதில் பயணித்தோர் தெய்வாதீனமாக உயிர்தப்பியுள்ளனர். அதிகமான வளைவுகளில் பாதசாரி குறியீடுகள் இல்லாமல் இருப்பதாலேயே விபத்து ஏற்படுவதாக சாரதிகள் தெரிவிக்கின்றனர். (தோப்பூர் செய்தியாளர்)

# இந்து குருமார், திருநீறு தொடர்பில் அர்ச்சுனா எம்.பியின் பேஸ்புக் பதிவுக்கு சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்

## மட்டு. சைவ குருமார் ஒன்றியம் கண்டனம்

வாழைச்சேனை மேலதிக செய்தியாளர்



வடக்கு மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா இந்து சமயத்தையும் இந்து சமயத்தைப் பின்பற்றுபவர்களையும் இந்து சமய மக்கள் பூசுகின்ற திருநீற்றைப் பற்றியும் பேஸ்புக்கில் கேவலமான வார்த்தைகளைப் பதிவிட்டமையைக் கண்டித்து அவருக்கெதிராக இந்து சமய கலாசார அமைச்சு மற்றும் நாட்டின் ஜனாதிபதி ஆகியோர் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் அல்லாத பட்சத்தில் நியாயம் வேண்டி தாங்கள் வீதியில் இறங்கிப் போராடப் போவதாகவும் மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்குடா வலய சைவ குருமார் சங்கத்தினால் செவ்வாய்க்கிழமை(21) மாலை ஏற்பாடு செய்யப்பட்ட ஊடக சந்திப்பின்போது தெரிவித்தனர்.

அதன்போது மேலும் தெரிவிக்கையில்,

''அர்ச்சுனா எம்.பி. பேசுகின்றபோது சைவக் குருமார்கள், இந்துக் குருமார்கள் அனைவரையும் தாக்கக் கூடிய அளவுக்கு அவர் வார்த்தைகளை வெளியிட்டுள்ளார். ஆகவே, இந்தப் புனிதமான திருநீற்றையும் அதனை அணிகின்ற சைவ மக்களையும் அந்தணர்களாக இருக்கட்டும், சைவ சமய தீட்சை பெற்றவர்களாக இருக்கட்டும், அல்லது ஆலய தர்ம கர்த்தாவாக இருக்கட்டும் இவர்கள் எல்லாம் எங்களது சமயத்திலே சமய தீட்சை பெற்றவர்களாவர். இவர்கள் அனைவரும் ஒவ்வொரு அங்கங்களுக்கும் திருநீறைப் பூசுகின்ற வழக்கம் இருக்கின்றது.

இதிலும் குறிப்பாக, அங்கு ஒருவன் இருப்பான் என்று சுட்டிக்காட்டி அவர் பேசுகின்ற வார்த்தை எங்களுடைய குருமார்களைத் தாக்கி அவர் பேசுகின்றார் என்பதை நாங்கள் உணர்ந்து கொண்டிருக்கிறோம். ஆகவே, இவ்வாறான கேலித்தனமான- பூச்சாண்டித்தனமான வார்த்தைகளைப் பேசுபவருக்கு எதிராக இலங்கைச் சட்டத்தின்படி சரியான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அத்துடன், பகிரங்கமாக எங்களிடம் மன்னிப்புக்கோர வேண்டும். இதுபோன்ற கேவலமான வார்த்தைகளைப் பேசுகின்ற இவரை ஒரு பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்த மக்கள் வெட்கப்பட வேண்டும்; கவலைப்பட வேண்டும்.

ஆகவே, அவர் இன்றோடு இதை உணர்ந்து இவ்வாறான வார்த்தைகளைப் பேசுவதை நிறுத்த வேண்டும். இதேபோன்று இஸ்லாம்,பௌத்தம், கிறிஸ்தவம் என எந்த மதங்களையும் பற்றி எவரும் இழிவாகப் பேசுவதற்கு நாங்கள் இடமளிக்கமாட்டோம். இது சம்பந்தமான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஜனாதிபதியோ இந்து கலாசார அமைச்சோ அவருக்கெதிராக நடவடிக்கை எடுக்காவிடின் கிழக்கு மாகாணத்திலே இருக்கின்ற இந்து குருமார்கள், சைவ அமைப்புகள், பொதுமக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து இதற்கான தீர்வு வரும் வரையும் போராடிக் கொண்டிருப்போம்''-என்றனர்.

# வெள்ளப் பாதிப்புக்குள்ளான பிரதேசங்களுக்கு மட்டக்களப்பு அரசாங்க அதிபர் கள விஜயம்

மட்டக்களப்பு



மட்டக்களப்பில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் செவ்வாய்க்கிழமை (21) நேரில் சென்று கள ஆய்வை மேற்கொண்டார்.

செங்கலடி பிரதேச செயலகப் பிரிவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு கொம்மாந்துறை விநாயகர் வித்தியாலயத்தின் இடைத்தங்கல் முகாமில் உள்ளவர்களையும் பார்வையிட்டார். மாவட்டத்தில் ஒன்பது இடைத்தங்கல் முகாம்களில் 334 குடும்பங்களைச் சேர்ந்த 921 பேர் தங்கியுள்ளனர். மேலும் 3,037 குடும்பங்களைச் சேர்ந்த 10,031பேர் உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர். அதேவேளை, அனர்த்தத்தால் 17 வீடுகள் பகுதியளவில் பாதிப்படைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இக்கள விஜயத்தின்போது ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் கே.தனபாலசுந்தரம், உதவிப் பிரதேச செயலாளர் திருமதி நிருபா பிருந்தன், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் ஏ.எஸ்.எம். சியாத், அனர்த்த நிவாரண சேவை உத்தியோகத்தர் எம்.சுரேஷ்குமார் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில தினங்களாகத் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக வெள்ள நீர் அதிகரித்து வருவதனால் தொடர்ந்தும் உள்ளூர் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது. இதனால் மாவட்டத்தின் பல பகுதிகளில் பிரதான கால்வாய்கள், ஆறுகள் மற்றும் தாழ்நிலப் பிரதேசங்களில் போக்குவரத்தில் ஈடுபடும் பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

# சீரற்ற காலநிலை காரணமாக திருகோணமலையில் 208 குடும்பங்களைச் சேர்ந்த 691பேர் பாதிப்பு

தம்பலகாமம் செய்தியாளர்

திருகோணமலை மாவட்டத்திலுள்ள ஏழு பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் கடந்த சில நாட்களாக நிலவும் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மூதூர், குச்சவெளி, சேருவில, கோமரங்கடவல, மொறவெவ, தம்பலகாமம் மற்றும் கிண்ணியா ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள 208 குடும்பங்களைச் சேர்ந்த 691பேரே பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் குகதாஸ் சுகுணதாஸ் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் செவ்வாய்க்கிழமை(21) பெறப்பட்ட புள்ளி விபரத் தகவலின்படி, மூதூர் பிரதேச செயலகப் பிரிவில் 15 குடும்பங்களைச் சேர்ந்த 61 பேரும் குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவில் 03 குடும்பங்களைச் சேர்ந்த 08 பேரும் சேருவில பிரதேச செயலகப் பிரிவில் 35 குடும்பங்களைச் சேர்ந்த 127 பேரும் கோமரங்கடவல பிரதேச செயலகப் பிரிவில் 06 குடும்பங்களைச் சேர்ந்த 13 பேரும் மொறவெவ பிரதேச செயலகப் பிரிவில் 54 குடும்பங்களைச் சேர்ந்த 216 பேரும் தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் 93 குடும்பங்களைச் சேர்ந்த 260 பேரும் கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவில் 02 குடும்பங்களைச் சேர்ந்த 06 பேரும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், மூதூர் பிரதேச செயலகப் பிரிவில் 15 வீடுகளும் சேருவில பிரதேச செயலகப் பிரிவில் 05 வீடுகளும் மொறவெவ பிரதேச செயலகப் பிரிவில் 02 வீடுகளும் கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவில் 02 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

# ரோஹிங்யா அகதிகளை திருப்பி அனுப்பும் தீர்மானத்தை மீள் பரிசீலனை செய்ய வேண்டும்

## ஐக்கிய மக்கள் முன்னணி ஜனாதிபதிக்கு கடிதம்

மாளிகைக்காடு செய்தியாளர்

இலங்கையில் புகலிடம் கோரி வரும் மியன்மார் ரோஹிங்யா அகதிகளை திருப்பி அனுப்பும் முடிவு குறித்து கவலையடைவதாகவும் குறித்த தீர்மானத்தை மீள் பரிசீலனை செய்யுமாறு ஐக்கிய மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் எம்.ஏ.நளீர் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு அனுப்பி வைத்துள்ள அவசர கடிதத்தில் கோரியுள்ளார்.

மேலும் குறித்த கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது,

சர்வதேச மனிதாபிமான சட்டங்களையும் கொள்கைகளையும் நாம் கடைப்பிடிக்க வேண்டுமென்பதும் துன்புறுத்தலுக்கு ஆளாகாமல் தங்கள் தாயகத்திலிருந்து தப்பி வந்த இவர்களின் நலனைக் கருத்திற்கொள்ளவேண்டும் என்பதும் எனது உறுதியான நம்பிக்கை. மியான்மாரில் கடுமையான வன்முறை மற்றும் அடக்குமுறை காரணமாக ரோஹிங்யா மக்கள் நம் நாட்டில் தஞ்சம் புகுந்துள்ளனர் என்பது உங்களுக்குத் தெரியும்.

அவர்கள் இலங்கைக்கு புலம்பெயர்ந்து வந்திருப்பது பொருளாதார நோக்கில் அல்ல, உண்மையாக உயிருக்குப் பயந்துதான். ஐக்கிய நாடுகள் சபை உட்பட சர்வதேச சமூகம் இவர்களின் அவலநிலையை அங்கீகரித்துள்ளது. மேலும், மனித உரிமைகள் மற்றும் கண்ணியத்தை மதிக்கும் ஒரு தேசமாக அவர்கள் தஞ்சமடைந்துள்ள இந்த நேரத்தில் அவர்களுக்கு பாதுகாப்பை வழங்குவது நமது கடமையாகும்.

அகதிகள் மீதான சர்வதேச சட்டங்கள் மற்றும் மரபுகளுடன் எமது நாட்டின் நடவடிக்கைகள் ஒத்துப் போவதை உறுதிசெய்ய வேண்டும். இது மறுபரிசீலனை செய்யாத கொள்கையை வலியுறுத்துகிறது. தனிநபர்கள் அவர்களின் உயிருக்கு அல்லது சுதந்திரத்துக்கு அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் இடங்களுக்கு அவர்களைத் திருப்பி அனுப்புவதைத் தடுக்கிறது. இந்தக் கோட்பாட்டை நிலைநிறுத்துவதன் மூலம், பாதிக்கப் படக்கூடிய நபர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது மட்டுமன்றி, சர்வதேச மனிதாபிமான தரங்களுக்கு இலங்கை அர்ப்பணிப்பை வெளிப்படுத்துதல் வேண்டும்.

வரலாற்று ரீதியாக இலங்கை துன்புறுத்தலுக்கு ஆளாகிய வர்களுக்கு புகலிடமாக இருந்து வருகிறது. அத்துடன், பல இலங்கையர்கள் மோதல் காலங்களில் வேறு நாடுகளில் அகதிகளாக வாழ்ந்துள்ளனர். மியன்மார் ரோஹிங்யா அகதிகளின் தற்போதைய நிலைமை கடந்த காலத்தில் ஒரு தேசமாக நாம் எதிர்கொண்ட போராட்டங்களைப் பிரதிபலிக்கிறது என்பதை நினைவில் கொள்வது மிகவும் முக்கியமானது.

மியன்மாரில் அவர்களின் பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள் இன்னும் ஆபத்திலேயே உள்ளன. இச்சந்தர்ப்பத்தில் இந்த மக்களை வலுக்கட்டாயமாக மியான்மாருக்கு திருப்பி அனுப்பும் முடிவை மறு பரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அகதிகள் இலங்கையில் இருக்கும்போது அவர்களை மரியாதையுடனும் கண்ணியத்துடனும் நடத்த வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் கைதிகளாகக் கருதப்படாமல், நமது இரக்கமும் ஆதரவும் தேவைப்படும் மக்களாகக் கருதப்பட வேண்டும்.

மேலும், இந்த அகதிகள் தங்களுக்குப் பாதுகாப்பானதாகக் கருதப்பட்டவுடன் அவர்களின் ஒப்புதலுடன் மீள்குடியேறக்கூடிய பொருத்தமான மூன்றாவது நாட்டை அடையாளம் காண ஐக்கிய நாடுகள் சபையுடன் ஒத்துழைப்பது பொருத்தமானதாக இருக்குமெனக் கருதுகிறேன் - என்று குறிப்பிட்டுள்ளார்.

# மதுபானசாலைக்கு எதிர்ப்பு தெரிவித்து விளக்குமாறு ஏந்தி நூதனப் போராட்டம்

## பெரியநீலாவணை மக்களால் முன்னெடுப்பு





பாறுக் ஷிஹான்

புதிதாக அமைக்கப்பட்டுள்ள மதுபானசாலைக்கு எதிர்ப்பு தெரிவித்து செவ்வாய்க்கிழமை(21) பொதுமக்கள் ஒன்றுகூடி விளக்குமாறு ஏந்தி நூதனப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு முன்னால் ஒன்று கூடிய பொதுமக்கள் பெரிய நீலாவணை பகுதியில் புதிய மதுபானசாலையொன்றை அமைக்கவேண்டாம் எனக் கூறி கையில் விளக்குமாறுகளை ஏந்தியும் பதாகைகளுடனும் கோஷங்களை எழுப்பியவாறும் போராட்டத்தை மேற்கொண்டனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தாங்கள் போராட்டம் மேற்கொண்டபோது அன்று திறக்கப்படவிருந்த மதுபானசாலையை அப்பொழுது மூடினார்கள். ஆனால், இப்பொழுது மீண்டும் திறப்பதற்கு ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. எனவே, எங்களுக்கு இவ்வாறான மதுபானசாலை வேண்டாமெனப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கேட்டுக் கொண்டனர்.

பின்னர் அவ்விடத்துக்கு வருகை தந்த வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜிடம் மகஜர் ஒன்றை வழங்கினர். இதனையடுத்து போராட்டம் நிறைவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் மக்கள் கோரிக்கையை ஏற்று பெரிய நீலாவணை மதுபானசாலையை திறக்க அரசு அனுமதிக்கக்கூடாதென பாராளுமன்றில் கோடீஸ்வரன் எம்.பியும் வலியுறுத்தியுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

# திருடிய மாட்டிறைச்சி, ஆயுதங்களுடன் கைதான சந்தேக நபரிடம் விசாரணை

பாறுக் ஷிஹான்

திருடிய மாட்டை இறைச்சியாக்கிய சந்தேக நபரை சம்மாந்துறை பொலிஸார் கைதுசெய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வளத்தாப்பிட்டி பகுதியில் செவ்வாய்க்கிழமை(21) அதிகாலை மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது திருடப்பட்ட மாட்டை இறைச்சியாக்கிய சந்தேக நபர் உட்பட வெட்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களையும் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பெருங்குற்றப்பிரிவுப் பொறுப்பதிகாரி கே.சதீஸ்கர் தலைமையிலான பொலிஸார் மீட்டனர்.

அத்துடன், மேற்குறித்த பகுதியில் மேய்ச்சலுக்கு சென்ற ஏழு மாத கன்றுக்குட்டியொன்றைக் காணவில்லையெனத் தெரிவித்து உரிமையாளரினால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறித்த முறைப்பாட்டுக்கமைய, தேடுதலை மேற்கொண்ட பொலிஸார் அப்பகுதி வீடொன்றில் மாட்டை அறுத்து இறைச்சியாக்கும்போது மாட்டிறைச்சியுடன் சந்தேகநபரையும் கைதுசெய்து மாடு வெட்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களையும் மீட்டனர்.

மேலும் கைதான 32 வயது சந்தேக நபரிடமிருந்து 47 கிலோ 600 கிராம் மாட்டிறைச்சி மீட்கப்பட்டதுடன் சந்தேகநபர் மற்றும் மாடு வெட்டப் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் உள்ளிட்ட சான்றுப்பொருட்களையும் சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றில் சட்ட நடவடிக்கைக்காக ஒப்படைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பொலிஸாரின் துரித நடவடிக்கையால் இத்திருட்டுச் சம்பவம் நடைபெற்று ஒரு மணித்தியாலயத்தில் இச்சம்பவம் தொடர்பில் வளத்தாப்பிட்டி பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இது தவிர குறித்த சோதனை நடவடிக்கையில் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஏ.எம்.நௌபரின் ஆலோசனையின்பேரில் பொலிஸ் நிலைய பெருங்குற்றப்பிரிவுப் பொலிஸ் குழு ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சிறிதரன் எம்.பிக்கு நீதி நிலைநாட்டப்பட வேண்டும்

## ஐக்கிய காங்கிரஸ் கட்சி தெரிவிப்பு

மாளிகைக்காடு செய்தியாளர்



பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் இந்தியா செல்லும்போது இலங்கை விமான நிலையத்தில் வைத்து செல்லவிடாமல் தடுக்கப்பட்டதாகவும் அவர் வெளிநாடு செல்லத்தடை உண்டு என விமான நிலைய அதிகாரிகள் சொன்னதாகவும் சிவஞானம் சிறிதரன் எம்.பி. பாராளுமன்றத்தில் குற்றஞ்சுமத்தியுள்ளார். இது பாரதூரமான குற்றச்சாட்டாகும். இவ்வாறு நாம் ஆதரவளித்த தேசிய மக்கள் சக்தி அரசில் நடந்திருப்பது கவலை தரும் விடயமாகும் என ஐக்கிய காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

ஐக்கிய காங்கிரஸ் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் வெளியிட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, இது பற்றி அரசு கட்டாயம் விசாரிக்க வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் வெளிநாடு போக முடியாது என நீதிமன்றம் தடைவிதித்ததா? இல்லையாயின் தடை உள்ளது எனச் சொல்ல விமான நிலைய அதிகாரிகளுக்கு அதிகாரம் உள்ளதா? போன்ற விடயங்கள் உடனடியாக விசாரிக்கப்பட்டு, அதை பொதுமக்களுக்குத் தெரிவிப்பதோடு, குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டுமெனவும் ஐக்கிய காங்கிரஸ் கட்சி கேட்டுக்கொள்கிறது என்றுள்ளது.

# போதைப்பொருட்களுடன் எட்டுப் பேர் கைது

காத்தான்குடி மேலதிக செய்தியாளர்

ஐஸ், கேரள கஞ்சா மற்றும் கசிப்பு, போதைப்பொருட்களுடன் மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் 08 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜி. கஜநாயக்கா தெரிவித்தார்.

நேற்றுக் காலை மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸார் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போது ஏழு கிராம் ஐஸ் போதைப்பொருட்களுடன் மட்டக்களப்பைச் சேர்ந்த மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்ட நபர்களிடமிருந்து பெறப்பட்ட ஐஸ் போதைப்பொருட்கள் மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, 20 ஆயிரம் மில்லி வீற்றர் கோடா, 750 மில்லி வீற்றர் கசிப்பு என்பவற்றுடன் திருப்பெருந்துறையைச் சேர்ந்த நால்வரும் கேரள கஞ்சாவுடன் மாமாங்கம் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லலித் லீலாரத்னவின் பணிப்புரையின் பேரில் மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் மற்றும் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸார் மேற்கொண்ட தேடுதலின்போது குறித்த 08 சந்தேக நபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்ட நபர்கள் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதுடன், மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சகோதரனால் கூரிய ஆயுதத்தால் தாக்கி குடும்பஸ்தர் உயிரிழப்பு

## பிறைந்துறைச்சேனையில் சம்பவம்

வாழைச்சேனை மேலதிக செய்தியாளர்

வாழைச்சேனை பொலிஸ் பிரிவின் பிறைந்துறைச் சேனையில் குடும்பஸ்தர் ஒருவர் சகோதரனால் கூரிய ஆயுதமொன்றினால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவமானது நேற்று புதன் கிழமையன்று (22) இடம்பெற்றுள்ளது.

சாதுலியா - பாடசாலை வீதி வாழைச் சேனையைச் சேர்ந்த சீனி முஹம்மது முசாமில் என்ற 43 வயதான குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் வீட்டுக்கு சகோதரன் (தம்பி) சென்று பணம் தருமாறு கேட்டதாகவும் அதனை வழங்குவதற்கு மறுப்புத் தெரிவித்தபோது இடம்பெற்ற வாக்குவாதத்தினால் கோபம் கொண்ட சகோதரன் அவரை கூரிய ஆயுதமொன்றினால் தாக்கிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

தப்பியோடி தலைமறைவாகியுள்ளவரைக் கைதுசெய்யும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். சடலம் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# கிட்டங்கி வீதியில் வெள்ள நீர் பரவல்; பாதுகாப்புடன் போக்குவரத்து நடைமுறை

பாறுக் ஷிஹான்



அடைமழையால் ஏற்பட்ட வெள்ள நீர் பரவல் காரணமாக கிட்டங்கி வீதியால் பயணம் செய்பவர்கள் பாதுகாப்பு அறிவுறுத்தல்களைப் பின்பற்றிச் செல்வதை அவதானிக்க முடிகின்றது. கல்முனை மாநகரையும் நாவிதன்வெளி பெரு நிலப்பரப்பையும் இணைக்கும் கிட்டங்கி தாம்போதிக்கு மேலாக வெள்ளம் பாய்வதால் செவ்வாய்க்கிழமை(21) போக்குவரத்து கட்டுப்பாட்டுடன் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

கடந்த இரண்டு நாட்களாக கிட்டங்கி தாம்போதியில் வெள்ளம் பாய்கின்றது. இந்நிலையில், கல்முனை, சேனைக்குடியிருப்பு, நாவிதன்வெளி, சவளக்கடை பிரதேசங்களைத் தரை வழியாக இணைக்கின்ற கிட்டங்கி பாலத்தின் மேலாக அதிகரித்த ஆற்றின் நீர்மட்டத்தால் இராணுவம், பொலிஸார், நாவிதன்வெளி பிரதேச செயலகம், பிரதேச சபை மற்றும் அனர்த்த முகாமைத்துவ குழு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இது தவிர, கல்முனை ஆழ்கடல் சுழியோடி அணி இரண்டு நாட்களாக அப்பகுதியூடாக அரச மற்றும் தனியார் அதிகாரிகள், மாணவர்கள் பாதுகாப்பாக பயணம் செய்வதற்கு உதவி செய்வதுடன் தன்னார்வமாகத் தனது சேவைகளையும் முன்னெடுத்து வருகிறது. மேலும்,அப்பகுதியில் பயணம் செய்ய சிரமப்படும் பொதுமக்களை இனங்கண்டு நடவடிக்கைகளை எடுத்துள்ளதைக் காண முடிகின்றது.

சீரற்ற காலநிலை காரணமாக கிழக்கு மாகாணத்தில் வெள்ளம் பரவலாகக் காணப்படுவதுடன், சில இடங்களில் வடிந்தோடிக் காணப்படுகின்றது. தினமும் விவசாயிகள், அலுவலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானவர்கள் நாளாந்தம் பயணிக்கும் இவ்வீதியில் வெள்ள நீர் பரவி வருவதால் பிரதேச மக்கள் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் தமது அன்றாட பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர். இவ்வீதிக்கான நிரந்தரப் பாலம் அமைக்குமாறு நீண்டகாலமாக பிரதேச மக்களினால் விடுக்கப்படும் கோரிக்கை இதுவரைக்கும் எந்த அரசாங்கத்தினாலும் நிறைவேற்றப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# ரயிலில் மோதி ஒருவர் காயம்

மீராவோடை செய்தியாளர்

ரயிலில் மோதி நபரொருவர் காயமடைந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று (22) காலை ஓட்டமாவடி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணித்த ரயில் ஓட்டமாவடி பகுதியால் செல்லும்வேளையில் நபரொருவர் ரயில் பாதையைக் கடக்கும்போது இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

இதில் காயமடைந்தவர் வாழைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த மௌலவி ஒருவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். காயமடைந்த நபர் சிகிச்சைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பொருளாதாரத்தை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் 2025 வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும்

## ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவிப்பு



நாட்டின் அனைத்துப் பிரிவினரையும் பொருளாதாரச் செயற்பாட்டில் ஈடுபடுத்தும் நோக்கில் இந்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தைத் தயாரிப்பது தொடர்பாக நிதியமைச்சின் அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் (21) ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற முதற்கட்டக் கலந்துரையாடலில் கலந்துகொண்டபோதே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இந்தக் கருத்துகளைத் தெரிவித்தார்.

செயற்றிறனுடனும் திறமையாகவும் பொருளாதார செயல்முறையைக் கையாள்கையில் பொதுப் போக்குவரத்தை நிறுவுவதன் முக்கியத்துவம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பது குறித்தும் இதன் போது ஆராயப்பட்டது.

பொதுப் போக்குவரத்தை வலுப்படுத்த அரசாங்கம் எவ்வாறு தலையிட வேண்டுமென்பது குறித்தும் அதற்கு வசதிகள் அளிப்பதற்கான நடவடிக்கை தொடர்பாகவும் இந்தக் கலந்துரையாடலில் கவனஞ்செலுத்தப்பட்டது.

கடந்த அரசாங்கங்களில் பன்முகப்படுத்தப் பட்ட நிதிக்காக பெருமளவு நிதி ஒதுக்கப் பட்டிருந்தாலும் அந்தப் பணம் பயனுள்ள திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படவில்லையெனவும் பன்முகப்படுத்தப்பட்ட நிதியை தேசிய திட்டங்களுக்குப் பயன்படுத்தக்கூடிய வகையில் வழங்குவது குறித்தும் இங்கு கவனஞ்செலுத்தப்பட்டது.

நெல் கொள்வனவு செய்வதற்காக அரிசி உற்பத்தியாளர்களுக்கு வழங்கும் கடன்களை ஒரு வருடத்துக்குள் வசூலிப்பது குறித்தும் அந்த வர்த்தகர்களிடமுள்ள அரிசி கையிருப்புகளை ஒழுங்குபடுத்துவது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

மேல் தளத்திலுள்ள பொருளாதாரத்தை கீழ் மட்டத்துக்கு நகர்த்த வேண்டுமென்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அனைத்து பிரதேசங்களுக்கும் பிரிந்து செல்லக்கூடிய ஒரு பொருளாதாரத் திட்டத்தைத் தயாரிப்பதன் முக்கியத்துவத்தையும் குறிப்பிட்டார்.

தற்பொழுது அமுலில் இருக்கும் நிவாரணம் வழங்கும் முறையில் குறைபாடுகள் உள்ளதாகவும் அவற்றை அடையாளங் கண்டு, நிவாரணங்கள் தேவையான சமூகத்தை சரியாக அடையாளம் கண்டு, அந்த செயல்முறையை விரைவுபடுத்த வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி இங்கு குறிப்பிட்டார்.

இக் கலந்துரையாடலில் தொழிலமைச்சரும் பொருளாதார மேம்பாட்டு பிரதியமைச்சருமான கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரஸல் அபோன்சு, பிரதி திறைசேரி செயலாளர் ஏ.கே.செனவிரத்ன உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# சட்டவிரோத செயற்பாடுகளுக்கு ஒருபோதும் துணைபோக மாட்டோம்

## அமைச்சர் சமந்த வித்யாரத்ன



''சட்டவிரோத செயற்பாடுகளுக்கு ஒருபோதும் துணைபோக மாட்டோம். அந்த வகையில்தான் பெருந்தோட்டத்துறை அபிவிருத்தி அமைச்சுக்குச் சொந்தமான தோட்டங்களுக்குரிய பங்களாக்களில் பல ஆண்டுகாலமாக பலவந்தமான முறையில் வசித்த செந்தில் தொண்டமான் மற்றும் வடிவேல் சுரேஷ் ஆகியோரை ஒருவார காலத்துக்குள் வெளியேற்றியுள்ளோம்''- என பெருந்தோட்டத்துறை அபிவிருத்தி மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் (21) இடம்பெற்ற கிளீன் ஸ்ரீலங்கா செயற்றிட்டம் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை முதல் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர், மேலும் உரையாற்றுகையில்,

''கிளீன் பற்றிப் பேசுவதற்கு அரசாங்கத்துக்கு தார்மீக உரிமையில்லையென்று எதிர்த்தரப்பினர் கூறுகின்றனர். கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தை அரசாங்கம் ஆரம்பிப்பதற்கு முன்னர் நாட்டு மக்கள் அத்திட்டத்தை ஆரம்பித்து விட்டார்கள். பொதுத்தேர்தலில் 225 உறுப்பினர்களில் 157 பேரை வீட்டுக்கு அனுப்பிவைத்துள்ளார்கள். தூய்மையான நீரில் அசுத்த நீர் கலப்பது இயல்பானதே. அதுபோலவே இன்று ஓரிருவர் பாராளுமன்றத்தில் எஞ்சியுள்ளனர்.

முன்னாள் முதலமைச்சர் ஒருவர் கிளீன் ஸ்ரீலங்கா திட்டம் தொடர்பில் முறையற்ற கருத்துகளை முன்வைத்தார். இவரைப் பற்றி மக்கள் நன்கறிவார்கள். இவர் பதுளை தமிழ் மகளிர் பாடசாலையின் அதிபரை அச்சுறுத்தி மன்னிப்புக் கோரச்செய்து மண்டியிட வைத்தவர். இந்தச் சம்பவம் தொடர்பில் அந்த அதிபர் 2018.01.03ஆம் திகதி காலப்பகுதியில் பொலிஸில் முறைப்பாடளித்துள்ளார்.

இந்த நபர் கடந்த அரசாங்கத்தில் இராஜாங்க அமைச்சராகப் பதவி வகித்தார். எப்பாவெல தொழிற்சாலைக்குச் சென்று அங்கிருந்த உத்தியோகஸ்தர்களைத் தாக்கினார். முறையற்ற வகையில் செயற்பட்டு, நிதி மோசடி செய்யப்பட்டுள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. 786 மில்லியன் ரூபா அரசாங்கத்துக்கு நஷ்டமேற்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே, தற்போது இந்த முறைகேடுகள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால்தான் கலக்கமடைந்து கூச்சலிடுகிறார்கள்.

காலம் கடந்த நிலையில், நாமல் ராஜபக்ஷ எம்.பி. தவறை ஏற்றுக்கொண்டுள்ளார். தாங்கள் தவறிழைத்துவிட்டதாகக் கூறுகின்றார். தேசிய மக்கள் சக்தி ஒருபோதும் தவறிழைக்காது.

நான் பெருந்தோட்டத்துறை அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்பு அமைச்சராகப் பதவியேற்று ஒரு மாத காலத்துக்குள் எனக்கு பெயர் குறிப்பிடாத கடிதமொன்று கிடைத்தது. அக்கடிதத்தில் பெருந்தோட்ட அபிவிருத்தி அமைச்சுக்குச் சொந்தமான தோட்டங்களுக்குரிய பங்களாக்களை அரசியல்வாதிகள் பலவந்தமான முறையில் கைப்பற்றியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. அத்துடன், தற்றுணிவு இருந்தால் நடவடிக்கை எடுங்கள். கடந்த காலங்களில் ஜனாதிபதி, அமைச்சர் என்று பலருக்கு அறிவித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

கடிதத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் குறித்து ஆராயுமாறு உரிய தரப்பினருக்கு அறிவுறுத்தினேன். அதற்கமைவாக கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் செந்தில் தொண்டமான் பதுளை மாவட்டம், எட்டபிட்டிய,திக்வெல்ல டிஸ்லேண்ட் பங்களாவில் கடந்த 13 ஆண்டுகளாக பலவந்தமான முறையில் தங்கியிருந்துள்ளார்.

அதேபோல், கடந்த அரசாங்கத்தில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்று அனைத்து பக்கங்களிலும் இருந்த வடிவேல் சுரேஷ் பதுளை ஹாலி-எல பகுதியில் பெருந்தோட்டத்துக்குச் சொந்தமான பங்களாவில் கடந்த 19 ஆண்டுகளாகத் தங்கியிருந்துள்ளார். ஆனால், இவ்விருவரும் தமது சொந்த பங்களாவில் வாழ்வதாகத்தான் அப்பிரதேச மக்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் உண்மையை அறியவில்லை.

இது தொடர்பான விசாரணைக் குழுவின் அறிக்கை கிடைத்ததும் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தினேன். இதற்கமைய செந்தில் தொண்டமானுக்கு இவ்விடயம் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து பங்களாவிலிருந்து அவர் வெளியேறியுள்ளார்.

19 ஆண்டுகளாக வசிக்கும் பங்களாவில் தனக்கு சட்ட உரிமை உள்ளதென்று வடிவேல் சுரேஷ் குறிப்பிட்டு ஒரு வார கால அவகாசம் கோரியிருந்தார். அவருக்கு கால அவகாசம் வழங்கப்பட்டது. இருப்பினும், அவர் தனது உரிமையை நிரூபிக்கவில்லை. பின்னர் பங்களாவிலிருந்து வெளியேறினார். சட்டவிரோத செயற்பாடுகளுக்கு அரசாங்கம் துணை போகாது என்பதற்கு இவை உதாரணங்கள். கடந்த கால ஊழல்கள் தொடர்பில் சட்டத்தின் பிரகாரம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதால் ஊழல்வாதிகள் திணறுகிறார்கள். போலியான குற்றச்சாட்டுகளை முன்வைக்கிறார்கள்''- என்றார்.

# பிரித்தானிய உயர்ஸ்தானிகர் - சபாநாயகர் சந்திப்பு



இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ரூ பட்ரிக்ஸ், சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்னவை அண்மையில் (17) பாராளுமன்றத்தில் சந்தித்தார். இந்தச் சந்திப்பில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவும் கலந்துகொண்டார்.

சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்னவுக்குத் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்த பிரித்தானியத் தூதுவர், பிரித்தானியப் பாராளுமன்றத்தின் சபாநாயகருடைய வாழ்த்துக் கடிதத்தையும் கையளித்தார். பிரித்தானிய பாராளுமன்றத்தின் சபாநாயகர் உள்ளிட்ட உயர்மட்டத் தூதுக் குழுவினர் அண்மையில் இலங்கைக்கு மேற்கொள்ளவிருக்கும் விஜயம் பற்றிய தகவல்களையும் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் இச்சந்திப்பில் பகிர்ந்துகொண்டார்.

பத்தாவது பாராளுமன்றத்தின் இலங்கை-பிரித்தானிய பாராளுமன்ற நட்புறவு சங்கம் மீளமைக்கப்படவிருப்பதை வரவேற்ற அவர், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளைப் பலப்படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்தினார்

பிரித்தானிய அரசாங்கம் இலங்கைக்குப் பல்வேறு துறைகளில் வழங்கிவரும் ஒத்துழைப் புக்களுக்கு சபாநாயகர் தனது பாராட்டைத் தெரிவித்தார். கடன்மறுசீரமைப்புத் திட்டத்தில் பிரித்தானியா அண்மையில் வழங்கிய உதவிகளையும் அவர் நினைவுகூர்ந்தார். ஜனநாயகத்துக்கான வெஸ்மின்ஸ்டர் மன்றம் மற்றும் பிரிட்டிஷ் கவுன்சில் ஆகியன இலங்கைப் பாராளுமன்றத்துக்கு வழங்கி வரும் ஒத்துழைப்புகளுக்கு நன்றி தெரிவித்த சபாநாயகர், எதிர்காலத்திலும் தொடர்ச்சியான ஒத்துழைப்புகளை எதிர்பார்ப்பதாகக் குறிப் பிட்டார். பாராளுமன்ற உறுப்பினர்களின் திறன்மேம்பாடு, பாராளுமன்ற குழுக்களின் செயற்பாடுகள் மற்றும் பாராளுமன்ற பொதுமக்கள் தொடர்பு செயற்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்தும் இச்சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டன.

# கொழும்பு ஸாஹிரா கல்லூரி எழுத்தாளர் மன்ற ஏற்பாட்டில் 20 மாணவர்களின் புத்தக வெளியீடு





கொழும்பு ஸாஹிரா கல்லூரி எழுத்தாளர் மன்றத்தால் ஒழுங்குசெய்யப்பட்ட 20 மாணவர்களின் ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிகளிலான புத்தகங்கள் அண்மையில் கல்லூரி அப்துல் கஃபூர் மண்டபத்தில் அதிபர் ரிஸ்வி மரிக்கார் தலைமையில் வெளியிட்டு வைக்கப்பட்டன.

இதன்போது எழுத்தாளர் மன்ற பொறுப்பாசிரியை பாத்திமா அஸ்னா வரவேற்புரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட எழுத்தாளரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான ஆசிப் ஹுசைன் தமது உரையில், 'நூல்களை வாசிப்பது முக்கியம்' எனத் தெரிவித்ததோடு, ஸாஹிரா கல்லூரி மாணவர்களுக்கு நூல்களை வெளியிட்டு வைத்தமைக்காக வாழ்த்துகளையும் தெரிவித்தார். மேலும், சாஹிரா கல்லூரி மாணவர்கள் அதிர்ஷ்டசாலிகள். ஏனெனில் கல்லூரி நிர்வாகம் மாணவர்களின் எழுத்துத் திறனை வளர்த்துக் கொள்ள வழிகாட்டி உதவுகிறது.

கல்லூரியின் நோக்கங்கள் மற்றும் அபிலாஷைகளைக் கோடிட்டுக்காட்டி அதிபர் ரிஸ்வி மரிக்கார் உரையாற்றினார். மேலும் மாணவர்கள் தங்கள் சொந்த புத்தகங்கள் எழுதுவதற்கு ஆசிரியர்களின் கடின உழைப்பையும் பாராட்டினார். மேலும், சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலம் என எந்த மொழியில் அதிகமான புத்தகங்களை எழுதுமாறு மாணவர்களைக் கேட்டுக்கொண்டதன் எழுத்தாளர்களுக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

அம்ரா நுஸ்ரத் மற்றும் கல்லூரி ஆசிரியை டபிள்யூ. தனஞ்சிகா தீபானி ஆகியோர் ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிகளில் புத்தகங்கள் மதிப்பாய்வு செய்தனர்.

பிரதம அதிதி ஆசிப் ஹுசைன் எழுத்தாளர் மன்றத்தின் புதிய குழு உறுப்பினர்களுக்கு சின்னம் சூட்டியதுடன் எழுத்தாளர்களுக்கு சான்றிதழ்களையும் வாழங்கினார். கல்லூரியின் சார்பில் ஆசிப் ஹுசைனுக்கு அதிபர் ரிஸ்வி மரிக்கார் பாராட்டுச் சின்னம் வழங்கினார்.



பிரதி அதிபர் முஹம்மது ஷாசுலி, உப அதிபர்கள் சினத் இஸ்மாயில், எ.எம். மிஹ்லார், பாலர் பிரிவுத் தலைவி ஹஸ்னா இப்லால், பிரிவுத் தலைவர் ஷெனாஸ் பதுர்தீன், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர்.





**மக்கள் விடுதலை முன்னணி தலைமை அலுவலகத்தில் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் பெட்ரிக் - மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா ஆகியோருக்கிடையில் சந்திப்பொன்று இடம்பெற்றது. இச்சந்திப்பில் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் அரசியல் அலுவல்களுக்கான முதலாவது செயலாளர் டொம் சொப்பர், ஆலோசகர் இன்சாப் பாகீர் மாக்கர் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். மக்கள் விடுதலை முன்னணியின் சார்பில் அதன் சர்வதேச பிரிவுக்குழு உறுப்பினர், சட்டத்தரணி மது கல்பனா கலந்துகொண்டிருந்தார்.**

# வவுனியா மாவட்ட சமாதானப் பேரவையின் பொங்கல் விழா







*சிவகுமார் திவியா*

வவுனியா மாவட்ட சமாதானப் பேரவையின் பொங்கல் விழா மூன்றுமுறிப்பு சென்சுலான் முன்பள்ளி வளாகத்தில் இடம்பெற்றது.

இதன்போது சென்சுலான் முன்பள்ளி மாணவர்களினால் தமிழர் பாரம்பரியத்தைப் பிரதிபலிக்கும் முகமான நடன நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்ட சர்வமதப் பேரவையின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஆர்.விக்கினேஸ்வரன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கத்தோலிக்க, இந்து, பௌத்த, இஸ்லாமிய மதத் தலைவர்கள் கலந்துகொண்டதுடன், தமிழ், சிங்கள, கிறிஸ்தவ, இஸ்லாமிய முன்பள்ளி மாணவர்களால் அனைத்து மதங்களையும் பிரதிநிதித்துவப்படுத்திய கலை நிகழ்வுகளும் அரங்கேற்றப்பட்டன.

இதன்போது கலந்துகொண்டவர்களுக்கு பரிசுப் பொருட்களும் வழங்கப்பட்டன. இதில் மதத் தலைவர்கள், வவுனியா மாவட்ட சமாதானப் பேரவையின் அங்கத்தவர்கள் எவ்.ஐ.ஆர். எம். நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள்,முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கிராம மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# களுத்துறை அரப்பலாகந்த இளைஞர் கழகத்தின் தைப்பொங்கல் விழா












*அஷ்ரப் ஏ. சமத்*

களுத்துறை, அரப்பலாகந்த இளைஞர் கழகம் 3ஆவது ஆண்டாகவும் நடத்திய தைப்பொங்கல் விழா அரப்பலாகந்தயில் நடைபெற்றது. இதன்போது பொங்கல், பூஜை வழிபாடுகள், விளையாட்டுப்போட்டி நிகழ்வுகள் மற்றும் இசைக்கச்சேரி என்பன நடைபெற்றன.

இந்நிகழ்வில் லம்போதர சர்மா அரப்பலாகந்த பாரதி தமிழ் மகா வித்தியாலண அதிபர் நிலந்த சஞ்சீவ, ஏற்பாட்டுக் குழுத் தலைவர் புஸ்பகுமார், இந்திரகுமார், விவாகப் பதிவாளர் திருமதி கோகிலா, முன்னாள் நகர சபை உறுப்பினர் சட்டத்தரணி சந்தியா வீரதுங்க, பாணந்துறை எம். சுனில், பாரதி தமிழ் வித்தியாலய பிரதி அதிபர் மங்கலம் உட்பட அவ்வூர் பொதுமக்கள் கலந்து சிறப்பித்தனர்.

போட்டி நிகழ்வுகளில் கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வானில் ஒரே நேரத்தில் அணிவகுக்கும் 6 கோள்கள்




வானில் ஒரே நேரத்தில் 6 கோள்கள் அணிவகுக்கும் அரிய நிகழ்வை வெறும் கண்களால் பார்க்கலாம். இந்த அபூர்வ நிகழ்வு நேற்று (22) வானில் தென்படத் தொடங்கியுள்ள நிலையில் நாளை மறுதினம் (25) வரை கண்டுகளிக்கலாம்.

இந்த அதிசய நிகழ்வை நேற்று முதல் உலகின் பல்வேறு பகுதிகளிலும் மக்கள் ஆவலுடன் பார்த்து ரசித்து வருகின்றனர்.

அதுவும், கோடு போட்டதுபோல ஒரே நேர்க்கோட்டில் ஏழு கோள்களும் ஒன்றாக அணிவகுப்பதும் அதிசயமே அசந்துபோகும் நிகழ்வு.

சூரியக் குடும்பத்திலுள்ள கோள்களின் சுற்றுவட்டப் பாதையில் ஒன்றையொன்று சந்திக்கும் அபூர்வ நிகழ்வுகள் அவ்வப்போது ஏற்படும். அதன்படி, 6 கோள்கள் ஒரே நேர்கோட்டில் அணிவகுத்துவரும் அரிய நிகழ்வு தற்போது இடம்பெற்றது.

வெள்ளி, வியாழன், சனி, செவ்வாய், நெப்டியூன் மற்றும் யுரேனஸ் கோள்கள் ஒரே நேர்கோட்டில் தென்படுகின்றன. வெறும் கண்களால் வெள்ளி, வியாழன், சனி மற்றும் செவ்வாய் கோள்களையும், நெப்டியூன், யுரேனஸை சக்திவாய்ந்த தொலைநோக்கிகளாலும் காணமுடியும். இதுபோன்ற 5 அல்லது 6 கோள்களின் அணிவகுப்பு மீண்டும் எதிர்வரும் பெப்ரவரி 28ஆம் திகதி மற்றும் ஓகஸ்ட் 29ஆம் திகதிகளில் காணமுடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# பிறப்புரிமை அடிப்படையில் இனி அமெரிக்க குடியுரிமை கோர முடியாது

## ட்ரம்ப்பின் புதிய உத்தரவை எதிர்த்து 22 மாகாணங்கள் வழக்கு

அமெரிக்காவில் வெளிநாட்டவருக்குப் பிறப்பின் அடிப்படையில் வழங்கப்படும் பிறப்புரிமைக் குடியுரிமையை முடிவுக்குக் கொண்டுவரும் டொனால்ட் ட்ரம்ப்பின் நிர்வாக உத்தரவை எதிர்த்து 22 அமெரிக்க மாகாணங்கள் வழக்குத் தொடர்ந்துள்ளன.

அமெரிக்க மாகாணங்கள் தொடர்ந்திருக்கும் வழக்கில் வெளியாகும் நீதிமன்ற உத்தரவை எதிர்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருவதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாகப் பதவியேற்ற டொனால்ட் ட்ரம்ப், முதல் வேலை நாளிலேயே பல்வேறு உத்தரவுகளில் கையெழுத்திட்டார். அதில் அமெரிக்காவில் பிறப்புரிமையின் அடிப்படையில் வெளிநாட்டவருக்கு வழங்கப்படும் குடியுரிமையை இரத்துச் செய்வது, சட்டவிரோதமாக அமெரிக்காவில் தங்கியுள்ள அனைவரையும் நாடு கடத்தும் கொள்கையைக் கடைப்பிடிப்பது என்ற உத்தரவுகளில் கையெழுத்திட்டார்.

இதனால், அமெரிக்காவில் வாழும் எண்ணற்ற வெளிநாட்டவர்களுக்கு கடும் அதிர்ச்சி ஏற்பட்டது. அதேவேளை, அமெரிக்காவில் குடிபெயர்ந்தவர்களின் குழந்தைகளுக்கு வழங்கப்படும் பிறப்புரிமைக் குடியுரிமையை முடிவுக்குக் கொண்டுவரும் ட்ரம்ப்பின் நிர்வாக உத்தரவைத் தடுக்கக் கோரி அமெரிக்காவின் 22 மாகாணங்கள், ஒரு வழக்கைத் தாக்கல் செய்திருப்பதாக 'அசோசியேட் பிரஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற சிறிது நேரத்திலேயே வெளிநாட்டினருக்கு அமெரிக்காவில் பிறக்கும் குழந்தைகளுக்கு தானாக குடியுரிமை வழங்குவதை நிறுத்துவது உட்பட தொடர்ச்சியான நிர்வாக உத்தரவுகளில் ட்ரம்ப் கையெழுத்திட்டார்.

ட்ரம்ப் இவ்வாறு கையெழுத்திட்டாலும் அமெரிக்க அரசியலமைப்பின் 14ஆவது திருத்தம் பிறப்புரிமை குடியுரிமைக்கு உத்தரவாதம் அளிக்கிறது என்பதை சட்ட நிபுணர்கள் ஒருமித்தக் குரலில் சொல்லியிருப்பதோடு, ட்ரம்ப்பின் உத்தரவு நடைமுறைக்குக் கொண்டுவரப்படுவதில் சட்டச்சிக்கல் இருப்பதாகவும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

அதாவது, சட்டவிரோதமாக நாட்டிலிருக்கும் தாய்மார்களுக்கு அல்லது தற்காலிக விசாவில் சட்டப்பூர்வமாக அமெரிக்கா வந்திருக்கும் தாய்மார்களுக்கு தந்தை அமெரிக்க குடிமகனாகவோ அல்லது 'கிரீன் கார்ட்' வைத்திருப்பவராகவோ இல்லாவிட்டால், குழந்தைகளுக்கான பிறப்புரிமை குடியுரிமையை அங்கீகரிக்க வேண்டாமென அமெரிக்க ஜனாதிபதி பெடரல் நிறுவனங்களுக்கு உத்தரவிட்டார்.

'கிரீன் கார்ட்' எனப்படும் நிரந்தர குடியுரிமை அட்டை என அதிகாரபூர்வமாக அறியப்படும் பச்சை அட்டை, வெளிநாட்டவர், அமெரிக்காவில் நிரந்தரமாக தங்கி பணிபுரிய அனுமதிக்கிறது. குறைந்தபட்சம் பெற்றோரில் ஒருவர் அமெரிக்கக் குடிமகனாகவோ அல்லது சட்டப்பூர்வமான நிரந்தரக் குடியுரிமை பெற்றவராகவோ இல்லாவிட்டால், 30 நாட்களுக்குள் அமெரிக்க மண்ணில் பிறக்கும் குழந்தைகளுக்குப் பிறப்புரிமை குடியுரிமையை நிர்வாக ஆணை வழங்காது. ஒருவேளை, மாகாணங்கள் தொடர்ந்த வழக்கில் நீதிமன்றம் தலையிட்டு தடை விதிக்காத வரை இதுதான் தொடரும்.

அமெரிக்க அரசியல் சாசனத்தில் 1868இல் மேற்கொள்ளப்பட்ட குடியுரிமை தொடர்பான



14ஆவது திருத்தத்தத்தின்படி, அமெரிக்காவில் பிறக்கும் குழந்தைகள் அந்நாட்டின் குடியுரிமையைப் பெற்றவர்கள். அந்தக் குழந்தைகளின் பெற்றோர் அமெரிக்கராக இல்லாவிட்டாலும்கூட, அந்தக் குழந்தைக்கு குடியுரிமை உண்டு. அடிமைப்படுத்தப்பட்ட மக்களின் எதிர்காலம் குறித்து சட்ட ரீதியாக தெளிவுபடுத்தவேண்டிய கட்டாயம் எழுந்ததையடுத்து இந்தச் சட்டத்திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில், பிறப்புரிமை அடிப்படையிலான அமெரிக்க குடியுரிமை இரத்துசெய்யப்படுவதாக பதவியேற்ற முதல் நாளில் ஜனாதிபதி ட்ரம்ப் அதிரடியாக அறிவித்துள்ளார். அமெரிக்காவில் பிறக்கும் குழந்தையின் பெற்றோரில் யாரேனும் ஒருவர் நிரந்தர அமெரிக்க குடியுரிமை பெற்றிருந்தால் மட்டுமே அந்தக் குழந்தைக்கு அமெரிக்க குடியுரிமை வழங்கப்படுமென அவர் தனது உத்தரவில் தெரிவித்துள்ளார். ட்ரம்பின் இந்த உத்தரவு 30 நாட்களில் நடைமுறைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### புட்டின் பேச்சுக்கு வராவிட்டால் கூடுதல் பொருளாதாரத் தடை

மேலும், ரஷ்ய ஜனாதிபதி புட்டின் பேச்சுவார்த்தைக்கு வரவில்லையென்றால் பொருளாதாரத் தடை விதிக்கப்படுமென்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மேலும், ரஷ்யா - உக்ரைன் போர் குறித்து பேசியுள்ள ட்ரம்ப்,

"போர் ஒருபோதும் தொடங்கி இருக்கக் கூடாது. திறமையான ஜனாதிபதி இருந்திருந்தால் போர் நடந்திருக்காது. நான் ஜனாதிபதியாக இருந்திருந்தால் உக்ரைனில் ஒருபோதும் போர் நடந்திருக்காது.

நான் ஜனாதிபதியாக இருந்திருந்தால் ரஷ்யா போருக்கு சென்றிருக்காது. புட்டினுடன் எனக்கு மிக வலுவான புரிதல் இருந்தது. மக்களை அவமதித்த பைடனை புட்டின் அவமதித்தார்.

பைடனை எந்த நேரத்திலும் சந்திக்கத் தயார். இலட்சக்கணக்கான மக்கள் கொல்லப்படுகிறார்கள், இது ஒரு கொடூரமான சூழல். பெரும்பாலானோர் இராணுவ வீரர்களாக மாறிவிட்டார்கள். நகரங்கள் இடிந்த இடங்களாகக் காணப்படுகிறது.

உக்ரைனில் அறிவிக்கப்பட்டதைவிட அதிகளவிலான மக்கள் பலியாகியுள்ளனர். உண்மையான எண்ணிக்கையை வெளியிடாததற்கு உங்களை குறை சொல்லவில்லை, வெளியிட விரும்பாத அரசை குறை கூறுகிறேன்.

உக்ரைனுக்கு தொடர்ந்து ஆயுதம் அளிக்கப்படுமா என்பது குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகின்றது. புட்டினுடனான பேச்சுவார்த்தைக்குப் பிறகு அடுத்தகட்ட முடிவு எடுக்கப்படும்.


அமைதியை விரும்புவதாக உக்ரைன் ஜனாதிபதி என்னிடம் தெரிவித்தார். இரு தரப்பினரையும் எந்த நேரத்திலும் சந்திப்பேன். இலட்சக்கணக்கான மக்கள் கொல்லப்படுவதைத் தடுக்க விரைவில் முடிவு காண விரும்புகிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

### "திறமையாளர்களையே அமெரிக்கா வரவேற்கும்"

அத்தோடு திறமை வாய்ந்த மனிதர்கள் அமெரிக்காவில் குடியேறுவதை தான் விரும்புவதாகவும், இத்தகையவர்கள் அமெரிக்காவுக்குத் தேவை என்றும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். ஹெச்1-பி விசா விவகாரத்தை முன்வைத்து அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும், ஹெச்-1பி விசா திட்டம் குறித்து நான் நன்கு அறிவேன். நான் இந்தத் திட்டத்தைப் பயன்படுத்துகிறேன். மதுபானம் சார்ந்த நிபுணர்கள் மட்டுமல்ல, வெயிட்டர்களில்கூட சிறந்த நபர்களை நாம் பெற வேண்டும். திறமைவாய்ந்த மக்கள் உள்ளே வர வேண்டும். இப்போது அதைச் செய்வதன் மூலம், நாங்கள் வணிகங்களை விரிவுபடுத்துகிறோம். அது அனைவரையும் கவனித்துக்கொள்கிறது. நான் உண்மையில் உணருவது என்னவென்றால், உண்மையிலேயே திறமையான மக்கள், சிறந்த மனிதர்கள் நம் நாட்டுக்குள் வர அனுமதிக்க வேண்டும். ஹெச்-1பி திட்டத்தின் மூலம் நாங்கள் அதைச் செய்கிறோம்" - எனத் தெரிவித்துள்ளார்.

# தாய்வானை உலுக்கிய 6.4 ரிச்டர் நிடுக்கத்தில் சிக்கி 27 பேர் காயம்



தாய்வானில் 6.4 ரிச்டர் அளவில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் சிக்கி 27 பேர் காயமடைந்துள்ளனர்.

தாய்வானின் சியாயி மாவட்டத்துக்கு 38 கி.மீ. தென்கிழக்கில் 10 கி.மீ ஆழத்தில் நிலநடுக்கம் மையம் கொண்டிருந்ததாக அந்நாட்டு மத்திய வானிலை அமைப்பு தெரிவித்தது.

இந்த நிலநடுக்கத்தால் சியாயி மற்றும் தயினான் நகரங்களில் சில கட்டடங்கள் சேதமடைந்ததாக தகவல்கள் வெளியாகின.

# மகா கும்பமேளா: திரிவேணி சங்கமத்தில் புனித நீராடிய 9.24 கோடி பக்தர்கள்



திரிவேணி சங்கமத்தில் இதுவரை 9.24 கோடி பக்தர்கள் புனித நீராடியுள்ளனர்.

உத்தரப்பிரதேசத்தில் 144 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் மகா கும்பமேளா நிகழ்ச்சி கடந்த 13ஆம் திகதி தொடங்கியது. எதிர்வரும் பெப்ரவரி 26ஆம் திகதி வரை 45 நாட்கள் மகா கும்பமேளா நிகழ்ச்சி சிறப்பாக நடைபெறவுள்ளது.

இதற்காக 10 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1,800 ஹெக்டேயர் பரப்பளவில் வாகன நிறுத்த வசதிகள், 2,750 கண்காணிப்பு கெமராக்கள், 15 ஆயிரம் துப்புரவு பணியாளர்கள், 25 ஆயிரம் தொழிலாளர்கள், 24 மணிநேரமும் செயற்படும் கட்டுப்பாட்டு மையம் உள்ளிட்டவற்றை அரசு அமைத்துள்ளது.

இதுவரை சுமார் 9.24 கோடி பேர் கும்பமேளாவுக்கு வருகை தந்து திரிவேணி சங்கமத்தில் புனித நீராடியுள்ளனர். நேற்றுமுன்தினம் ஒரே நாளில் அதிகபட்சமாக 43.18 இலட்சம் பக்தர்கள் புனித நீராடியுள்ளனர். மகா கும்பமேளாவுக்கு இந்த வருடம் சுமார் 40 கோடி பக்தர்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

# துருக்கி ஹோட்டலில் பயங்கரத் தீ: 76 பேர் உயிரிழப்பு; 51 பேர் காயம்



துருக்கி ஹோட்டலொன்றில் ஏற்பட்ட பயங்கரத் தீ விபத்தில் சிக்கி 76 பேர் உயிரிழந்துள்ளதுடன் 51 பேர் காயமடைந்துள்ளனர்.



வடமேற்கு துருக்கியின் போலு மாகாணத்தில் மலை உச்சியில் 'கர்தல்காயா ரிசார்ட்' (Kartalkaya) என்ற மரக்கூரைகளால் செய்யப்பட்ட 12 மாடிகளைக்கொண்ட ஹோட்டல் மற்றும் விடுதி உள்ளது. சுற்றுலாப்பயணிகளுக்கு மிகவும் விருப்பமான இந்த ஹோட்டலில் 234இற்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் தங்கியிருந்துள்ளனர். இந்நிலையில், நேற்றுமுன்தினம் அதிகாலை இந்த ஹோட்டலின் உணவு தயாரிக்கும் பகுதியில் திடீரென ஏற்பட்ட தீ மளமளவெனப் பரவியது. இதனால் பீதியடைந்த சுற்றுலாப் பயணிகள் அறைகளிலிருந்து கீழே குதித்துத் தப்பிக்க முயன்றனர்.

தகவலறிந்து சம்பவ இடத்துக்கு வந்த தீயணைப்புக் குழுவினர் நீண்டநேர போராட்டத்துக்குப் பின்னர் கொளுந்து விட்டு எரிந்த தீயைக் கட்டுப்படுத்தி அணைத்தனர். இந்த தீ விபத்தில் சுற்றுலாப் பயணிகள் 76 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களில் இரண்டு பேர் அறையிலிருந்து கீழே குதித்தபோது உயிரிழந்ததாக அந்நாட்டுப் பொலிஸார் தெரிவித்தனர். மேலும் படுகாயமடைந்த 51 பேர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் ஒருவர் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடற்றொழில் அமைச்சர் – ரவிகரன் எம்.பி. சந்திப்பு

# வடபகுதி மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் எடுத்துரைப்பு; மகஜரும் கையளிப்பு!

(விஜயரத்தினம் சரவணன்)

கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் மற்றும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஆகியோருக்கிடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.



இச்சந்திப்பில் முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய வடபகுதி மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனால் கடற்றொழில் அமைச்சருக்கு எடுத்துரைக்கப்பட்டதுடன், கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்குமாறும் இதன்போது வலியுறுத்தப் பட்டுள்ளது.

அந்தவகையில் குறிப்பாக வடபகுதியில் இடம்பெறும் சட்டவிரோக கடற்றொழில் செயற்பாடுகளால் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறிய செயற்பாடுகளால் கடல் வளங்கள் அழிக்கப்படுதல் மற்றும் வடபகுதி மீனவர்களின் மீன்பிடி உபகரணங்கள் சேதமாக்கப்படுதல் உள்ளிட்ட பிரச்சினைகள் மிக முக்கியமாகச் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

எனவே, மீனவர்கள் எதிர்நோக்கும் இப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுக்குமாறும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கத்தவறின் மீனவ மக்கள் பாரிய போராட்டங்களில் ஈடுபடவேண்டிய நிலை ஏற்படுமெனவும் இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரனால் கடற்றொழில் அமைச்சரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்தில் காணப்படும் ஆளணிப் பற்றாக்குறைகளை நிவர்த்திசெய்து தருமாறும் இதன்போது பேசப்பட்டுள்ளதுடன், அதுதொடர்பான மகஜரும் பாராளுமன்ற உறுப்பினரால் கடற்றொழில் அமைச்சரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

மேலும் முல்லைத்தீவு கடற்றொழில் சங்கங்களின் சமாசத்தால் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரனிடம் கையளிக்கப்பட்ட கடற்றொழில் அமைச்சருக்கான மகஜர்களும் இதன்போது கடற்றொழில் அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.

இந்நிலையில் தம்மால் முன்வைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பிலும் கையளிக்கப்பட்ட மகஜர்கள் தொடர்பிலும் கவனஞ்செலுத்துவதாக கடற்றொழில் அமைச்சர் தெரிவித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். சர்வதேச விமான நிலைய விரிவாக்கல் நடவடிக்கை; ஆளுநருடன் கலந்துரையாடல்!



(பு.கஜிந்தன்)

பலாலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் விரிவாக்கல் நடவடிக்கைகள் குறித்து ஆராயும் கலந்துரையாடல் நேற்று முன்தினம் (21) செவ்வாய்க்கிழமை ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது. வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தினர் இக்கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் அடிப்படை கட்டுமானங்கள் மற்றும் வசதிகளை துரிதமாக மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். முதல்கட்டத்தில் இந்தப் பணிகளை முழுமைப்படுத்த எதிர்பார்க்கின்றோம். சர்வதேச விமான நிலையத்தின் ஓடுபாதை விரிவாக்கம் முன்னெடுப்பதற்கு 114 ஹெக்டேயர் நிலப்பரப்பு சுவீகரிக்கப்பட வேண்டியுள்ளது. கடலை நோக்கியதாக அந்த விஸ்தரிப்பு அமையும்.

யாழ்ப்பாணம் விமான நிலையத்தின் விரிவாக்கத்தின்போது இந்தப் பிராந்தியத்தைச் சேர்ந்தவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்கா இம்மாத இறுதியில் யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ளார். இதன்போது அபிவிருத்திக்கான நிதி மூலம் தொடர்பில் இறுதி செய்யலாம் என்று விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தினர் குறிப்பிட்டனர்.

ஆளுநர் இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில்,

காணிகளை சுவீகரிப்பதற்கு முன்னதாக 1986ஆம் ஆண்டு பலாலி விமான நிலையத்துக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட காணிகளுக்கு இன்னமும் இழப்பீடு வழங்கப்படவில்லை. தற்போதைய பெறுமதிக்கேற்ப அவர்களுக்கு இழப்பீடு முதல்கட்டமாக வழங்கிய பின்னரே தற்போது தேவைப்படும் மேலதிக காணி சுவீகரிப்பை ஆரம்பிக்கலாம் என்றார்.

உள்ளூர் விமான சேவைகளை விரிவுபடுத்துவது தொடர்பில் ஆராயப்பட்டது. கொழும்பு – யாழ்ப்பாணம், மட்டக்களப்பு – யாழ்ப்பாணம் சேவைகளை முன்னெடுப்பதற்கு, பயணிகளின் தேவைப்பாடு தொடர்பான துல்லியமான தகவல்களை வழங்குமாறு விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தினர் கோரிக்கை விடுத்தனர்.

தற்போது சேவையை முன்னெடுக்கும் இண்டிகோ விமான சேவை நிறுவனம் சென்னை – யாழ்ப்பாணம் சேவைக்கு மேலதிகமாக பெங்களூரு - யாழ்ப்பாணம் சேவையை முன்னெடுப்பது தொடர்பாகவும் ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச் சந்திப்பில் வடக்கு மாகாண பிரதம செயலர், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், தெல்லிப்பளை பிரதேச செயலர், இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பிராந்திய முகாமையாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# தொழிலாளரின் கோரிக்கைக்கமைவாகவே செயற்படுவேன்!

## இ.போ.ச. வடக்கு முகாமையாளர் தெரிவிப்பு



(பு.கஜிந்தன்)

எமது தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்கமைவாகவே நான் செயற்படுவேன். நடைமுறை பிரச்சினைகள் அவர்களுக்குத்தான் தெரியும் - என இலங்கை போக்குவரத்து சபையின் வட பிராந்திய பிரதான முகாமையாளர் கந்தசாமி கேதீசன் தெரிவித்துள்ளார்.

01.02.2025 இலிருந்து யாழ்ப்பாண நகரில் அமைக்கப்பட்ட நெடுந்தூர பஸ் நிலையத்திலிருந்து இலங்கை போக்குவரத்துச் சபையும் தனியாரும் இணைந்து நெடுந்தூர சேவைகளை ஆரம்பிப்பதற்கு இரு தரப்பினரும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயன் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இணக்கம் வெளியிட்டனரென வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் அறிவித்திருந்தது.

இவ்வாறு ஆளுநரின் செயலக அறிவிப்புக்கு பதில் வழங்கும் முகமாக, யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் (21) நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 17.01.2025 அன்று எமக்கு வடக்கு மாகாண ஆளுநரால் கூட்டத்துக்கான அழைப்பு விடுக்கப்பட்டது. நாங்களும் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டோம். அந்தக் கூட்டத்தில் இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவரின் கடிதத்துக்கமைய தூர சேவை பஸ்கள், புதிதாக அமைக்கப்பட்டுள்ள பஸ் நிலையத்திலிருந்து ஆரம்பிக்குமாறு கேட்கப்பட்டது. இலங்கை போக்குவரத்துச் சபைத் தலைவரின் அறிவுறுத்தலின்படிதான் நாங்கள் செயற்படுவோம் என்று நாங்கள் தெரிவித்தோம். குறித்த கூட்டத்தில் கதைக்கப்பட்ட முக்கிய விடயங்களைத் தவிர்த்து ஏனைய விடயங்க வெளிக்கொணரப்பட்டிருந்தன.


எமது தலைவரின் கடிதத்தில், எல்லா மாவட்டத்துக்குமான இணைந்த நேர அட்டவணையை தயாரித்து, எமது பஸ் நிலையத்திலிருந்து ஆரம்பித்து புதிதாகக் கட்டப்பட்டுள்ள பஸ் நிலையத்துக்குச் சென்று கடமையை முன்னெடுக்குமாறு தான் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தக் கடிதம் ஆளுநரிடம் இருக்கிறது.

இணைந்த நேர அட்டவணையொன்று முன்னாள் மாகாண அமைச்சர் டெனீஸ்வரனால் தயாரிக்கப்பட்டு கையொப்பமிட்ட நிலையில், அதே செயற்படுத்தப்படாமல் இருக்கின்றது. அதில் பிழை என்று கூறி கடந்த ஆட்சியிலும் நாங்கள் மாகாண சபைக்குச் சென்று அங்கு தயாரித்த இணைந்த நேர அட்டவணையும் செயற்படுத்தப்படாமல் இருக்கின்றது.

எமது தலைமைக் காரியாலய செயலாற்று முகாமையாளரின் ஒப்புதலின் அடிப்படையில் இணைந்த நேர அட்டவணை தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டும். அவ்வாறு நடைமுறைப்படுத்தும் போதும் தனியார் துறை தமது பஸ் நிலையத்திலிருந்தும் நாங்கள் எங்களது பஸ் நிலையத்திலிருந்தும்தான் சேவையைப் புரிவோம்.

ஆளுநரின் கூட்டத்தில் எங்களால் எடுக்கப்பட்ட முக்கிய தீர்மானங்களைத் தவிர்த்து, நீண்டகாலத் திட்டமாக புகையிரத நிலையத்தில் பஸ் நிலையம் கட்டித் தருவதாகப் பேசிக்கொண்டிருக்கின்றார்கள். அப்படி புகையிரத நிலையத்தில் பஸ் நிலையம் கட்டித் தந்தாலும் எமக்கும் தனியார் துறைக்கும் தனித்தனியாக பஸ் நிலையம் அமைத்துத் தர வேண்டும். எங்களது தொழிலாளரின் ஒத்துழைப்பு இல்லாமல் எங்கேயும் செயலாற்ற நாங்கள் தயாரில்லை - என்றார்.

# இரணைமடு குளத்தின் சகல வான்கதவுகளும் திறப்பு!



(பு.கஜிந்தன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்ட சீரற்ற காலநிலையால் மக்கள் இருப்பிடங்களுக்குள் வெள்ளநீர் உட்புகுந்துள்ளதுடன் உள்ளகப் போக்குவரத்துகளும் பாதிக்கப்பட்டுள்ளதோடு மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இரணைமடுகுளம் வான்பாய்ந்து வருவதுடன், குளத்தின் சகல வான்கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன.

கனகாம்பிகைக்குளம், கல்மடுக்குளம் உள்ளிட்ட நீர்ப்பாசனக் குளங்களும் வான்பாய்ந்து வருகின்றன. இதனால் வெளியேறும் வெள்ள நீரும் மக்கள் குடியிருப்புகள், உள்ளக வீதிகளைக் கடந்து செல்கின்றது.

வெள்ளம் வடிந்தோடும் நிலையில் கண்டாவளை, கோரக்கன் கட்டு, முரசுமோட்டை, ஊரியான் உள்ளிட்ட தாழ்நிலப்பகுதியிலுள்ள மக்களை அவதானமாகச் செயற்படுமாறு இடர் முகாமைத்துவப் பிரிவு அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை, குறித்த சீரற்ற வானிலையால் சரிந்து விழுந்த மற்றும் ஆபத்தான நிலையிலுள்ள மரங்களைப் அகற்றி போக்குவரத்தைச் சீர்செய்யும் பணியில் அரச மரக் கூட்டுத்தாபானத்தினர் ஈடுபட்டுள்ளதையும் அவதானிக்க முடிகின்றது.

## கள்ளு அருந்தியவர் திடீரென உயிரிழப்பு!

(பு.கஜிந்தன்)

இளவாலை தெற்கு பகுதியிலுள்ள கள்ளுத் தவறணையில் கடந்த திங்கட்கிழமை (20) கள்ளு அருந்தியவர் திடீரென உயிரிழந்துள்ளார்.

சங்குவேலி தெற்கு, மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த ஆறுமுகம் தங்கவேலு (வயது 64) என்பவரே இவ்வாறு உயிரிழந் துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

அந்த நபர் குறித்த தவறணையில் கள்ளை குடித்தவேளை அந்த இடத் திலேயே உயிரிழந்துள்ளார். இந்நிலையில் இளவாலை பொலிஸார் அவரது சடலத்தை மீட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

மரண விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபால சிங்கம் மேற்கொண்டார். மாரடைப்பு காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்றுப் பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.

# யாழ். பல்கலை பொறியியல் பீடத்தின் ‘the nail an engineers digest” இதழ் வெளியீடு!




(பு.கஜிந்தன்)

யாழ். பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் குடிசார் மற்றும் சுற்றாடல் சங்கத்தின் முயற்சியால் உருவான ‘the nail an engineers digest” ஆய்வு இதழ் வெளியீடு இன்று (23) இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று (22) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே ஏற்பாட்டுக் குழு குறித்த அறிவித்தலை வெளியிட்டது.

இது தொடர்பில் குறித்த குழு மேலும் தெரிவிக்கையில்,

2019இல் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தின் முயற்சியால் குறித்த ஆய்வு இதழ் வெளியிடப்பட ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால், அந்த முயற்சி கொவிட் தொற்றின் காரணமாக ஒத்திவைக்கப்பட்டது.

இதையடுத்து முதலாவது இதழ் கடந்த 2023 ஆம் ஆண்டு உலக விஞ்ஞானங்கள், திண்மக்கழிவு, தொழில்சார் முயற்சிகள் என பல்வேறு துறைசார் ஆய்வுகளை உள்ளடக்கி வெளியிடப்பட்டது.

இந்நிலையில், குறித்த இதழின் ஆக்கங்கள் தொடர்பில் பல்தரப்பினரது விமர்சனங்கள் ஆலோசனைகளுக்கமைய 3ஆவது இதழ் பாடசாலை மாணவர்களையும் உள்வாங்கி அவர்களது ஆக்கங்களையும் உள்ளடக்கிய வகையில் வரவுள்ளது.

குறிப்பாக, கணித எண் தொடர்பான கட்டுரைகள் புதிதாக பல்கலைக்குச் செல்லும் மாணவர்களுக்கான ஆலோசனைகள் அடங்கியதாக வலம் வரவுள்ளது.யாழ். பல்கலையில் இன்று (23) வெளியிடப்படவுள்ள இந்த இதழின் வெளியீட்டு நிகழ்வில் வடக்கின் ஆளுநர் வேதநாயகன் பிரதம அதிதியாகவும் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட பலர் சிறப்பு அதிதியாகவும் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடமராட்சி கிழக்கு தாளையடியில் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம்







(பு.கஜிந்தன்)

‘செழுமையான தேசம் அழகான வாழ்வு’ என்ற தூரநோக்கை அடையும் விதத்தில் ‘கிளீன் ஸ்ரீலங்கா’ செயற்றிட்டத்தில் நேற்றுக் (22) காலை வடமராட்சி கிழக்கு தாளையடி பிராந்தியத்தில் கடற்கரை பிரதேசங்கள் சுத்தம் செய்யும் நடவடிக்கைகள் இடம்பெற்றன.

இதனடிப்படையில், தாளையடி கடற்கரைப் பிரதேசத்தைச் சுற்றியுள்ள பகுதிகளை இலங்கை இராணுவத்தின் 52ஆவது படையணியுடன் இணைந்து பருத்தித்துறை பிரதேச சபை, வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம், மருதங்கேணி பிராந்திய பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், சமூர்த்திப் பயனாளிகள், கிராம அலுவலர்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், கடற்றொழிலாளர் சங்கங்கள், வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர்கள், கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் பிரதேச வாழ் பொதுமக்கள் மேற்கொண்டிருந்தனர்.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட இராணுவ படைத் தளபதி மேஜர் ஜெனரல் மாதவ யம்பத், கட்டைக்காடு, மிருசுவில், முகமாலை படை முகாமின் அதிகாரிகள், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் கு.பிரபாகரமூர்த்தி, வெற்றிலைக்கேணி கடற்படை முகாமின் பொறுப்பதிகாரி கிரிசாந்த ரணசிங்க, கட்டைக்காடு கப்பலேந்தி மாதா ஆலய பங்குத் தந்தை அ.அமல்ராஜ், முள்ளியான் வைத்தியசாலை வைத்திய அதிகாரி யோ.திவ்யா,பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## ICC U-19 Women's T20 World Cup - 2025

# சுப்பர் சிக்ஸ் சுற்றுக்கு நேரடியாக தகுதிபெறுமா இலங்கை?

## இந்தியாவுடனான ஆட்டம் இன்று






**(அகீல் சிஹாப்)**

மலேசியாவில் நடைபெற்றுவரும் ஐ.சி.சி. இளையோர் மகளிர் ரி20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் இலங்கை இளையோர் மகளிர் அணி தங்களது இறுதி லீக் ஆட்டத்தில் இன்று இந்திய இளையோர் மகளிர் அணியை எதிர்கொள்கிறது. இந்த ஆட்டத்தில் இலங்கை அணி வெற்றியீட்டினால் நேரடியாக அடுத்த சுப்பர் சிக்ஸ் சுற்றுக்கு தகுதிபெறும் வாய்ப்புகள் காணப்படுகின்றன.

16 அணிகளின் பங்கேற்புடன் இரண்டாவது தடவையாக நடைபெற்றுவரும் ஐ.சி.சி. இளையோர் (19 வயதுக்குட்பட்டோருக்கான) மகளிர் ரி20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் கடந்த சனிக்கிழமை மலேசியாவில் ஆரம்பமானது. இதில் குழு ஏ யில் இடம்பிடித்துள்ள இலங்கை அணி தங்களது முதல் ஆட்டத்தில் மலேசியாவை எதிர்கொண்டது. இந்த ஆட்டத்தில் இலங்கை அணி 139 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றியீட்டியது.

அடுத்து இரண்டாவது ஆட்டத்தில் மே.இ. தீவுகள் மகளிர் அணியை 81 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை அணி வீழ்த்தியது. இந்நிலையில் இலங்கை நேரப்படி இன்று பகல் 12.00 மணிக்கு ஆரம்பமாகும் இந்த ஆட்டத்தில் இலங்கை அணி வெற்றியீட்டினால் நேரடியாக சுப்பர் சிக்ஸ் சுற்றுக்கு தகுதிபெறும். எனினும் தோல்வியடைந்தால் ஏனைய அணிகளின் புள்ளிகளைப் பொறுத்து அடுத்த சுற்றுக்கான தகுதி தீர்மானிக்கப்படும்.

### மோசடியில் ஈடுபட்ட 03 கிராண்ட் மாஸ்டர்களுக்கு வாழ்நாள் தடை;

## மேலும் 38 பேருக்கு கடுமையான அபராதம்




சீனாவில் விளையாடப்படும் சீன செஸ் (சியாங்கி) போட்டிகளில் முறைகேட்டில் ஈடுபட்டதற்காக 41 செஸ் வீரர்களுக்கு சி.எக்ஸ்.ஏ. (சீன சியாங்கி அசோசியேஷன்) அபராதம் விதித்துள்ளது. இதில் 03 கிராண்ட் மாஸ்டர்களுக்கு வாழ்நாள் தடையும் 38 பேருக்கு கடுமையான அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

ஜாகோ ஜின்ஜின், வாங் யங், ஜெங்க் வெய்டோங் ஆகிய மூன்று கிராண்ட் மாஸ்டர்களுக்கு வாழ்நாள் தடை விதிக்கப்பட்டுள்ளதாக குளோபல் டைம்ஸ் தகவல் தெரிவித்துள்ளது. மேலும், இந்த 03 வீரர்களிடமிருந்த தொழில்நுட்ப பதக்கங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

மிதமான மோசடிகளில் ஈடுபட்ட 37 வீரர்கள் போட்டிகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்கள். 04 வீரர்களுக்கு கண்டனம் மட்டும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலஞ்சம் வாங்குதல், சூதாட்டத்தில் ஈடுபட்டதற்காக இந்த 41 சீன செஸ் வீரர்களுக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு நடைபெறுவது இது முதல்முறையல்ல. கடந்த செப்.2024இல் இலஞ்சம் வாங்குதல், சூதாட்டத்தில் ஈடுபட்டதற்காக பிரபல சீன செஸ் வீரர்களான வாங் டியானி, வாங் யூபேய் ஆகிய இருவருக்கு வாழ்நாள் தடைவிதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கை – ஆஸி. டெஸ்ட் தொடருக்கான டிக்கெட் விற்பனை ஆரம்பம்




**(அகீல் சிஹாப்)**

இலங்கை – ஆஸி. அணிகளுக்கிடையில் நடைபெறவுள்ள இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடருக்கான டிக்கெட் விற்பனை ஒன்லைன் மூலம் ஆரம்பமாகியுள்ளது. எனினும் எதிர்வரும் திங்கட்கிழமை (27) முதல் ரசிகர்கள் டிக்கெட்களை கவுண்டர்கள் மூலம் கொள்வனவு செய்ய முடியும் என இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

கொழும்பு வித்யா மாவத்தையில் அமைந்துள்ள கவுண்டரிலும் காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் அமைந்துள்ள கவுண்டரிலும் 27ஆம் திகதி காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை டிக்கெட்களை கொள்வனவு செய்யமுடியும். டிக்கெட்டின் ஆரம்ப விலையாக 500 ரூபாவும் அதிகபட்ச விலையாக 12,500 ரூபாவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

குறித்த டெஸ்ட் தொடர் எதிர்வரும் 29ஆம் திகதி காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமாகிறது. அடுத்து கொழும்பில் நடைபெறவுள்ள ஒருநாள் சர்வதேச தொடருக்கான டிக்கெட் விற்பனை பெப்ரவரி 07ஆம் திகதி ஆரம்பமாகும்.

## அரையிறுதியில் ஜோகோவிச்

**நடப்பு ஆஸி. ஓபன் டென்னிஸ் தொடரின் அரையிறுதி சுற்றுக்கு நட்சத்திர வீரர் நோவக் ஜோகோவிச் தகுதிபெற்றுள்ளார்.**

**ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் தொடரான அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் மெல்போர்னில் நடைபெற்று வருகிறது. விறுவிறுப்பான கட்டத்தை எட்டியுள்ள இந்த தொடரில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் காலிறுதி ஆட்டம் ஒன்றில் முன்னணி வீரர்களான நோவக் ஜோகோவிச் (செர்பியா) - கார்லஸ் அல்காரஸ் (ஸ்பெயின்) மோதினர்.**

**இந்த ஆட்டத்தின் முதல் செட்டை 6:4 என்ற புள்ளிக்கணக்கில் அல்காரஸ் கைப்பற்றினார். இதையடுத்து தனது அனுபவ ஆட்டத்தை வெளிப்படுத்திய ஜோகோவிச் ஆட்டத்தின் அடுத்த மூன்று செட்களை 6:4, 6:3, 6:4 என்ற புள்ளிக்கணக்கில் கைப்பற்றினார்.**

**இதன்மூலம் அல்காரஸை வீழ்த்திய ஜோகோவிச் அரையிறுதி சுற்றுக்கு முன்னேறி அசத்தினார். நாளை (24) நடைபெறும் அரையிறுதி ஆட்டத்தில் ஜோகோவிச், ஜெர்மனியின் அலெக்சாண்டர் ஸ்வேரெவ் உடன் மோத உள்ளார்.**



## அமானியன்ஸ் கிரிக்கெட் பியஸ்டாவின் சம்பியன் மகுடம் 2021 அணி வசம்





**(அரபாத் பஹுர்தீன்)**

மினுவாங்கொடை அல்-அமான் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர்களுக்கிடையில் அமானியன்ஸ் கிரிக்கெட் பியஸ்டா - 2025 தொடரின் சம்பியன் மகுடத்தை 2021ஆம் ஆண்டு சாதாரண தர அணி தனதாக்கியது.

நூற்றாண்டு கடந்த வரலாற்றைக் கொண்ட மினுவாங்கொடை, கல்லொலுவ அல்-அமான் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 2ஆவது பழைய மாணவர்களுக்கு இடையிலான அணிக்கு 11 வீரர்கள் கொண்ட அமானியன்ஸ் கிரிக்கெட் பியஸ்டா -2025 அண்மையில் அல்ஹாஜ் முனாஸ் மைதானத்தில் இடம்பெற்றிருந்தது.

இதில் 1986ஆம் ஆண்டு சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் முதல் 2021ஆம் ஆண்டு சாதாரண தரம் எழுதிய மாணவர்கள் வரை சுமார் 26 அணிகள் பங்கேற்றிருந்தன. இறுதிப்போட்டியில் 2005 மற்றும் 2021 ஆகிய இரு அணிகளும் பலப்பரீட்சை நடத்தின. இறுதியில் 10 ஓட்டங்களால் 2021ஆம் ஆண்டு அணி சம்பியன் மகுடத்தினை தனதாக்கியது. இத்தொடரின் சிறந்த வீரராக 2021ஆண்டு அணியின் தலைவரான அர்ஹம் தெரிவானார்.

மேலும் அல்-அமான் பாடசாலைக்கு 2005ஆம் ஆண்டு அணியினர் தேசிய தரத்திலான பெட்மிண்டன் மைதானத்தை அமைத்துக் கொடுப்பதாக பாடசாலை அதிபரிடம் உத்தரவாதமளித்தமை விசேட அம்சமாகும்.

## பாகிஸ்தானின் பெயரைக்கூட நிராகரிக்கும் இந்தியா







9ஆவது ஐ.சி.சி சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடர் அடுத்த மாதம் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் பாகிஸ்தான் மற்றும் டுபாயில் நடைபெறவுள்ள நிலையில், குறித்த தொடரில் பங்கேற்கும் இந்திய அணியின் ஜேர்சியில் தொடரை நடத்தும் பாகிஸ்தானின் பெயரைப் பொறிப்பதை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை நிராகரித்துள்ளது.

எட்டு அணிகள் பங்கேற்கும் குறித்த தொடர் அடுத்த மாதம் 19ஆம் திகதி முதல் மார்ச் 9ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. இத்தொடருக்கான ஆரம்ப விழாவை அடுத்த மாதம் 16 மற்றும் 17ஆம் திகதிகளில் பாகிஸ்தானில் நடத்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை திட்டமிட்டுள்ளது. ஆரம்ப விழாவில் அனைத்து அணிகளின் தலைவர்களும் பங்கேற்கவேண்டும் என்ற அடிப்படையில் இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மா அதில் பங்கேற்கவுள்ளார்.

இந்த நிலையில், இந்திய அணியின் ஜெர்சியில் தொடரை நடத்தும் பாகிஸ்தான் பெயரை அச்சிட பி.சி.சி.ஐ மறுத்ததாக கூறப்படுகிறது. இது தற்போது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இதுதொடர்பாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அதிகாரி ஒருவர் கூறுகையில், பி.சி.சி.ஐ. கிரிக்கெட்டில் அரசியலைக் கொண்டுவருகிறது. இது விளையாட்டுக்கு நல்லதல்ல. அவர்கள் பாகிஸ்தானுக்கு பயணம் செய்ய மறுத்துவிட்டனர்.

ஆரம்ப விழாவுக்கு ரோஹித்தை பாகிஸ்தானுக்கு அனுப்ப அவர்கள் விரும்பவில்லை. இப்போது அவர்கள் தங்கள் ஜெர்சியில் பாகிஸ்தானின் பெயரை அச்சிட விரும்பவில்லை என்று தகவல்கள் வந்துள்ளன. ஐ.சி.சி இதை அனுமதிக்காது, பாகிஸ்தானை ஆதரிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம், என்று தெரிவித்தார்.

இதேவேளை கடந்த 2023ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற ஐ.சி.சி உலகக்கிண்ண தொடரில் பாகிஸ்தான் அணி இந்தியாவுக்கு சென்று பங்கேற்றதுடன், இந்தியாவின் பெயரையும் தங்கள் ஜெர்சியில் பொறித்து விளையாடியமை குறிப்பிடத்தக்கது.

## பேருவளை கிரேட் ஸ்டார் விளையாட்டுக் கழகம் சம்பியன்




**(பேருவளை விசேட நிருபர், களுத்துறை மேலதிக நிருபர்)**

பேருவளை உதைபந்தாட்ட சங்கம் தலைவர் ரிஸ்வான் ஸாலி வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்திய உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி கடந்த சனிக்கிழமை களுத்துறை வேனன் பெர்னாண்டோ விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

பேருவளை கிரேட் ஸ்டார் உதைபந்தாட்ட கழகமும் தர்கா நகர் ரெட் ஸ்டார் உதைபந்தாட்ட கழகமும் இறுதிப் போட்டியில் மோதியதோடு, பேருவளை கிரேட் ஸ்டார் விளையாட்டுக் கழகம் 6:1 என்ற கோல் வீதத்தில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. பேருவளை உதைபந்தாட்ட சங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட 20 விளையாட்டு கழகங்கள் இச் சுற்றுப்போட்டியில் பங்கு பற்றியதுடன் இறுதிப் போட்டிக்கு மேற்படி இரு அணிகளும் தெரிவாகின.

இப்போட்டியில் சிறந்த ஆட்டக்காரராக முஹம்மத் ஸதாம் தெரிவானார். சிறந்த கோல் காப்பாளராக குமார என்ற வீரரும் தெரிவானார். இந்த இரு வீரர்களும் பேருவளை கிரேட் ஸ்டார் கழகத்தை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தலைவர் வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தப்பட்ட சுற்றுப் போட்டிக்கான முழுச் செலவையும் பேருவளை உதைபந்தாட்டச் சங்கத்தின் தலைவர் எம்.எஸ்.எம்.ரிஸ்வான் பொறுப்பேற்றிருந்தார்.

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளன தலைவர் எம்.ஜஸ்வர் உமர் பிரதம அதிதியாகவும் உப தலைவரும் களுத்துறை உதைபந்தாட்ட சங்கத் தலைவருமான டொக்டர் மனில் பெர்னாண்டோ கௌரவ அதிதியாக கலந்து கொண்டனர். களுத்துறை பொலிஸ் பயிற்சி கல்லூரி சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி கே.டி.சந்திரபால, களுத்துறை முன்னாள் நகரபிதா ஆமிர் நஸீர் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் பங்குபற்றினர்.

பேருவளை உதைபந்தாட்ட சங்க முன்னாள் தலைவரும் சுற்றுப்போட்டி ஏற்பாட்டுக் குழு தலைவருமான ஏ.ஆர்.எம். பதியூதீன், உப தலைவர் முஹம்மத் ஸனூபர், செயலாளர் எம்.எஸ்.எம். ஸினான், பொருளாளர் ஏ.ஜே.எம்.அக்பர், அவிசாவளை உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவர் உட்பட உறுப்பினர்கள், இதன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள 20 கழகங்களின் தலைவர்கள், செயலாளர்கள் மற்றும் உறுப்பினர்கள், பிரமுகர்கள், பெருமளவிலான ரசிகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## விளையாட்டுத் துளிகள்

இந்தியாவில் விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்கும் வீர, வீராங்கனைகளுக்கு வழங்கப்படும் உயரிய விருதான கேல் ரத்னா விருதை உலக செஸ் சம்பியனான தமிழகத்தை சேர்ந்த குகேஷ் பெற்றுக்கொண்டார். மேலும் மனு பாக்கர், ஹர்மன்பிரீத் சிங் மற்றும் பிரவீன்குமார் ஆகியோருக்கும் கேல் ரத்னா விருது வழங்கப்பட்டது.

★★★★★★★★★★★★★★★★★

மூன்றாவது மகளிர் ப்ரீமியர் லீக் தொடர் அடுத்த மாதம் இந்தியாவில் ஆரம்பமாகவுள்ள நிலையில், முழங்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக ஆர்.சி.பி. மகளிர் அணியிலிருந்து ஆஸி. அணியின் முன்னணி வீராங்கனை சோபி மோலினக்ஸ் விலகியுள்ளார். அவருக்குப் பதிலாக இங்கிலாந்து வீராங்கனை சார்லி டீன் 30 இலட்சம் அடிப்படை விலையில் அணியில் இடம்பிடித்துள்ளார்.

★★★★★★★★★★★★★★★★★

ஆஸி. ஓபன் காலிறுதியில் ஸ்பெயினின் பவுலா படோசா 7:5, 6:4 என்ற நேர்செட் கணக்கில் மூன்றாம் நிலை வீராங்கனையான கோகோ காஃப்பை வீழ்த்தி தனது வாழ்க்கையில் முதல் முறையாக ஒரு கிராண்ட்ஸ்லாம் போட்டியில் அரையிறுதிக்கு தகுதிபெற்றார். இந்த தோல்வியுடன் அமெரிக்க வீராங்கனையான கோகோ காஃப்பின் முதல் ஆஸி. ஓபன் பட்டத்துக்கான கனவு கலைந்தது.

★★★★★★★★★★★★★★★★★

இந்தியா - இங்கிலாந்து இடையிலான 2ஆவது ரி20 நாளை மறுதினம் (25) சென்னை சேப்பாக்கத்தில் நடைபெறும் நிலையில், போட்டியைக் காண வரும் ரசிகர்கள் மெட்ரோ ரயிலில் போட்டிக்கான டிக்கெட்டை மட்டும் காண்பித்து இலவசமாக பயணிக்கலாம் என தமிழ்நாடு கிரிக்கெட் சங்கம் அறிவித்துள்ளது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7